க்டோபர் 21-டிசம்பர், 1998.
லை ரூ. 12.

www.padippakam.com

# கவிதாசரண்

## மாற்றீடு— ஓர் உரையாடல்

படிப்பகம்

www.padippakam.com

## சன்னதம்

என்னைத் துணியுரித்து
எல்லா உவர் மண்ணும்
வெள்ளாவி வைத்து
வெளுத்துச் சலிக்கட்டும்

என்னுடைய கையிருப்பில்
என்னிருப்பில் உன் உறவைப்
பின்னப் படுத்தாமல்
போற்றி வளர்த்திடத்தான்

நட்பென்னும் பேரால்
நமைச்சலுறும் ஞாபகத்தில்
ஒப்புக்கிருந் துதிரும்
ஒப்பனையை விட்டொழித்து

உந்தன் நிழல்முகத்தை
ஊடுருவிப் புன்னகைக்கும்
சொந்தப் பகையாய்உன்
சேமிப்பில் வந்தமர்ந்தேன்.

படிப்பகம்

www.padippakam.com

# ஜெயமோகன் பரிந்துரை

சென்னையில் 'சுத்தமாக' அச்சிட்டுத் தரும் ஒரு ஆப்செட் அச்சகத்தில் 'தலித்' சிற்றிதழ் அச்சுக் குக் கொடுக்கப்பட்டு, அச்சிடத் தொடங்கிவிட்ட நிலையில் 'தலித்' என்னும் இதழ்ப்பெயரைப் பார்த் ததும் "அட, இது படிச்ச பறப்பசங்க நடத்துற பத்திரிகையா?" என்ற தனிப்பட்ட எள்ளல் விமர் சனத்தோடு, வேறிடத்தில் அச்சிட்டுக்கொள்ளும் படி திருப்பிக் கொடுக்கப்பட்டது.

குற்றாலத்தில் செப்டம்பர் 30 – அக்டோபர் 1இல் 'பதிவுகள்' நடத்திய கருத்தரங்கக் கலந்துரையா டலில் இந்த அநியாயம் பேச்சினூடாகச் சுட்டப் பட்டபோது, ஜெயமோகன் "அவர்கள் சரோஜா தேவி புத்தகங்கள் அச்சிடும் அச்சுக்கூடங்களை அணுகலாமே," என்று பரிந்துரைத்திருக்கிறார்.

எழுத்தாளன் எனும் தகுதிக்கு மேலாகவும் இயங் கும் இந்தக் கழிசடைத்தனமான பரிந்துரையாள ருக்குத் தலித் படைப்பாளர்களும் பதிப்பாளர்க ளும் நன்றி சொல்வார்களா, அல்லது நரகலாக்கு வார்களா என்பதைக் காலம் சொல்லட்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# அறிவுமதியின்

## நீங்களும் நாங்களும்

நீங்கள் சாதிக்கப்
பிறந்தவர்கள்
அதனால்தான்
செஞ்சிலுவைச்
சங்கத்திடம்
சிங்களவர்களின்
பிணங்களை
ஒப்படைக்கிறீர்கள்!

நாங்கள் சாதிக்குப்
பிறந்தவர்கள்
அதனால்தான்
சாதிச்
சங்கத்திடம்
தமிழர்களின்
பிணங்களை
ஒப்படைக்கிறோம்!

அங்கே
இன உணர்வில்
கவிஞர்கள்
எல்லாம்
இளைஞர்களைப்
புலிகளாக்கிப்
போராடத்
தூண்டுகிறீர்கள்

இங்கே
கவியரசுகள்
எல்லாம்
இளைஞர்களைச்
சிங்கங்களாக்கிச்
சீண்டி
விடுகிறோம்!

அதனால்தான்
மறத்தமிழர்கள் அங்கே
மரபுப்
போரில்
எதிரிகளை
மாய்த்துக்கொண்டிருக்க

இங்கே நாங்கள்
சாதிப்
போரில்
எங்களின்
சகோதரர்களையே
சாய்த்துக்கொண்டிருக்கிறோம்.

தன்மானம்
விமானம்
ஏற
அங்கே
முருகன் மீது
மலர்மாரி
பொழிவது
உங்கள்
படையப்பா!
அவமானம்
கப்பல்
ஏற
முருகன் கையில்
சூலம்
கொடுத்தது
எங்கள்
படையப்பா!

அதனால்தான்
நீங்கள்

www.padippakam.com



கிளி பிடித்த
புலிகள்
ஆக...

நாங்கள்
கிலி பிடித்த
பூனைகள்
ஆகிறோம்!

அங்கே
திலீபன் வழியில்
மூச்சு
அடங்க
புயல்
பிறக்கிறது!

இங்கே
எந்தன் வழியில்
ஜாண்
ஏற
முழம்
சறுக்குகிறது!

அதனால்தான்
நீங்கள்
துரோகிகளுக்கு
நடுவே
பிரபாகரனுக்குத்
தோள் கொடுக்க...

நாங்கள்
நல்லவர்களுக்கு
நடுவே
வரதராசப்பெருமாளுக்கு
வால் பிடிக்கிறோம்.

---

ஆசிரியர் குறிப்பு: கவிதை அதன் நோக்கத்தை எட்டுவதில் வெற்றி
கொள்கிறது. அது கணக்கில் எடுத்துக்கொள்ளும் காலம் வெற்றிக்
குத் துணை செய்கிறது. ஆனால் கணக்கெடுக்காது போன காலம்
பற்றி நாம் அறிந்த உண்மை வேறு. அதாவது, சாதி பார்ப்பதில்
ஈழத்தமிழர்கள் இந்தியத் தமிழர்களுக்கு ஆக மூத்தவர்கள். ஈழத்
தவர்களின் சாதி வைராக்கியத்தோடு ஒப்பிடுகையில் இந்தியத் தமி
ழர்கள் வெறும் வீம்புக்குச் சாதி பார்க்கிறவர்கள் என்றே எளிமைப்
படுத்தத் தோன்றுகிறது. உலகில் எங்கேயும் காணக்கிடைக்காத
அதிசய அதிர்ச்சியாய் ஈழத்தில்தான் இஸ்லாத்தைத் தழுவிய தமி
ழர்கள் தாங்கள் தமிழர்கள் இல்லை என்று இன அடையாளத்தை
விட்டொழித்துவிட்டார்கள். அருந்ததியர்கள் தங்களைச் சிங்கவர்
களாக மொழிமாற்றம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதற்கு யார்
பொறுப்பேற்பது? உலகெங்கும் பரந்துகிடக்கும் புலம்பெயர் ஈழத்
தமிழர்கள் இத்தனை உயிரிழப்பு, பொருளிழப்பு, அல்லாட்டத்திற்
குப் பின்னும் சாதியொன்றே தங்கள் வாழ்க்கைக்கான சத்தியம்
என்பதுபோலத் தங்கள் கொடிக் கயிறுகளில் சாதித் துணிகளைத்
தான் உலர்த்திக்கொண்டிருக்கிறார்கள். வெள்ளைக்காரன் கறுப்
புத் தோலை இழிவாகக் கருதுவது ஒருவகையில் நல்லதாயிற்று.
அல்லாமல் போனால் ஈழத் தமிழர்களின் கறுப்பு மேலாண்மை
உலகம் முழுதையும் சாதி ஆச்சாரத்திற்கு மாற்றிவிடக் கூடும்.

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# மாற்றாள்

கவிதாசரண்

அரசினர் கலைக்கல்லூரி அது. தமிழ்நாடு அரசினருடையதுதான். 6 ஹெக்டேர் அளவு பரப்பு கொண்டது. சுற்றுச்சுவர் இல்லை. சுற்றுவேலியாகப் போட்ட ஈயப்பூச்சுக் கம்பிகளும் சிமெண்ட் குச்சிகளும் இற்றுச் சிதைந்து கிடக்கின்றன. ஆடு மாடு கோழிகளுடன் ஊர்ப் பன்றிகளும் மிகுதியாகப் பார்வையிட வருவதுண்டு. வேலிப் புறங்கள் புதர்களாய் மண்டிக் கிடக்கின்றன.

தார்ச்சாலையை ஒட்டி, முகப்பு மதிலோடு கூடிய கல்லூரி நுழைவாயிலின் ஆடம்பரத்தில் மயங்கி, மதிப்பெண் வீழ்ச்சியால் இடங்கிடைக்காத இரண்டொரு நகர்ப்புறத்து மாணவர்களும் இங்கு வந்து சேர்ந்து தங்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றனர். கல்லூரியில் காற்றுக்குப் பஞ்சமில்லை.

கல்லூரி வளாகத்தில் கட்டிடங்களைவிட மரங்கள் அதிகம். யாவும் ஓங்கிப் படர்ந்த நிழல்மரங்கள். தாகூர் மாதிரி ஒரு தாடிக்காரனிடம் கிடைத்தால் (நோபல் பரிசுப் பணத்தோடுதான்) இதையொரு குட்டி சாந்திநிகேதனின் தன்னிறைவுப்பல்கலைக் கழகமாக மாற்றியிருப்பான். கோரைக் கிழங்குக்காக மண்ணைக் கிளறிப்போடும் பன்றிக் கூட்டத்தைக் கையுயர்த்தித் துரத்த வக்கில்லாத கல்லூரி வளாகத்தில் நின்றுகொண்டு இது போன்ற நெட்டைக் கனவுகளில் மிதப்பது கெட்ட பழக்கம் தான். இந்த உலகில் தின்னச் சோறில்லாமல், செத்த பிறகு வரப்போகும் சிவலோகப் பதவிக்குக் கனவு காணும் பாட்டன் பரம்பரைச் சாபம் இது.

ஆசிரியர்கள் ஒதுங்குமிடத்திற்கருகே உள்ள ஒரு மரத்தடியில் நான்கு பேராசிரியர்கள் கூடி நின்று

படிப்பகம்

www.padippakam.com



பேசிக் கொண்டிருந்தனர். நால்வருமே பன்னிரண்டாயிரத்துக்கு மேல் சம்பளம் வாங்கும் முது நிலைப் பேராசிரியர்கள். சென்னைப் புறநகர் கல்லூரியாதலால் நகரப் படிகளனைத்தும் அவர்களுக்குண்டு.

அவர்களில் முன்வழுக்கையும் மதர்த்த உடம்பும் கண்களுமாக நிற்பவர் பெயர் அறிவரசு. அவரை நோக்கி வந்த கடைநிலை ஊழியர் ஒருவர் தன் கையிலிருந்த வருகைப் பதிவேட்டை விரித்துக் கொடுத்துக் கையெழுத்துப் போட்டுத் தரும்படி கேட்டார். அறிவரசு கடந்த இரு வாரங்களுக்கான கையெழுத்தைப் போட்டுக்கொண்டிருக்கும் போதே, “சீக்கிரமா சார். அவுங்க ரெண்டு பேர் கிட்ட வேற வாங்கணும். பிரின்சிபால் அவசரப் படுத்துறாரு,” என்றார். அறிவரசு அந்த ஊழியரை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு விறுவிறுவெனப்போட்டுக்கொடுத்தனுப்பினார். சாதாரணமாக வாரம் ஒருதடவை வந்து, கல்லூரியை ஒரு வட்டமடித்துவிட்டுக் கையெழுத்து போட்டுவிட்டுச் செல்வார். இந்த முறை வேலை மும்முரத்தில் இரு வாரமாய் நீண்டுவிட்டது. இன்று சம்பள நாள் என்பதால் கல்லூரிக்கு வரும்படியாயிற்று.

அறிவரசு இப்போது அந்த வட்டாரத்தில் பெரும் புள்ளி. அவருக்குச் சொந்தமாக ஒரு எருமைப் பண்ணையே உள்ளது. 30 எருமைகள்; கொஞ்சம் பசுக்கள். செழித்த பால் வியாபாரம். கல்லூரியில் சேர்ந்த புதிதில் இரண்டு எருமைகளோடு தொடங்கியது. இப்போது பல்கிப் பெருகிவிட்டது. இதோடு ஒரு கோழிப் பண்ணையும் வைத்துள்ளார். இந்த மாதத்தில் அவர் புதிதாகத் தொடங்கும் அரிசி அரவை ஆலை வேலையில் தீவிரமாக ஈடுபட்டதுதான் இரண்டு வாரங்களாக வரமுடியாமல் போனதற்கான காரணம்.

அறிவரசு கல்லூரி வராததால் பாடங்கள் ஒன்றும் நடக்காமல் போய்விடவில்லை. அந்த அளவுக்கு

படிப்பகம்

www.padippakam.com



அவர் பொறுப்பற்றவர் அல்ல. தனக்குப் பதிலாக தன்னைவிடக் கூடுதலான பட்டம் பெற்றிருந்தும் வேலை கிடைக்காமல் நொந்து கிடந்த ஒரு இளை ஞரைப் பிடித்துப் பாடம் நடத்த அமர்த்தியுள்ளார்; சம்பந்தப்பட்ட அனைவரது ஆசீர்வாதத்தோடும் தான். அந்த இளைஞருக்குத் தனது சம்பளத்திலி ருந்து மாதம் ரூபாய் ஐநூறு கொடுத்துவிடுகிறார். தன் சொந்தத் தொழில்களை வளர்த்துப் பராம ரிக்க வேண்டி இந்த நட்டத்தை அவர் பெருந்தன் மையோடு ஏற்க வேண்டியதாயிறு. அவரை இங் கிருந்து மாற்ற நடந்த முயற்சிகளை முறியடிப்ப தில் வேறு செலவுகள் இருக்கத்தான் செய்தன. அப்படியும் இருமுறை மாற்றல் பெற்றுச் செல்ல நேர்ந்தது. எல்லாவற்றையும் எப்படியோ நல்ல விதமாமகச் சமாளித்து வெற்றிகரமான முதலாளி யாகிவிட்டார்: இவரோடு ஒத்துப்போகாத ஒரு முதல்வரும் இவரைக் காட்டிக்கொடுத்து உண்மை விளம்பியாகச் செயல்பட முனைந்த ஒரு கத்துக் குட்டிப் பேராசிரியரும் தீராத நட்டங்களுக்குள்ளா வதற்கென்று இவர் பட்ட சிரமங்களும், போட்ட முதலீடுகளும்தான் இவருக்கு வெற்றிகரமான புற வாழ்வுக்கான அரசியல் சூட்சுமங்களைக் கற்றுத் தந்தன என்றால் மிகையாகாது.)

இவரைப் பார்த்து இன்னும் இரண்டுபேர் இப்போ துதான் தங்கள் தொழிலைத் 'தத்தக்காபித்தக்கா' என்று தொடங்கியிருக்கிறார்கள். தொடங்கிய பிறகுதான் அவர்களுக்குத் தெரிந்தது அறிவரசு எத்தனை அசகாய சூரப்புலி என்று. இப்போது அவர்கள் அறிவரசுவின் பரம சீடர்கள். இவரின் ஆசியும் வழிகாட்டலும்தான் அவர்கள் ஏறிச் செல் லும் படிகள். அவர்களுக்குத் தெரியாது பேராசி ரிய முதலாளியின் சிரமங்களைப் பகிர்ந்துகொள்வ தற்கு அவர் போட்ட திட்டம். பாடம் நடத்து வதை எந்தப் படித்தவனும் செய்துவிட முடியும். முதலாளியாவது அப்படியல்ல. தன்னைப்போன்ற மூளை உள்ளவர்களால்தான் முடியும் என்பது அவர் கருத்து.

படிப்பகம்

www.padippakam.com



இடையில் அவர் நியமித்த 'பையன்' மூலம் சிறு கர்வபங்கம் அடையும்படியான சந்தர்ப்பம் நேர்ந்தது கொஞ்சம் அவலமாய்த்தான் உணரப்பட்டது. 'பையன்' மெய்யாகவே கெட்டிக்காரராய் இருந்தார். இளமை வேறு. பாடம் நடத்துவதிலும் மாணவர்களைத் தங்கள் திறமையில் நம்பிக்கை கொள்ளச் செய்வதிலும் மிகுந்த உத்வேகமுள்ளவராயிருந்தது அறிவரசுவுக்குத் தொடக்க முதலே கொஞ்சம் கவலை தரும் விஷயங்களாகவே இருந்தன. அதற்கேற்றாற்போலவே இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு மாணவன் மிகுந்த துணிவோடு முன்வந்து, "இனிமேல் எருமைப் பண்ணை எங்களுக்கு வர வேண்டாம் சார். இவரே இருக்கட்டும். இவருக்கான சம்பளத்தை வேண்டுமானாலும் நாங்களே வசூலித்துக்கொடுத்துவிடுகிறோம்" என்று முதல்வரிடம் சொன்னதாகக் கேள்விப்பட்டு மிகவும் கொதித்துப் போனார். முதல்வர்தான் அவரைச் சமாதானப்படுத்தி அவர் தொழிலைக் கவனிக்கும்படி அறிவுறுத்தியதாகக் கேள்வி. இதுபோன்றதொரு சூழலில் ஒரு நல்ல முதல்வர் இந்த அளவுக்குத்தான் மாணவர்களுக்கு உதவ முடியும். ஆனால் அறிவரசுவைப் பொறுத்தவரை அந்த சம்பவத்திற்குப் பிறகு 'பையனுக்கு'த் தரும் ஐநூறு வெறும் தண்டச்செலவாகப் பட்டுவிட்டது.

மரத்தடியில் நின்று பேராசிரியர்கள் பேசிக்கொண்டிருந்த போது கழிவறைகளைச் சுத்தம் செய்துவிட்டு ஒரு பெண் வெளிப்பட்டாள். அவளைத் தொடர்ந்து ஆதிலட்சுமியும் வந்தார். ஆதிலட்சுமிதான் அரசுப் பணியாளர். குறைந்தது இரு பணியாளர்களுக்கான வேலை இருப்பினும் அரசு ஒருவருக்குத்தான் அனுமதி வழங்கும். அந்த ஒருவர் தன் வீட்டு உறுப்பினர்களையும் சேர்த்துக் கொண்டு அந்த வேலையைச் செய்யும்படியாய் இருக்கும்.

ஆதிலட்சுமிக்குப் பிள்ளைகுட்டி இல்லை. புருஷ

படிப்பகம்

www.padippakam.com



னும் இல்லை. அதோடு அவர் நோயாளியும்கூட. கோடை விடுமுறையில் படுத்த படுக்கையாக மருத்துவ மனையில் கிடந்தார். கல்லூரி திறக்க ஒரு வாரம் இருக்கும் போதுதான் ஓரளவு குணமாகி வேலைக்குத் திரும்பினார். இருந்தும் அவரால் முடியவில்லை. உடம்பு ஒத்துழைக்க மறுக்கிறது. ஆகவே தனக்கு கூடமாட ஒத்தாசை செய்வதற்கு அந்தப் பெண்ணை நியமித்துக்கொண்டுவிட்டார். தனக்கு உதவியாக இருந்து, தன் பணியைப் பாது காத்துக்கொள்ள வகை செய்யும் அப்பெண்ணுக்கு தன் சம்பளத்திலிருந்து ஐநூறு ரூபாயை மனமுவந்து கொடுத்து விடுகிறார். இந்தப் பரிவர்த்தனையை முதன்முதலாகக் கேள்விப்பட்ட போது அந்தப் 'பையன்' மிகுந்த பாதிப்புக்குள்ளானார். ஆதிலட்சுமியை அன்று பார்த்த போது சிரித்துக் கொண்டே, "இப்ப நானும் இந்தப் பொண்ணும் ஒரு ஜாதி, இல்லியாம்மா?" என்றார். கேள்வியை முடிக்கும்போது கண்கள் தளும்பிக்கொண்டு நின்றன. ஆதிலட்சுமி கனிவாக, "ஒங்களுக்குன்னு ஒரு வேல கெடைக்கும். அப்ப சாதி மாறலாம் சார், கவலைய வுடுங்க" என்றார். 'பையனுக்கு' அது ஆசீர்வாதமாகவே பட்டது.

அந்தப் பெண்ணோடு ஆதிலட்சுமியும் தினமும் கூட வருவார். வேலையைப் பகிர்ந்துகொள்வார்: அந்தப் பெண் வயசு முறுக்கில் வேகுவேகென்று இரண்டாள் வேலையையும் ஒன்றாகப் பார்ப்பாள். அவள் வேண்டாம் என்று சொன்னால்கூட ஆதிலட்சுமி தன்னால் முடிந்ததைச் செய்துகொண்டு தான் இருந்தார்.

ஆதிலட்சுமியைப் பார்த்ததும் பேராசிரியர்களில் ஒருவர்- அவர் ஒரு காலத்தில் மார்க்சியம் பேசிக் கொண்டிருந்தவர், இப்போது சாதிச் சங்கத்தின் அறிவாளியாகிவிட்ட பிறகும் அடையாளத்துக்காக இன்னமும் மார்க்சியராகவே அறியப்படுகிறவர்- வெகு தோரணையோடு, "என்ன ஆதி, வர வர

படிப்பகம்

www.padippakam.com



உன் வேலையே சரி இல்ல. உன்னோட அசிஸ்டெண்டும் ஒழுங்கா அலம்பறதில்ல,'' என்றார்.

ஒரு அசட்டுச் சிரிப்போடு பேசாமல் போகிறவருக்கு இன்று சுருக்கென்று கோபம் வந்துவிட்டது.

''எங்க மாதிரி ஏழை, பாழைங்களோட பேசணும்னா எதுனாச்சும் கொறை சொன்னாத்தான் பேச வருமா சார்?''

''வேறெப்படி பேசணும்? நலம் விசாரிக்கணுமா?''

''சீ... சீ... அந்தக் கெட்ட பழக்கம் ஒங்களுக்கு வேணாம் சார். நீங்க பேராசிரியருங்க. ஒங்களுக்குப் பேள்றதுக்கும் மோள்றதுக்கும் தெரிஞ்சா போதும். ஒடனே ஒரு கொவளத் தண்ணி ஊத்த மாட்டிங்களே. கக்கூஸ் கழுவுறவ காணாத நாகரிகமா நீங்க காப்பாத்துறது? அடப் போங்க சார்.''

ஒன்று சொல்ல மறந்து போயிற்று: ஆதிலட்சுமி கையெழுத்துப் போட்டுச் சம்பளம் வாங்குகிறவர்; அதுவும் சரளமாக.

''என்ன நீ, இவ்வளவு திமிராப் பேசுறே?''

''திமிருப் பேச்செல்லாம் எங்களுக்குத் தெரியாது. தெரிஞ்சதெல்லாம் இந்தத் தொடப்பக் கட்டதான். தோட்டிச்சின்னா அவ்ளோ எளக்காரம்.''

''தோட்டிச்சிக்கு என்னா கொழுப்பு பாத்தியா?'' என்று கள்ளக் குரலில் கடுகடுத்தார் அறிவரசு. அப்போது ஏவலர் ஒருவர் வந்து அவரை முதல்வர் அழைப்பதாகச் சொன்னதும் அங்கிருந்து அகன்றார். அவர் சென்றதும் சற்றுத் தெம்பு வந்தவராக அந்த 'மார்க்சியர்' ''மாத்தாள் போட்டுச் சம்பளம் வாங்குற உன்னை வேலையில வச்சிக்கிறதே தப்பு. அதுல வாய்க் கொழுப்பு வேற,'' என்றார்.

''அதோ போறாரே, அவருகிட்ட சொல்லணும் சார் அதை. நீங்கள்லாம் ஆம்பளங்க இல்ல? அது என்னா சார், நீங்க என்ன குத்தம் பண்ணாலும் அது நாயமாப் பூடுது. நாங்க என்னதான் நாயத்துக்குக் கட்டுப்பட்டு நடந்தாலும் அது குத்தமாப் பூடுது? ஒங்களச் சொல்லிக் குத்தமில்ல சார். பேள்றதுக்கு ஒரு சாதி, அதைக் கழுவுறதுக்கு ஒரு சாதின்னு பிரிச்சானே ஒரு பேமானி– அவன அடிக்கணும் சார் ஜோட்டால, ஆமா,'' என்றவரை விட்டகன்றனர் அந்தப் பேராசிரியர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# எந்த வழி நந்தன் வழி?

**ஒரு திறந்த மடல்**

அன்புமிக்க பேராசிரியர் சுப வீரபாண்டியன் அவர்களுக்கு

வணக்கம். தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் உங்கள் 'நந்தன் வழி' இதழைத் தெருமுனைக் கடையில் காத்திருந்து வாங்கிப் படிக்கும் பாமர வாசகன் நான். ஒவ்வொரு இதழிலும் நிறையச் செய்திகளை வகுத்தும் தொகுத்தும், சிலவற்றை வகைதொகையில்லாமல் அள்ளித் தருவதும், சந்தையில் செலாவணியாகக்கூடிய எந்த மூஞ்சியையும் ஏதாவதொரு அட்டகாசமான முகப்புரையோடு அட்டையில் ஒட்டி, கண்ணைக் கிறக்கும்படி வண்ணத்தில் அடித்து வெளிவிடுவதும் என்போன்றவர்களின் பாமரப் பசிக்குப் விருந்தாகத்தான் இனிக்கிறது. இதற்காக உங்களுக்கு நன்றிகூடச் சொல்லிக் கொள்ளலாம், தப்பில்லை.

இவ்வளவையும் மீறி சில நுண்தருணங்களில் புறக்கணித்து விட முடியாதபடி உங்களின் சில இதழ்கள் என் சிற்றறிவில் சில வேண்டாத வெளிச்சங்களைப் பாய்ச்சி சிணுக்குவதுண்டு. நந்தனுக்குச் சொந்தக்காரனாயிருக்கும் ஆசையில் நான் அவற்றைப் புறக்கணித்தே பெருமைப்பட்டுக் கொள்வேன். ஆனால், செப்டம்பர் 1-15, 1998 இதழ் என்னைப் பாதித்த வலியில், சொல்ல வேண்டிய தருணத்தில் மௌனம் காப்பது அழகல்ல என்னும் உந்துதலோடு இதை எழுதும்படியாயிற்று. எழுதுவதற்கான காரணத்தில் ஒன்றாக, இதழினுடைய சகல வெளிப்பாட்டின் 'உள்மொழி'க்கும் பொறுப்பேற்கிறவர் நீங்கள் என்னும் நம்பிக்கை நானாக வளர்த்துக் கொண்டதாகும்.

அந்த இதழில் சென்னையில் நடந்த ஒரு விமர்சனக் கூட்டத்தில் கவிஞர்களிடையே ஏற்பட்ட கருத்து மோதல் பற்றிய செய்திக்கு உங்கள் 'நந்தன் வழி' கொடுத்திருக்கிறதே 'நாய்ச் சண்டை' என்று- செருப்பாலடிக்கிற மாதிரியான ஒரு தலைப்பு. மாலன்களும், 'சோ' ராமசாமிகளும், ரமேஷ்களும், சுஜாதாக்களும் தங்கள் எதிரிகளை (வேறு யாரை? 'தமிழ்

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்' என்று கூவிக்கூவியே குலைநோய் வந்து சாகப்போகும் 'நந்தன் வழி வாசகர்களைப் போன்றவர்களைத்தான் ) சீண்டிப் பார்க்க இதை அரிய தலைப்பாகப் பயன்படுத்தியிருந்தால் அது நியாயமாயிருக்கும். ஆனால் நந்தன் பயன் படுத்தியிருக்கிறது. ஒரு செய்திக்கு ஒரு தலைப்பு வேண்டும் என்பது மட்டும்தான் இதில் நந்தன் தந்த முன்னுரிமையா? அல்லது செருப்பாலடிப்பதுதான் நோக்கமா? ஆம் எனில் யாரை? அந்தக் கூட்டத்தில் தன் மொழியும், இனமும், இனமானமும், இளைய தமிழர்களின் கவிதைப் புத்தெழுச்சியும் புறநடையாளர்களால் கொச்சைப் படுத்தப் படுவதாகக் கொதித்துக் குரல் கொடுத்தவர்- தன்மானத்தையும் தமிழ் மானத்தையும் கனவுத் தொழிலில் பணயப் பொருளாக வைக்க மறுத்து, இன்னமும் தன் இளைய தம்பிகளை ஊக்கிவிட்டபடி, ஏணிக்கடியிலேயே எளிய அண்ணனாக நின்றுகொண்டிருக்கும் அறிவுமதி என்னும் அவையறிந்த கவிஞன்தான்.

அந்தக் கூட்டத்தில் ஞானக்கூத்தனின் நாய்க் கவிதை பற்றிய கேள்வியும் கூத்தனின் ஊனக் குறும்பும் மொத்த நிகழ்வின் ஊடே முளைத்த ஒரு பகுதிதான். அறிவுமதி அதன் பொருட்டுப் பேசவில்லை. ஒருவேளை கூத்தனின் குறும்பு அவரின் சினத்தைக் கிளர்த்த நெய் வார்த்திருக்கலாம், அவ்வளவே. நிலைமை இவ்வாறிருக்க ஒட்டுமொத்த நிகழ்வுக்கும் நாய்ச் சண்டை என்று பெயரிட்டு, கூடவே ஞானக்கூத்தனின் நாய்க் கவிதையையும் தேடிப் பிடித்து வெளியிட்டு, நந்தன் செய்துள்ள சேவைக்குப் பொருள் என்ன? திசை என்ன? ஒரு சந்தைப் பத்திரிகை இவ்விதமாகச் செய்தால் அதை வெறும் உப்புப் பெறாத விஷயமாக ஒதுக்கி விடலாம். அப்படியே ஒருவன் சுட்டிக் காட்டினாலும், வெறும் 'சாரி' சொன்னால் போதும்; இல்லை, சொல்லாமலும் போகும். ஆனால், 'உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஏடு' செய்தால், அது இதழின் உள்முகக் கோளாறுக்கான விஷயமாகி விடாதா?

ஞானக்கூத்தனின் நாய் ஒரு திருட்டுக் கருவில் பிறந்த தெருப் பொறுக்கி நாய் என்பதை ம. அரங்கநாதன் அவர் முகத்துக்கு நேராகவும் தன் 'முன்றில்' இதழ் வாயிலாகவும் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே போட்டு உடைத்துவிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கவிதை குறித்து ஞானக்கூத்தனைத் 'தமிழ்த் துவேஷி' என மறைந்த பிரமிள் ஆங்காரப்பட்டார். மா. அரங்கநாதன் குறிப்பிடுவது போல 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' இதழில் வெளியான மூலக் கருவில் 'நடு நிசியில் திடீரென நாய் ஒன்று குரைக்க, தொடர்ந்து பக்கத்துத் தெரு நாய் ஒன்றும் ஊர் எல்லையி லுள்ள நாயும் குரைக்கும். இதில் முதலில் குரைத்த நாய்க்கு மட்டுமே குரைத்த காரணம் தெரியும்' என்று வருகிறது. இதைப் போலி செய்த ஞானக்கூத்தன், காரணம் கூறத் தெரியாத தன் கடைசி நாயைப் பிடித்துக்கொண்டு வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க முயல்கிறார். மூலத்தில் உள்ள கவிதை அழகு, நுரைக்க நுரைக்கப் புனைந்த கூத்தனின் நாயில் அடிபட்டுப் போகிறது என்று மா.அ. சொல்வது யா ருக்கும் விளங்கக்கூடியதாய் இருந்தாலும், அக்கவிதைக்குள் கூத்தன் வளர்த்தெடுக்கும் வேதாந்தம்தான் அவர் யார் என் பதை நமக்கறிவிக்கும் சான்றாதாரமாகும்.

பார்ப்பனிய எச்சிற்களைக்கு நாய்கள் சண்டையிடுவ தென்பது நடைமுறையில் மீமிகையாகும். காரணம் அந்தக் களை நன்றாக நக்கித் துடைக்கப்பட்ட பின்பே வெளிவாச லுக்கு வரும். அதில் மென்று துப்பிய முருங்கை சக்கைகூட எருமை அரைத்த கட்டைத் துடைப்பம் மாதிரி நாயும் முகர மறுக்கும்படியாய் உலர்ந்து கிடக்கும். 'ஐயன் உண்டு கெட் டான்; துலுக்கன் உடுத்திக் கெட்டான்' என்பது பழமொழி. பார்ப்பான் என்றால் புதிதாக வந்தவன் என்பதாகும். ஆக வே, இந்திர வணக்கம் ஒன்றையே கற்றுத் தெற்கு நோக்கி வந்த பார்ப்பனர்கள், தென்னாடுடைய சிவனைத் தங்கள் பார்ப்பானாக ஏற்று வணங்கி ஏற்றம் பெற்றிருக்கக் கூடும். ஆக, தென்னாடுடைய சிவன் ஊழி முடிவில் மிச்சமில்லாத மிச்சமான தன் எச்சிற்களையை எறிய, கால பைரவர்கள் அதன்மேல்சண்டையிட்டுக்கொள்கிறார்கள் என்பதாக ஞானக் கூத்தன் சொல்ல வந்தாராயிருக்கும். இது மாதிரியான வேத விசாரங்களைப் பார்ப்பனர்கள்தாம் யாருக்கும் விட்டுக்கொடுப் பதில்லையே. ஆகவே, கால பைரவராகக் கற்பிக்கப் படும் ஞானக்கூத்தனின் நாய் ஐயத்திற்கிடமில்லாமல் பார்ப்பனக் குறியீடே. இது விளங்காமல் அவர் தமிழர்களை அவமானப் படுத்திவிட்டதாகக் கவிதாபாரதியும், வீரசந்தானமும், ஏன் செத்துப்போன பிரமிளும்கூடக் குற்றம் சாட்டுவது நியாயம்

படிப்பகம்

www.padippakam.com



இல்லை என்பது கூத்தனின் வாதம் என்றால் நாம் ஏற்றுக் கொண்டால் போயிற்று. சந்தர்ப்பவாதம் எப்போதும் இப்ப டித்தான் பல்லிளிக்கும். இதை சகித்தல் என்பது நம் சத்தம் கொச்சைப்படுவதைச் சகித்தலாகும்.

1970களின் தொடக்கத்தில் ஞனக்கூத்தன் எழுதிய கவிதை இது.

சூத்திரர் தெருக்களென்று
சொல்லுவார்
ஏற்றாற்போல்
மாட்டுத் தோல் உலரும்
ஆடுகோழிகள் நாய்கள் வாழும்
... — ...
... ... ...
மல்லிகை முல்லை
சாணி மூட்டைகள்
முருங்கைக் காய்கள்
விற்கிற பழக்கமுள்ள
வீடுகள் ஆங்காங்குண்டு
தனிப்பட வரமாட்டாமல்
கடவுளின் துணையில்
அங்கே
வருகிறான் பார்ப்பான்
சாமி
வலம் வர
வேதம் பாடி.

இந்தக் கவிதையிலுள்ள நடைமுறை அபத்தம் நம்மை அறைகிறது. சூத்திரர் தெருக்கள் என்று சொல்லி, உண்மை யில் பறைத் தெருவைக் காட்டுகிறார். சான்றாக மாட்டுத் தோல் உலரும் என்கிறார். பறைத் தெருவுக்குப் பார்ப்பான் வருவதில்லை. ஆகவே சாமியும் வருவதில்லை. பார்ப்பானை விட்டால் சாமிக்குப் பார்வையுமில்லை; பாதையுமில்லை. ஞா னக்கூத்தனோ, கடவுளின் துணையில் பார்ப்பான் வேதம்பாடி வருகிறான் என்கிறார். இக்கவிதை மூலம் 'தீண்டத்தகாதவர் கள் சூத்திரர்கள் பட்டிலில் இல்லை: அவர்கள் இருப்பிடத்துக்கு பார்ப்பானும் சாமியும் போவதில்லை' என்னும் ஊரறிந்த உண் மைகளை இவர் பொய்யாகப் புரட்டிப் போடுவதைக் காண நமக்கு 'சொரக்'கென்றுதான் இருக்கிறது. அவர் என்ன உள் நோக்கத்தோடு இந்தப் புரட்டைச் செய்திருப்பினும், எழுபது களில் ஞானக்கூத்தன் தன் பின்மண்டையில் 'பார்ப்பனத்தன் முனைப்பு' என்னும் கட்டி ஒடுங்கியிருக்கிறது என்ற பிரக்ஞை யற்று, செறிவான தமிழில், செழுமையான சிந்தனையுடன், மர பான கவியோசை சார்ந்தும், அதை உடைத்தும், நவநவமான புதுக் கவிதைகள் எழுதி, புதுக் கவிதை முன்னோடிகளில் தவிர்க்க முடியாத ஒருவராகத் திகழ்ந்தவர்தான். அது ஒரு

படிப்பகம்

www.padippakam.com



காலம். மனிதர்களுக்கான நியாயம் நினைவிருந்த காலம். ஒருசில அரிய விதிவிலக்குகளைத் தவிர, உரிய நேத்தில் பார்ப் பனர்கள் தங்கள் யதாஸ்தானத்திற்கு வந்துவிடுகிறார்கள். ஞானக்கூத்தன் கொஞ்சம் ஆடம்பரமாக வந்தடைகிறார். இப் பொழுது அவர் ஒரு 'முழுமையான' பார்ப்பனர். அவர் பின் மண்டையில் ஒளிந்திருந்த 'பார்ப்பனத் தன்முனைப்பு' என் னும் கட்டி விளைந்து, அவரது துரியத்திலும் துரியாதீதத் திலும் ஒடிஓடி ஒளிரும் நாகமணியாகிவிட்டது. இப்போது பார்ப்பன மேன்மையும் வடமொழி தரிசனமும் பேசவே அவர் முயன்று கற்ற தமிழ் உதவுகிறது. இவர் மட்டுமில்லை. இவ ரையொத்த அயலவர்கள் இதைச் செய்வதற்கென்றே தமிழில் எழுதுகிறவர்களாய் மாறியுள்ளனர். தமிழின் பேரால் பரிசு களும் பெறுகின்றனர். தமிழியல் சாரத்தின் உள்ளூற்றத்தை தன் உந்திச் சுழியில் கொண்டு பிறந்தவனுக்கு அவர்கள் எப் போதும் அந்நியமானவர்கள்; தந்திரமானவர்கள். 'தூ..தூ..' வென்று துப்பிக்கொண்டே தமிழைச் சப்புக் கொட்டித் தின் பவர்கள். தின்பது தமிழமுதம் என்று சொல்லிக்கொள்ள அவர் களுக்கு அப்படியொரு கூச்சம். அதுதான் அவர்களுக்கு வேதம் சொல்லும் பாடம்.

ஞானக்கூத்தனை முழுமையான பார்ப்பனர் என்றேன். இதை ஒன்றும் கற்பனையாய்ச் சொல்லவில்லை. ஒருசமயம் சாகித்திய அகாதமியின் சிறுகதை வாசிப்பில் ராஜேந்திரசோ ழன் பழைய கதையொன்றை வாசித்தார். நகரத்திற்கு வந்த கிராமத்தான் ஒருவன் காலையில் மலம் கழிக்க இடம் தேடி அலையும் அவஸ்தை பற்றியது அந்தக் கதை. வாசிப்பின் முடி வில் ஞானக்கூத்தன் எழுந்து, கதை பற்றிப் பேசும் சாக்கில் மனித உடலில் இடுப்புக்கு மேல் உள்ள பகுதி மேன்மையானது என்றும், கீழ் உள்ள பகுதி இழிவானது என்றும், அதைப் போலவே உடலின் வலப் பக்கம் சிறப்பானது என்றும், இடப் பக்கம் விழுப்பானது என்றும் சொல்லிக் கொண்டு போனார். இதன் வேறு வகையான அர்த்தம், பிரம்மனின் முகத்தில் பிறந்த பார்ப்பான் மேலானவன், தாளில் பிறந்த சூத்திரன் கீழானவன் என்பதாகும். ஈசன் தன் உடலில், தான் வலப் பக்கமாக இருந்துகொண்டு, தன் பெண்டாட்டியை இடப்பாகத் தில் ஒட்ட வைத்துக்கொண்டான். அதாவது, உடலின் வலப் பக்கத்தை ஆக்கிரமித்துள்ள ஆண் மேன்மையானவன்; இடப்

படிப்பகம்

www.padippakam.com



பக்கம் தள்ளப்பட்ட பெண் கீழானவள் என்று பொருள். இவர் தான் இன்றைய ஞானக்கூத்தன். இவர் மாத்திரமல்ல. ஏறக் குறைய இலக்கிய நவீனத்துவம் பேசும் எல்லாப் பார்ப்பனர்களுமே இப்படித்தான் பழுத்திருக்கிறார்கள்; பழுத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களைப் பற்றிப் பேசவே வேண்டாம்.

"நாய் என்ற சொல்லை எங்களை அவமானப் படுத்தவே பயன் படுத்தினீர்கள்", என்று சொன்னவர்களை அந்தச் சொல்லைக் கொண்டே சீண்டிச் சீண்டிக் காயப்படுத்தி குரூரமாக மகிழ்ந்தவர் மீது— நான் இதைப் பாவனையாகத்தான் சொல்கிறேன்; அப்படிச் சொல்ல நேர்ந்ததற்காக வெட்கத்தோடு மன்னிப்பும் கோருகிறேன் — உமிழ்நீர்ப் பிரயோகம் செய்து, 'இது உடலின் மேலான பகுதியில் ஊறிய நீர். உங்கள் நம்பிக்கையின்படி கங்கை நீருக்கிணையானது. ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று சொல்லிப் பாருங்கள். 'அநாகரிகம்' என்று ஆத்திரப்படுவார். அதைவிட அநாகரிகமானது அவர் வார்த்தைக் குறும்பு. நாகரிகம் அவர்களுக்குத் தேவையின் தீர்வு. நமக்கது வாழ்க்கையின் தேர்வு.

தமிழ்ச் சுரணையை மீட்டெடுக்கும் தணல் மொட்டுகள் இவை. நந்தன் இவற்றை 'நாய்ச்சண்டை' என்ற விளம்பரப் பலகையின் கீழ் கூறுகட்டி விற்றுவிடலாம்தானா?

இது தருணம். எனக்கொரு கேள்வி இருக்கிறது. அது எனக்கு முக்கியமாகப்படுகிறது. அதனினும் நந்தனுக்கு நாலு திசையளவில் முக்கியம் என்பதும் நிச்சயமாகப் படுகிறது. எத்தனை காலத்துக்குத் தமிழ் விழிப்பை ஒட்டு மொத்தப் பாமரத்தனத்திலேயே பசி மரத்துப் போகும்படி பதப்படுத்திச் சாகடிப்பது?

என் கேள்வி இதுதான்: உண்மையில் எந்த வழி நந்தன் வழி? இக்கேள்வி பிறந்ததற்கான தடயங்களைக் கண்டடைவது அப்படியொன்றும் கடினமல்ல என்றாலும், நானே இரண்டொரு சான்றுகளைத் தந்துவிடுவது சரியாயிருக்கும்.

இதழ் தொடங்கிய காலத்திலேயே திரைப்படத்துறையினர் சண்டையில் நந்தன்வழி பாரதிராஜா தலைமையிலான படைப்பாளர் பிரிவை ஆதரித்தது இது நியாயத்தின் பாற்பட்ட நிலைப்பாடாகலாமோ. உலக நுகர்பொருள் கலாச்சாரத்தின் முதல் கோட்பாடே தொழிலாளர்களை நியாயம் கற்பிக்கப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



உதிரிகளாக்குவதுதான் எனில், நாம் அதை வரவேற்கத்தான் வேண்டும், இல்லையா?

ஒருமுறை கோவையில் டீக்கடைகளில் தலித்துகளுக்குத் தனிக்குவளை நிலவுவது பற்றிய நேர்காணல் ஒன்று நந்தனில் வந்தது. ஒரு டீக்கடைக்காரர் 'அந்தப் பயல்களை (அருந்ததியர்களை)க் குளிச்சிட்டு வரச்சொல்லுங்க. நாங்க டீ தர்றோம்' என்னும் போக்கில் சொல்கிறார். அதாவது அருந்ததியர்களின் அழுக்கு நாற்றத்தை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லையாம். நந்தன் அதைப் பதிந்துவிட்டு, அதற்கு மேலதிகக் கேள்வியோ, அபிப்பிராயமோ முன்வைப்பதைத் தவிர்த்துவிடுகிறது. 'ஐயா டீக்கடைக்காரரே, இந்த அழுக்குப்பேர்வழிகளின் பெண்டாட்டிமார்களை வல்லடியாக அபகரித்துச்சென்று அனுபவிக்கிறார்களே. அந்தப் பெண்கள் நாறமாட்டாகர்ளா? அவர்களின் மூத்திரத் துடைகள் சந்தனமாய் மணக்குமா, அல்லது சர்க்கரையாய் இனிக்குமா?' என்றோ, அல்லது இதையொத்ததாகவோ ஒரு கேள்வி எப்போதும் அங்கே மிச்சமாக இருந்துகொண்டிருக்கிறது. என்னுள் யார் இருக்கிறான் என்பதற்கேற்ப இக்கேள்வி கேட்பதோ தவிர்ப்பதோ நிகழ்கிறது. சமத்துவம் வேட்கும் இதழாசிரியனாக இக்கேள்வியை நான் கேட்கவே செய்வேன். நந்தனுக்குள் குந்தியிருக்கும் மனிதன் யார்?

கோவை குண்டு வெடிப்புக்கு முன்னர், காவலர் செல்வராஜ் கொலையுண்ட கையோடு முஸ்லீம் சமுதாயம் கொட்டிக் கவிழ்த்துச் சிதறடிக்கப்படுகிறது. 19 இஸ்லாமிய இளைஞர்கள் கொடுங் கோரமாகக் கொல்லப்படுகிறார்கள். நந்தனில் தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் ஹைதர் அலியின் நேர்காணல் நெஞ்சை அறுக்கிறது. அந்த இதழில் டிசம்பர் 6இல் நடந்த இரயில் குண்டு வெடிப்பைக் கண்டித்துக் 'கண்ணீர்க் கேள்விகள்' என்னும் தலையங்கம் வருகிறது. தேவையான கோபத்தின் வெளிப்பாடு. அதே சமயம் அதற்கு இணையாக வைத்தேனும் அந்தக் கோரக் கொலைகளைப் பற்றிய நந்தனின் சீற்றமும் பதற்றமும் பதிவாகவில்லை. எப்போதும் தகவல் தருவதென்பது வேறு. நம் தகைமையைப் பதிவதென்பதுவேறு. "கையில் வெடிகுண்டு கிடைத்துவிட்டது என்பதற்காக கண்டவர்கள் மீது எல்லாம் வீசிவிடுவதுதான் போராட்டமா? மனதில் கைவைத்துச் சொல்லுங்கள். போராட்டக்காரர்கள் என்றால் உங்கள் எதிரி யார்?

படிப்பகம்

www.padippakam.com



உங்கள் இலக்கு எது? என்று முடிவு செய்துவிட்டு செயல் படுங்கள். அதற்கான விளைவை எதிர்கொள்ளத் தயாராகுங் கள்'' என்று நியாயமான கேள்விகளை வாரி வீசுகிறது நந்தன். இந்திய சுதந்திரப் பொன்விழா ஆண்டில் நம் தேசப் பற்றைக் கெட்டியான கேள்விகளால் அர்ப்பணிக்க வேண்டியதுதான். ஆனால் இதே கேள்விகளைத்தான் இங்குள்ள 'சோ' விலிருந்து தமிழினப் பகைவர்கள் அத்தனைபேரும் நம் ஈழப் புலிகளைப் பார்த்தும் கேட்கின்றனர். நியாயம்தான் என்று நாம் அங் கீகரிக்கலாமா? ஆங்கில ஆட்சியில் கொலைக் குற்றவாளிக ளாகவும் தேசத் துரோகிகளாகவும் கொன்றொழிக்கப்பட்டவர் கள் யாவரும் விடுதலை பெற்ற இந்தியாவில் நம் தியாகச் சுடர் மணிகளாய் ஒளிர்கிறார்கள். எந்த மதத்தையும் தன் சொந்த மொழியில் ஏற்பவனே அடையாளம் தொலைக்காதவன் என் பதுணர்ந்து, மத மொழிக்கும் மதக் கலாச்சாரத்திற்கும் தன் னைத் தத்தம் செய்து தன் தமிழ் அடையாளத்தை இழக்காத வரை— சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத ஜோதியில் கலந்து சுவடற்றுப் போகாத வரை— இந்து பயங்கரவாதிகளால் குற்றப் பரம்பரையாக முத்திரை குத்தப்பட்டு, தம் சொந்த மண்ணி லேயே அந்நியர்களாய் நசுக்கப்படுவதை எதிர்த்து, தமது சமூக சுதந்திரத்தை மீட்டெடுத்துவிடும்போது, இந்தத் 'தீவிரவாதி கள்'கூடத் தியாகச் செம்மல்களாகத் திகழக் கூடும்தான். குண்டு வைப்பதும் கொலைகள் புரிவதும் மனித மாண்புகளுக் கெதிரான ஈனச் செயல் என்பது அடக்குகிறவனுக்கும் அடக் கப் படுகிறவனுக்குமான இருவழி நியாயமாக மட்டுமே செல்லு படியாகும்.

சென்ற நவம்பர் முதல் நாள் நடந்த சான்றோர் பேரவை விழாவில் கிராமீயக் கலைகளை அல்லது தமிழர் பண்பாட்டுக் கலைகளை வளர்க்கும் போர்வையில் தஞ்சை தப்பாட்டக் கலைஞர்கள் மேடையை இரண்டுபடுத்தினார்கள். அவர்கள் கீழிறங்கியதும் மணிமுடி தரித்த மூவேந்தர் வெட்டுருவங்கள் இழுத்து வரப்பட்டு மேடையில் கொலு வைக்கப்பட்டன. சான் றோர் பேரவை என்றில்லை, தமிழகத்திலுள்ள எல்லாத் தமிழ் அமைப்புகளுமே, தமிழினத்தை வாள், கேடயம், அரியணை, மணிமகுடம், செங்கோல், தீ கனலும் விழிகள், வீரவசனங்கள் சகிதமாகத்தான் மீட்டெடுக்கத் தீர்மானித்து, முக்கிமுக்கி முனைகின்றன என்று படுகிறது. அதேசமயம் பறையடிக்

படிப்பகம்

www.padippakam.com



கும், தாழ்த்தப்பட்டோர் முதலாக எல்லா விளிம்புநிலை மக்களும் அவரவர் இடத்தில் இருப்பர். அவர்கள் இடநகர்வு பெற்றுவிடாமல் இருக்க, ஒரு நவீன முயற்சியாக, இதுவரை அவர்களின் இளிவரலுக்கென்றே ஒதுக்கப்பட்ட குலத்தொழில்கள் யாவும் இனிமேல் அவர்களது பண்பாட்டுச் சின்னங்களாகப் பேசப்படும். நந்தன் இதற்கொன்றும் விதிவிலக்கில்லைதானே?

எஸ்.வி. ராஜதுரை – வ. கீதா இருவரும் பெரிதும் முயன்று 'பெரியார்: சுயமரியாதை சமதர்மம்' என்றோர் அரிய, பெரிய நூலை எழுதியுள்ளனர். அந்நூலில், ஆசிரியர்களின் போக்கில் அதிசயிக்கும்படியானதொரு நுண் தளமாற்றமே நிகழ்ந்துள்ளது. அதாவது, பெரியாரை அவர்கள் வெகுதீவிரமாக ஆய்ந்த வகையில், தங்கள் விமர்சனத் தளத்தை சற்றேறக்குறைய தரிசனத் தளத்திற்கு வெகு நெருக்கமாக நகர்த்திச் சென்றுள்ளனர். இப்படிப்பட்டதொரு நூலை, முறையாகப் பார்த்தால் திராவிடர் கழகத்தைத் தின்றுகொண்டிருக்கிற கி. வீரமணி அவர்கள், ஆசிரியர்களிடமிருந்து விலை கொடுத்து வாங்கி, மலிவுப் பதிப்பு போட்டு, தமிழகமெங்கும் பரப்பியிருக்க வேண்டும். ஆனால் அவர் செய்ததோ, ஒரு முனைவர் பட்டம் சுமப்பவரை விட்டு அந்நூல் பற்றிப் பெரியார் நிறுவிய 'விடுதலை' இதழிலேயே மூன்று நாட்கள் தொடர்ந்து ஒரு கொச்சைத்தனமான விமர்சனத்தை எழுதி வெளியிட்டார். இந்தக் கொடுமையைக் கண்டித்து நாங்கள் நால்வர் பெயரில் ஒரு அறிக்கை எழுதி நந்தனுக்கு அனுப்பினோம் வெளியிடக்கோரி. ஆயின பதினைந்து மாதங்கள். வெளிவரவில்லை. இனி வரும் என்பதற்கு ஒருமுகாந்திரமும் இல்லை. இதன்பொருள் என்ன?

நந்தனுக்கும் தன் வணிக நலன்கள் முக்கியம். யதாஸ்தானம் முக்கியம். புரவலர் புனைவுகளோடு கூடிய தமிழின அக்கறை, சமூகநீதிப் பேச்சு, சங்கீதக் கச்சேரி யாவும் தன் நீண்ட 'கோட்'டுப் பொத்தான்களில் சொருகிக் கொள்ளக் கிடைத்த ரோஜா மொக்குகள்.

அப்புறம் என்ன?

இராம.கோபாலன் சொல்கிறார்: நம்மிடையே எத்தனை ஜாதிகள் இருந்தால் என்ன, நாம் எல்லோரும் இந்துக்கள் என்று.

நாமும்தான் சொல்கிறோம்: நாம் எல்லோரும் தமிழர்கள் என்று.

படிப்பகம்

www.padippakam.com



இரண்டுக்கும் அப்படியென்ன வேறுபாடு என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

அன்புடன்,
**கவிதாசரண்**

குறிப்பு: இந்தக் கடிதம் 22-9-98இல் 'நந்தன் வழி'க்கு அனுப்பப்பட்டது. 27-9-98இல் சுபவீ என்னைத் தொடர்பு கொண்டார். 'விடுதலை' விமர்சனத்தைக் கண்டித்து நால்வர் கொடுத்த அறிக்கை, வீரமணிக்கு எஸ். வி. ஆர். எழுதிய கடிதத்திற்குப் பதில் வரும்வரை காத்திருப்பதற்காகத் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மீண்டும் இதுவரை அவர் மேசைக்கு வரவில்லை என்பதால் வெளியிடும் பேச்சு எழவில்லை என்றும் சொன்னார். 'அறிக்கையே வேண்டாம். பெரியாருக்குச் செய்யும் மரியாதையாக 'விடுதலை' செயல் பற்றி அவரே ஒரு கட்டுரையோ தலையங்கமேகூட எழுதியிருக்கலாமே' என்று சொல்வது அதிகப்பிரசங்கித்தனமாகி விடும் என்றெண்ணி, ஒன்றும் சொல்லாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டேன். பின்னர் சான்றோர் பேரவை நிகழ்வு பற்றி நான் சொல்ல முயல்வதென்ன என்று கேட்டார். சொன்னேன். "சான்றோர் பேரவை நிகழ்ச்சியில் என் உழைப்பு இருந்தாலும் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல," என்றார். நானும் அறிந்ததுதான்.

"ஐயா, உங்க கடிதத்த நந்தன்ல வெளியிடுறது பற்றி எனக்கொன்னும் தயக்கமில்ல. ஆனா இடம் இல்ல," என்றார்.

"சரி."

"கடிதம் முழுதும் ரொம்ப குத்தலும் கிண்டலுமா எழுதியிருக்கீங்க. நான் பத்திரிகை நடத்தத் தெரியாத, லாயக்கில்லாத பாமரன்னு சொல்ல வர்றீங்க."

"என்ன இப்படிச் சொல்றீங்க. நான் நினைச்சுக்கூடப் பார்க்காததை சொல்றீங்க. அபாண்டம்."

"நீங்க பாமர வாசகன்னு சொல்லிக்கிறீங்க. அதுக்கு என்னங்க ஐயா அர்த்தம்? நீங்க பாமரனா? என்னைப் பாமரன்னு சொல்லிக் காட்டுறது உங்க நோக்கம். அப்படியே வச்சுக்கங்க."

"என்னங்க இது. நீங்களா அப்படி கற்பிச்சுக்கிட்டா நான் என்ன செய்ய முடியும்? அவையடக்கம்னு சொல்வாங்களே, அது மாதிரி எனக்கு நானே சொல்லிக்கிட்ட வார்த்தையை உங்களைச் சுட்டறதா எப்படி எடுத்துக்கிறீங்கன்னு எனக்கு விளங்கல. சொல்லப்போனா அரசியலுக்கு நான் பாமரன்தாங்க. சூட்கேஸ் அரசியல், கோணிப் பை அரசியல்லாம் வந்தாச்சு. இதுல நமக்கென்ன

படிப்பகம்

www.padippakam.com



விளங்குது. சில நுண்தளங்கள்ல நந்தன் எச்சரிக்கையா இருக்க கணுங்கிற அக்கறையில எழுதப்பட்ட ஒரு கடிதத்தை உங்களைப் புண்படுத்தத்தான் எழுதப்பட்டதுன்னு நினைச்சா, அது நியாயமே இல்ல. அதுவும் பாமரன்கிற சொல் உங்களைச் சுட்டறதா ஏன் எடுத்துக்கிறீங்கன்னு எனக்கு உண்மையா விளங்கல. இப்படியொரு முரண் உணர்வு வந்த பிறகு கடிதத்துல நான் முன்வைக்கிற கருத்துகள் உங்க கவனத்துக்கு வரப் போறதில்ல.''

''நந்தன்ல நீங்க பாராட்டும்படியான ஒரு அம்சம்கூட இல்லியா? இதுவரை நீங்க ஒரு கடிதம்கூட எழுதினதில்ல. தொலைபேசியில்கூடத் தொடர்பு கொண்டதில்லை. இப்பவந்து 'இது தருணம்'னு சொல்லி இதை எழுதியிருக்கீங்க.''

''வாசகர் கடிதமெல்லாம் எழுத எனக்கு உண்மையிலேயே நேரம் இல்லீங்க. நான் யாருக்குமே கடிதம் எழுதுறதில்ல. அது தப்புன்னு பட்டாலும் முடியல. கடிதம் எழுதலங்கிறதால நந்தன்ல நல்ல விஷயம் இல்லன்னு நான் நினைக்கிறதா அர்த்தமாயிடுமா என்ன? உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஏட்டில கவனக் குறைவா சில நுண் தளங்கள்ல சறுக்கல் வந்துடக்கூடாதேன்னு அக்கறைப்பட்டுத்தான் நான் இந்தக் கடிதத்தை எழுதினேன்.''

''கவிதாசரண் இதழ் மேல எனக்கு ரொம்ப மரியாதை உண்டு ஐயா. படிக்க வேண்டிய இதழ்னு நந்தன்லகூட குறிப்பிட்டேன். அதுக்காக நீங்க நன்றி சொல்லணும்னு நான் எதிர்ப்பார்க்கல.''

''எதிர்பார்க்காதது உங்க பெருந்தன்மை. ஆனா நான் சொல்லல. அதுக்காக இப்ப மன்னிப்புதான் கேட்க முடியும்.''

இது போன்ற சந்தர்ப்பங்களில் உடனடியாக நன்றி தெரிவித்து ஒரு நாலுவரி எழுதிப்போடுவது அவசியம் என்று தெரிந்தும் நான் அதைத் தவறவிட்டுக் கொண்டிருக்கிறேன். என்னவோ கவிதாசரண் இதழ் என் உடல் இயக்கத்தையும் அறிவு இயக்கத்தையும் ஒட்டுமொத்தமாகக் குத்தகை எடுத்துக் கொண்டுவிட்டதாக மற்றவர்கள் என் மீது பச்சாதாபப் படவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேனா என்பதுகூட இது விஷயத்தில் எனக்கு விளங்கவில்லை.

''நீங்க உங்க பத்திரிகையில இதை வெளியிடறதப் பற்றி எனக்கொரு வருந்தமும் இல்ல. தாராளமா வெளியிடுங்க,'' என்றார்.

''நீங்க வெளியிடணும்; இல்லன்னா நான் வெளியிடுவேன்னா சொன்னேன். உங்க நிலைப்பாடு தெரிஞ்சா வெளியிடறது அல்லது தவிர்ப்பது பற்றி யோசிக்கலாம்னு சொன்னேன். ஏன் ஒவ்வொன்னையும் தப்பாவே எடுத்துக்கிறீங்க?'' என்றேன்

''நாய்ச் சண்டைங்கிற தலைப்பை நான்தான் போட்டேன். நாய்க்கு மேற்கோள்குறி போட நினைச்சு விட்டுப்போயிடுச்சு.''

படிப்பகம்

www.padippakam.com



"எப்படிப் போட்டாலும் அது தப்பான தலைப்புங்க."

"அதுக்கு வருத்தம் தெரிவிச்சு இந்த இதழ்ல ஒரு குறிப்பு போட்டுடறேன்."

"போட்டுடுங்க."

"உங்க கடிதம் எனக்கு..."

"இதப்பாருங்க. 'நந்தன்வழி' தவறாக கணிக்கப்பட்டுவிடக் கூடாதுங்கிற நல்லெண்ணத்தோடதான் அதை எழுதினேன். அதுலயும் சுபவீ அங்க இருக்கிறதால எழுதினேன். சுபவீங்கிற பனி தருக்காகக் காட்டிய கரிசனம் அது. இல்லன்னா எனக்கும் நந்தன் இதழுக்கும் என்னங்க உறவு? வணக்கம்."

இந்தத் தொலைப்பேச்சு நடந்தபோது என்னுடன் கவிஞர் ஆசியும் ஓவியர் மாரிமுத்துவும் இருந்தார்கள். டைபாய்ட் காய்ச்சலில் கிடந்த என்னைப் பார்க்க வந்தவர்கள். தொலைபேசியை எடுத்துக் கொடுத்தவரே ஆசிதான்.

சொன்னபடியே 1-10-98 இதழில் 'நாய்ச் சண்டை'க்கு வருத்தம் தெரிவிக்கும் குறிப்பு வெளியானதோடு, கடிதத்தை அவரோ நானோ வெளியிடுவது அவசியம் இல்லை என முடிவு செய்தேன்.

16-10-98 'நந்தன்வழி' இதழைப் பார்த்த பிறகுதான் என் முடிவை மாற்றிக் கொண்டு இதை வெளியிட நேர்ந்தது. அந்த இதழில் சுபவீயின் 'என் நாட்குறிப்பிலிருந்து' பகுதிக்குப் 'பாமர விருப்பம்' என்று தலைப்பிட்டு, தனது லட்சியக் கனவொன்றைக் குறிப்பிட்டு, "கேலியாய்ச் சிரிக்கும் நண்பர்கள் வேண்டுமானால் அதைப் 'பாமர விருப்பம்' என்று வைத்துக் கொள்ளட்டும்" என்றொரு வாக்கியத்தை இடைச் செருகலாகச் சேர்த்துள்ளார். அதுவே தலைப்பாகவும் ஆகியுள்ளது. அதைப் படித்ததும் அன்று 'பாமரன்' சொல்பற்றி என்னோடு மறித்து மறித்து மல்லாடியது நினைவுக்கு வந்தது. 'என்ன சுபவீ இப்படி இருக்கிறார்' என்று வருத்தம் ஏற்பட்டது. அவரது குவியம் இப்படித் தடம் மாறிப் போய்விட்டபடியால், கடிதத்தில் நான் எழுப்பியிருந்த கருத்துகளைக் கவனம் கொள்ளத் தயாராயில்லை என்பது தெரிந்தது. ஆகவே வாசகர் தோழர்களாவது அதை அறியட்டும் என்பதற்கே இதை வெளியிட்டுள்ளேன்.

நந்தனில் அவ்வப்போது வெளிப்பட்ட சில கண்ணோட்டங்கள் தற்செயலாய் நிகழ்ந்தவையாகத்தான் இதுவரை எண்ணியிருந்தேன். அது தவறோ என்று இப்போது நெருடுகிறது. உதாரணமாக, தலித் மக்கள் தேர் இழுக்க உரிமை கோரும் விஷயத்தில் பெரியார் கருத்துக்கு மாறான கருத்தை நந்தன் வெளியிட்டது. விடுதலை ராஜேந்திரன் அதைச் சுட்டிக்காட்டினார். 16–

படிப்பகம்

www.padippakam.com



10–98 இதழில் 'ச்சீய் குமுதம்' என்னும் கட்டுரையில் 'குலத்தளவே ஆகுமாம் குணம்' என்பதை நந்தன் ஏற்கிறது. அதுவும் எப்படி? ரொட்டிக் கடை வியாபாரிக்குப் பிறந்தவன் ரொட்டி நினைவாகவே இருப்பான் என்கிற இழி தர்ம 'குண' நிலைக்கு. இதை நீட்டி வாசித்தால் பறையடிக்கிறவன் குழந்தை பறை நினைவாகத்தான் இருக்கும். சவக்குழி வெட்டுகிறவன் குழந்தை அந்தக் குழியைத் தான் தேடும். செருப்புத் தைக்கிறவன் குழந்தைக்கு மாட்டுத் தோல்தான் சரணாகதி என்று போய் முடியும். இது கடிதத்தில் நாம் எழுப்பிய கருத்துடன் இசைந்து போகிறது. இசை மேடைகளில் மிருதங்கம், கஞ்சிரா போன்ற தோல் கருவிகளைப் பார்ப்பனர்கள் கையாள்வது போல், பறையைத் தமிழர்களின் பண்பாட்டுக் கருவியாக்கிப் பிற சாதியினர் தங்கள் தோள்களில் தொங்க விட்டுக்கொள்ளாத வரை, அவர்கள் மனதில் அது தலித் மக்களை அடையாளப்படுத்தும் அவமானச் சின்னம்தானே.

தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பின்– இன்று 'புதிய தமிழகம்' தலைவர் டாக்டர் கே. கிருஷ்ணசாமியை நந்தன் அவ்வப்போது விமர்சித்து வருகிறது. பெரும்பாலும் எதிர் விமர்சனமாகத்தான். அண்மை விமர்சனமாக பிகார் அரசைக் கலைக்க 356ஐப் பயன்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு, அவர் பாஸ்வானைச் சந்தித்த பின் வந்துவிட்டார் என்பது. ஜான் பாண்டியனின் நேர்காணலை நந்தன் ஒருமுறை தன்னபிப்பிராயம் ஏதுமின்றி வெளியிட்டது. எனினும் அதன் அபிப்பிராயம் ஓரளவு விளங்கவே செய்தது. அதன் தொடர்ச்சியாக 1–11–98இல் நடைபெறும் 'சான்றோர் பேரவை, விழாவில் ஜான் பாண்டியன் அவர்கள் பங்கேற்பாளராகச் சிறப்பிக்கப்படுகிறார். அதாவது கிருஷ்ணசாமிக்கு மாற்று ஜான் பாண்டியன் என்பதாக. 'மேல்' சாதிக்காரர்கள் 'கீழ்'ச் சாதிக்காரர்களின் ஒருங்கிணைவைச் சிதறடிக்கக் கையாளும் கலக உத்தி இது. நந்தன் இதைக் கையிலெடுக்கிறது. யாரை ஏற்பது யாரை மறுப்பது என்பது நந்தனின் சொந்த விருப்பமாக இருக்கலாம். (சொல்லப் போனால் உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஏடு அப்படியெல்லாம் அடாவடித்தனமாகச் சொல்லிவிட முடியாது. அதன் ஒவ்வொரு அசைவுக்கும் வெளிப்படையான காரணம் இருக்க வேண்டும். இல்லையெனில் நந்தன் என்னும் பெயரே 'கீழ்'ச்சாதிகளை மயக்கும் முகமூடியாகவும், உலகத்தமிழர்களிலுள்ள 'உலகம்' என்பது 'உயர்ந்தோர் மாட்டே' என்பதும், அந்த உயர்ந்தோரும் 'பார்ப்பனியத்தை உள்வாங்கிக் கொண்டோர்' என்பதாகவும் ஆகிவிடும்.) 'மேல்'சாதிச் சீழ் நாற்றத்தைப் பெரியாரியப் புனுகு பூசி மணக்கப் பண்ணுகிறவர்கள் எப்போதும் இருக்கத்தான் செய்கிறார்கள். ●

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# தடுக்கப்பட்ட நுழைவாயில் மரணம்

ஜீவராம் சுந்தர்



ராமிற்கு இனிப்புகள் என்றால் உயிர்.

கொடைக்கானலுக்கு எடுத்துச் செல்ல வைத்திருந்ததில் இரண்டை எடுத்துக் கொண்டு படுக்கை யறையினுள் நுழைந்தேன். மங்கிய விளக்கொளியில் டிவி பார்த்துக்கொண்டிருந்தார். அருகில் சென்ற என்னை இழுத்து அணைத்து மார்புகளைத் தடவினார். காதில் கிசுகிசுத்தார். உஷ்ணம் தகித்தது மூச்சில்.

தொலைக்காட்சியில் பிம்பங்கள் மாறிக் கொண்டேயிருந்தன.

படுத்த வாக்கிலேயே நைட்டியின் ஜிப்புகளை ஏற்றி விட்டுக் கொண்டேன். அவர்மேல் ஒரு கையைப் போட்டபடி, "முரளியும் கூட வந்தால் நல்லாயிருக்கும்ல," என்றேன்.

என் முகத்தை உற்றுப் பார்த்தார். ஏதாவது மாறுதல் தெரிகிறதா என் ஆராய்கிறாரா என்ன?

"யாரை ஏமாத்தப் பாக்கற நீ?" என்றார். அவர் குரலுக்கு என்ன ஆயிற்று? மிக்ஸியில் தேங்காய் அரைபடும் சத்தத்தை ஒத்திருந்தது அது.

அவரை ஆதுரத்துடன் பற்றிய என் கைகளை தூரப் போட்டார்.

"மறுபடியும் நடிக்க ஆரம்பிக்காதே" என்றவர், 'தாதை தக்கதை' என்று அபிநயித்தார். வியப்பு மேலிட அவரைப் பார்த்தவாறிருந்தேன்.

தடக்கென்று எழுந்து படுக்கையின்மேல் நின்றார். கால்களின் மேல் ஏதோ ஊர்வது போல உதறினார். கீழே இறங்கி நின்று கொண்டார்.

பக்கவாட்டில் முகம் திருப்பி, "நீ பெற்ற பிள்ளையாய் இருந்தால் இப்படிச் செய்வாயா?..." என்றார்.

என்னவாயிற்று இவருக்கு? மதுவின் வாடைகூட வரவில்லையே...

"என்ன உளர்றீங்க? முரளியை நான் பெக்காம நீங்களா பெத்தீங்க...?"

படிப்பகம்

www.padippakam.com



"ஆமாம், நீதான் பெத்தே..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டவர் உரத்து "எல்லாம் தெரிந்துவிட்டது எனக்கு" என்றார்.

எழுந்து போய் அறையலாம் போலிருந்தது. என்னது எல்லாம் தெரிந்துவிட்டதாம்? படுக்கையிலிருந்து எழுந்தேன். விளக்கைப் போட்டேன். பிரகாசமானது அறை. நிசப்தத்தைக் கிழித்தபடி மின்விசிறியின் ஓசை இரைச்சலாய்க் கேட்டது.

"விளக்கைப் போடாதே..." அவரது அலறலில் என் முதுகுத் தடம் சிலிர்த்தது. "வெளிச்சத்தில் என்னை மூழ்கடித்து விடலாம் என நினைக்காதே..." என்று தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டி "நல்ல இதயம் இருப்பவர்களை யாராலும் மூழ்கடிக்க இயலாது," என்றார். இதைச் சொல்லும்போது அழுதுவிடுவார் போலிருந்தது.

அழட்டும்; நன்றாகப் பெண்பிள்ளை போல் அழட்டும். இதைக் கட்டிக் கொண்டு படும் சிரமங்கள் கொஞ்சமா என்ன.

"ஆமாம், யாராலும் மூழ்கடிக்கத்தான் முடியாது."

"ஹா ஹா... இப்படியேதான் இருக்கப் போகிறாய் நீ. மாற்றமேயில்லை. ஹரியைச் சிறிது சிறிதாகக் கொன்றது போல், என்னையும் சாகடிக்கத்தான் பார்க்கிறாய் நீ..."

"துரோகத்தைச் செய்தது நீங்கள்..." என்றவள் ஆழமாக மூச்சை இழுத்துக் கொண்டேன். அறையிலிருக்கும் காற்று எனக்குப் போதாது போலிருந்தது. இன்னும் கொஞ்சம் காற்று கிடைத்தால் இவரை ஊதியே தள்ளிவிடலாம். "என்னை அவனிடமிருந்து விலக்கியது நீங்கள்தானே. உங்கள் நண்பனையே ஏமாற்றிய நீங்கள் பேசுவது, சாத்தான் வேதம் ஓதுவதைப் போன்றது." எவ்வளவு காட்டமாக வார்த்தைகளை விசிறியெறிந்தேன் என்பது அவர் துள்ளியதிலிருந்து தெரிந்தது.

"ஹா. நீ அவனை மறந்ததற்கு என்னைக் காரணம் காட்டாதே... பாவம் அவன். நீ அவனுக்கு விசுவாசமாயிருப்பாய் என்று நிம்மதியாக இப்போது உறங்கிக் கொண்டிருப்பான்...!"

அவர் குரலிலிருந்த ஏளனம் ஆத்திரமூட்டியது. என் உடல் அதிரத் துவங்கியது. மேலே சுற்றிக் கொண்டிருக்கும் விசிறி கீழே வந்து ராமின் கழுத்தைச் சீவிப் போகக்கூடாதா...

"என்ன முறைக்கிறாய்? மின்விசிறி என் கழுத்தைச் சீவிப் போகவேண்டும் என்றுதானே ஆசைப்படுகிறாய்..."

கடவுளே — என்ன வந்தது இவருக்கு? எப்படித் துல்லியமாக என் மனதைப் படிக்க முடிகிறது. பயம் கனமான மேகத்தைப் போல் சூழ்ந்து கொண்டது என்னை.

படிப்பகம்

www.padippakam.com



"ஆனால்..." நிறுத்தினார். "ஆனால் நல்ல வேளையாக என் நண்பனின் ஆத்மா என்னுடனேயே இருக்கிறது எனக்குப் பக்க பலமாக... அவனில்லாவிட்டால் உன்னை நான் எதிர்க்க முடியுமா என்ன... கேட்டுக்கொள்— சர்வநிச்சயமாக ஆண்டவன் உன் பிரார்த்தனைகளைக் காது கொடுத்துக் கேட்கப் போவதில்லை."

"என்ன பிரார்த்தனைகள்?" என் குரலே எனக்கு அன்னிய மாக ஒலித்தது. இந்த விளக்கை வேறு ஏன்தான் போட்டேனோ. வெளிச்சத்தில் என் முக பாவங்களை மறைக்கச் சிரமப்பட்டேன். எதிரே இருந்த கண்ணாடியைப் பார்த்தபோது அதிர்ந்தேன். நானா இது... கண்களின் கீழ் கருவட்டம் விழுந்திருக்க, கன்ன சதைகளும் கழுத்துச் சதைகளும் தொங்கிக் கொண்டிருந்தன. அருகில் சென்று உற்றுப் பார்த்தேன். சூன்யக் கிழவியின் தோற் றம் வந்துவிட்டிருந்தது எனக்கு. வீலென்று அலறினேன்.

"நான்தான், நான்தான் உன் அழகை உறிஞ்சி எடுத்துவிட் டேன்." ராம் என் கணவர் ராம்— எகத்தாளமாகக் கூவினார்: "ஹரியைப் போல், என்னைப் போல் இனி யாரும் உன்னிடம் ஏமாறாமல் இருக்கத்தான் உன்னை விகாரமாக்கினேன். இனி யாரும் உன் நிழலைக்கூட மிதிக்க மாட்டார்கள். பேருந்துகளில் நீ நின்றுகொண்டேதான் வர வேண்டும், பாவம்..."

நான் கட்டுப்பாட்டை இழந்தேன். பாய்ந்து சென்று தலை யணைகளை ராமின் மேல் வீசினேன். அவர் சிரித்தார். குத்திக் கிழித்துவிடும் ஆவேசம் கொண்டு பலமனைத்தும் திரட்டித் தாக்கி னேன். விடக்கூடாது எனக் கருவினேன்.

"இப்படியெல்லாம் சொல்வதன் மூலம் நீங்கள் புனிதராகிவிட முடியாது. உண்மையில் ஹரியைக் கொன்றது நீங்கள்தான். நீங் கள் என்மேல் வக்கிரமாகக் காதல் கொண்டது ஊருக்குத் தெரி யாதா என்ன..." நேரே சென்று அவர் மார்பில் கைவைத்து அழுத் தினேன். "ஆம், என் ஆசைக் கணவரே, உங்களது வக்கிரபுத்தி பற்றி எல்லாவற்றையும் ஹரி என்னிடம் சொல்லிவிட்டான்".

ராம் அதிர்ந்து பின்வாங்கினார்.

என் குரல் உயர்ந்து கொண்டேயிருந்தது.

"ப்ளீஸ் ராது, ப்ளீஸ்... அக்கம் பக்கமிருப்பவர்கள் தவ றாக எடுத்துக் கொள்ளப்போகிறார்கள்." வாலைக் குழைத்தபடி வரும் நாயைப் போல் கெஞ்சினார். இவர் விரும்பும்போது ஆரம் பிக்கவும் தோன்றும்போது நிறுத்தவும் நான் என்ன இவர் மாற்றா?

"முடியாது. இது என்றாகிலும் ஒரு நாள் பேசப்படத்தான் வேண்டும்." நிறுத்தி இன்னும் குரூரமாக, "அவன் எவ்வளவு அழகான ஆண்மையுள்ளவன் தெரியுமா, உங்களைவிட..." என்

படிப்பகம்

www.padippakam.com



றேன். எதிர்பார்த்ததைப் போலவே என் கணவர் உடைந்து போனார். அவர் நொறுங்கி தளர்ந்து, மண்டியிட்டு அமர்ந்தார்.

"வேசியைத் திருமணம் செய்திருக்கக் கூடாதுதான்." சடக் கென்று நிமிர்ந்தார். எழுந்து ஆக்ரோஷமாய் அருகில் வந்தார். அடிக்கப் போகிறாரா என்ன? எவ்விதம் எதிர்வினை தெரிவிப் பது? நெருங்கி என் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு வந் தவர், "அதில்தான் நீ நிபுணத்துவம் பெற்றவளாயிற்றே. அதில் யார் ஒரு மாற்று உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்பதை உன் னால்தான் துல்லியமாகச் சொல்ல முடியுமே..."

நான் விக்கித்துப் போனேன். எனக்கேன் எல்லாமே இவ்வி தம் ஆகிறது. எழப்பார்த்த கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கி னேன். உதட்டைக் கடித்து விசும்பலை விழுங்கினேன்.

சுவரில் ஓங்கி அறைந்தவர், "ஆம், நான் துரோகம்தான் செய் துவிட்டேன். ஆனால் நீ நினைப்பது போல் அல்ல... அவனது விருப்பத்திற்கு மாறாக உன்னைத் திருமணம் செய்திருக்கக் கூடா துதான்," என்றார்.

"ஆனால் நீங்கள்தானே சொன்னீர்கள், ஹரி உங்களிடம் என்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லிச் சொன்ன தாக..." முறையிடும் குரலில் கேட்டேன்.

"ஆமாம்; அவன்தான் சொன்னான்." சுவரில் அப்படி என்ன ஆராய்கிறார்? சடக்கென்று திரும்பினார். லுங்கியை மடித்துக் கட்டி நடனமாட ஆரம்பித்தார். சுழன்று சுழன்று ஆடினார். வெறி பிடித்த மிருகத்தை ஒத்திருந்தது அவர் முகம்.

ஆவேசமாக ஆடியவர் தளர்ந்து படுக்கையில் விழுந்தார். அருகில் சென்று முகத்தை ஒற்றிவிட்டேன்.

"நான் சொன்ன மற்றவற்றை சந்தேகித்த நீ இதை மட்டும் ஏன் நம்பினாய்? உண்மையில் நீ அவனிடமிருந்து தப்பிக்க நினைத்து காரணம் தேடிக் கொண்டிருந்தாய். நான் அகப்பட்டு விட்டேன்."

"இல்லை. நான் ஹரியை மறக்கவில்லை."

"நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய் ஹரி இறந்துவிட்டானென்று. உண்மையில் அவன் இறக்கவில்லை என்பது தெரியுமா...?"

உடைத்துக் கொண்டு பீறிட்டது அழுகை. ராம் நெருங்கி என் தலையில் கை வைத்தார் குலுங்கியபடி அவரது தோளில் சாய்ந்தேன். ராம் நெகிழ்ந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



"நம் கையில் என்ன இருக்கிறது ராது. ஹரி இறந்தது, நான் உன்னைத் திருமணம் செய்ததெல்லாம் முன் தீர்மானிக்கப்பட்டதா என்ன. சூழ்நிலையால் உந்தப்பட்டவர்கள் நாம். இன்னும் சொல்லப்போனால் மூலையில் மடக்கப்பட்டவர்கள் நாம்."

என்னைத் தூக்கி நிறுத்தினார். கண்களைத் துடைத்துவிட்டார். அவர் முகத்தைப் பார்க்க அழப்போகிறார்போல் இருந்தது. பிரியமுடன் அணைத்துக் கொண்டேன். 'நானிருக்கும்வரை உங்களை மனக்கிலேசத்தில் விடமாட்டேன்' என நினைத்தபடி காதுகளில் முத்தமிட்டேன். என் வலது மார்பு அவர்மேல் அழுந்தியது.

என்னைக் கோபத்துடன் விலக்கினார். "இப்படித்தான் என்னை மயக்கினாய். உன் பெருத்த மார்பைக் காட்டி, அகண்ட இடுப்பைக் காட்டி... அதனால்தான் என் மனம் தடுமாறியது."

அவர் வார்த்தைகள் மறுபடியும் ஆத்திரமூட்டின. இவரா இப்படிப் பேசுவது. ஒவ்வொரு முறையும் ஐஸ் வைத்து காலில் விழாக்குறையாக அழைப்பவரா இவர். ஏளனமாகச் சிரித்தேன். முறைத்தார்.

"நீங்களா..." என்றேன். மேற்கொண்டு பேசமுடியாமல் தடுமாறுபவளைப் போல சிரிக்க ஆரம்பித்தேன். அறை அதிரச் சிரித்தேன். எட்டி விளக்கை அணைத்தவர் என்னைப் படுக்கையில் தள்ளினார்.

நான் சிரித்துக் கொண்டேயிருந்தேன். தூண்டப்பட்டவராய் அவரது வேகம் அதிகரித்தது. மின்விசிறியின் சுழற்சிகூட சிரிப்பை உண்டாக்கியது.

மேகக் கூட்டங்கள் உடைந்து சிதறின.

குப்பென்று வியர்த்துவிட பக்கத்தில் படுத்து வாயைப் பிளந்து காற்றுக்காய் அலைந்தார் ராம். அவர் உடலைத் துடைத்துவிட்டேன். அவர் உடலில் பூத்திருந்த வியர்வைத் துளிகள் என்னைக் கிளறிவிட்டன. துடைத்துவிட்டபடி அவர் நடு மார்பில் முத்தமிட்டேன். கூரையைப் பார்த்திருந்த என் திறந்த மார்பை மூடினேன்.

அவர் தலையைத் தூக்கி என் மார்பில் வைத்துத் தூங்க முயற்சி செய்தார். முதுகை அணைத்தபடி நானும் கண்களை மூடினேன்.

ஏதோ ஞாபகம் வந்தவராய் முனங்கினார். "நாம் முரளியையும் கொடைக்கானலுக்கு அழைத்துச் செல்வோம்..." அவரை மேலும் பேசவிடாமல் அவர் தலையை என்னுடன் இறுக்கினேன்.

படிப்பகம்

www.padippakam.com

# அதிகார மையங்களைக் காட்டும் கையேடு

நூல் அறிமுகம்

—வீ. அரசு



அறம் / அதிகாரம்: ராஜ்கௌதமன்
விடியல் பதிப்பகம், 3, மாரியம்மன் கோவில் தெரு, உப்பிலிபாளையம், கோவை-641015.
பக்கங்கள்: 240, விலை ரூ. 75.
அக்டோபர், 1997

1980 களில் உலக அளவில் ஏற்பட்ட தத்துவ விவாதங்கள், தமிழ்ச் சூழலிலும் விவாதிக்கப்பட்டன. அவ்வகையான விவாதங்களில், 'இலக்கிய வெளி வட்டம்', 'படிகள்' போன்ற சிறுபத்திரிகைகள் வழியாக ராஜ்கௌதமன் செயல்பட்டார். அக்கட்டுரைகள் 'எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம்' என்ற தொகுப்பு நூலாக 1992இல் வெளிவந்தது. 1990 களில் தமிழக அளவில் தலித்தியம் பற்றிய விவாதம் முன்னெடுக்கப்பட்டது. அது தொடர்பாக, நிறப்பிரிகை, கவிதாசரண், கோடாங்கி போன்ற இதழ்களில் கட்டுரைகளை எழுதினார். கருத்தரங்குகளில் கலந்துகொண்டு கட்டுரைகளை வாசித்தார். அவைகள் 'தலித் பண்பாடு' (1993), மற்றும் 'பொய் + அபத்தம் = உண்மை' (1995) என்ற தொகுப்பு நூல்களாக வெளிவந்தன. தலித்திய கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளை விமர்சனம் செய்யும் பணியைச் செய்யும் கௌதமன், அதன் அடிப்படையாகத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் அவ்வகை கண்ணோட்டத்தில் பார்க்கும் வேலையைச் செய்துவருகிறார். அதன் வெளிப்பாடாக சங்க இலக்கியக் கூறுகளை 'தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு' (1994) என்ற முழு நூலாக எழுதினார். குறவர்கள், வேடர்கள், பரதவர்கள், ஆயர்கள், உழவர்கள், கைவினைஞர்கள், கலைக் குழுவினர்கள், புலையர்கள் போன்ற மக்கள், சங்க இலக்கியப் பாடல்களில் கொண்டிருக்கும் இடத்தையும் பின்னர், தமிழ்ப் பண்பாடு என்பதே வைதிகப் பண்பாடாக வடிவம் பெற்றிருப்பதையும் அந்த நூலில் விவாதித்தார். இந்தக் கூறுகளில் பெண் பெறும் இடத்தையும் அந்த நூலில் பேசினார். அதன் தொடர்ச்சியாகவே 'அறம் / அதிகாரம்' (1997) என்ற நூலை கௌதமன் உருவாக்கியுள்ளார்.

சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், காப்பியங்கள், உரைகள், பக்தி இலக்கியங்கள், பிற்கால நீதி நூல்கள், தனிப்பாடல்கள்

படிப்பகம்

www.padippakam.com



என்ற மிக விரிவான தமிழ் இலக்கியப் பரப்பில் 'அறம்' பேசப்பட்டிருக்கும் முறைமையை இந்நூல் விவாதித்துள்ளது.

ஐம்புலன்களில் ஒன்றான நாக்கு என்பது அடிப்படையில் உணவுப் பழக்கம் சார்ந்து செயல்படுகிறது. இச்செயல், வெறும் உணவாக மட்டும் கருதப்படாமல், அதன்மீது கட்டப்பட்ட அற நடத்தைகளை முதல்இயலில் இந்நூல் பேசுகிறது. மாமிச உணவு, மரக்கறி உணவு போன்ற பாகுபாடுகள், அது சார்ந்த சாதியப் படிநிலைகள் போன்ற பல கூறுகளை இப்பகுதி விவாதிக்கிறது. நாவின் பேச்சு தொடர்பாக கட்டப்பட்டிருக்கும் பொய், உண்மை போன்ற சொல்லாடல்களின் அறமும் இப்பகுதியில் விவாதிக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

ஈகை, கொடை, தானம் குறித்த சொல்லாடல்களில் காட்டப் பட்டிருக்கும் அறம் பற்றி நூலின் இரண்டாம் கட்டுரை பேசுகிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வும், சமச்சீரற்ற பரிவர்த்தனையும் எப் படி கொடையாக, தானமாக வைதிகப் பண்பாடு வடிவமைத்தது என்பதை இப்பகுதியில் அறிய முடிகிறது. இதன் தொடர்ச்சியாக நட்பு, நன்றி, செய்ந்நன்றி அறிதல் போன்ற சொல்லாடல்கள் அற மாகப் பேசப்பட்டுள்ள தந்திரங்களையும் நூல் பிய்த்துக் காட்டு கிறது.

அறிவு என்பதே மதங்களின் அறமாகவும், அது புராண, இதி காச, ஆகமங்களாகப் பேசப்படுவதும் எவ்வகையில் மோசடிகளாக உள்ளன என்பதை நூலின் நான்காவது பகுதி விவாதிக்கிறது. அதிகாரக் குறிப்பானாக (ப.73) கல்வி கட்டமைக்கப்படுவதையும் இத்தன்மை வள்ளுவத்தில் விரிவாக இருப்பதையும் இந்நூல் தோலு ரித்துக் காட்டுகிறது. கல்வி, அறிவு, உண்மை என்பவை அறம் என்று பேசப்பட்டாலும் அது அடிப்படையில் ஒடுக்கும் கருத்திய லாகவே உள்ளன என்ற அதிகாரச் செயல்பாட்டை இப்பகுதி விரி வாக விவாதித்திருப்பதைக் காண முடிகிறது.

வினை, பிறவி, ஊழ் ஆகிய சொல்லாடல்கள் இயல்பான மனித வாழ்வை, எவ்விதம் மத அதிகாரத்துக்குக் கட்டுப்படுத்தியது என் பதை இந்நூலின் ஐந்தாவது பகுதியில் காணலாம். நிலையாமை என்ற டௌதிக நிகழ்வை மேற்குறித்த வினை, பிறவி, ஊழ் போன்ற சொல்லாடல்கள் அதிகாரங்களாகப் பேசி மிரட்டுவதை நாம் புரிந்துகொள்ள இப்பகுதி உதவும்.

இல்லறம், துறவறம் என்ற முரணைக் கட்டமைத்து, அதில் துறவு, துறவி என்ற சொல்லாடல்களும் அதன் தொடர்ச்சியாக அகிம்சை, கூடா ஒழுக்கம், கள்ளாமை போன்ற பல கூறுகளும்

படிப்பகம்

www.padippakam.com



உருவாக்கப்பட்டிருக்கும் அதிகார முறைமையை இந்நூல் வெளிப்படுத்துகிறது. சான்றாண்மை மற்றும் சான்றோர் என்று கூறப்படும் தன்மைகள் ஆதிக்கச் சாதிக்கும் பொருளுடைமைக்கும் ஏற்ற வகையில் கட்டப்பட்டிருக்கும் சனாதனப் புரட்டை இந்நூல் தோலுரிக்கிறது.

பெண் சார்ந்து கட்டப்பட்டிருக்கும் அறத்தை விவாதிக்கும்போது, ஏராளமான தணிக்கை விதிகளும் கட்டுப்பாடுகளும் பெண்ணின் புலன் மற்றும் உடல் சார்ந்து கட்டப்பட்டிருக்கும் அதிகாரக் கொடுமையை இந்நூல் விரிவாகப் பேசியுள்ளது.

அரசன், அரசனுடைய அறம் என்பவை அதன் தன்மையில் வன்முறையாகவே செயல்படுவதை நூலின் இறுதிப் பகுதி பேசுகிறது. இதனை நியாயப்படுத்தி, பரிந்துரை செய்யும் தொழிலைப் பார்ப்பனப்புரோகிதர்கள் தொழிலாகக் கொண்டிருந்ததையும் அறிய முடிகிறது வைதிகம் என்பதே பார்ப்பனர் மற்றும் வேளாளர் கட்டிய அதிகாரச் சொல்லாடல்தான். அதனை விரிவாகத் தமிழ் இலக்கியங்கள் பிரசாரம் செய்கின்றன என்பதையும் அறிய முடிகிறது. வைதிக அறம் என்பது உழைப்பைத் திருடும் தொழிலுக்குத் தங்க முலாம் பூசும் ஏமாற்று வேலை என்பதையும் நூல் விவாதிக்கிறது.

மேற்குறிப்பிட்ட விவாதங்களை முன்னெடுக்க இந்நூல் கொண்டிருக்கும் அடிப்படைகளை பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம்.

நீட்சே, ஃபூக்கோ, பக்தின், பிராய்டு ஆகியவர்களின் கருத்துக்களை உள்வாங்கி அதன் மூலம் ஏற்படும் புரிதலை தமிழ் இலக்கியப் பரப்பில் கட்டப்பட்டிருக்கும் அதிகாரம் என்பது அறமாகப் பேசப்படுவதை புரிந்துகொள்ள இந்நூல் அடிப்படையாக அமைந்துள்ளது.

தமிழ் இலக்கியங்கள் என்பவை, பௌத்த, சமண, சைவ, வைணவ மதங்கள் கட்டிய அதிகாரங்களை தமக்குள் கொண்டிருப்பதையும், அது அறம் என்ற பொருளில் சொல்லப்படுவதையும் வெளிக்கொண்டுவரும் பணியை இந்நூல் நிறைவேற்றியுள்ளது. பைபிள் கருத்துகளும் மேற்குறித்த மதக் கருத்துகளுக்கு உடன்பாடாக அமைந்திருப்பதை நூல் முழுவதும் தேவைப்பட்ட இடங்களில் மேற்கோளாகத் தரப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

வெறும் தமிழ் இலக்கிய விவாதமாக இந்நூல் அமையாது, தமிழ் இலக்கியங்களோடு தொடர்புடைய மதம், கல்வெட்டு, வாய்மொழிக் கதைகள் போன்ற பல கூறுகளையும் அதிகாரமாகக் கொள்வதில் சிரத்தையோடு இருப்பதையும் நூலில் காணமுடிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளின் வரலாற்றுப் போக்கில் இந்நூல் பெறும் இடத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை நம்முன் உள்ளது.

பேராசிரியர்கள் வையாபுரிப் பிள்ளை, தெ. பொ. மீ. போன்றவர்கள் தமிழ் இலக்கியங்களுக்குள் உள்ள சமயக் கூறுகளை மனித நேயமாகவும் தத்துவ விசாரனைகளாகவும் தமிழர்களின் அறிவுப் பாரம்பரியமாகவும் வெளிப்படுத்தினார்கள். ஆனால் அதே கூறுகளை ராஜ்கௌதமன் அதிகாரங்களாக வெளிப்படுத்துவதை புரிந்து கொள்வது அவசியம்.

தொ. மு. சி. ('இளங்கோவடிகள் யார்?'), க. கைலாசபதி, கா. சிவத்தம்பி (சங்க இலக்கியங்கள், சமய இலக்கியங்கள்), கோ. கேசவன் (பள்ளு இலக்கியம்) ஆகிய அறிஞர்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் காணப்படும் சமூக முரண்பாடுகளை வர்க்க முரண்பாடுகள் என்ற கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தினர். ராஜ்கௌதமன் இதே முரண்கள் அதிகாரங்களாகவும் கட்டப்பட்டிருக்கும் நுண்அரசியலை வெளிக் கொண்டுவரும் கலகப் பணியை மேற்கொண்டிருக்கிறார். நமது இலக்கியங்கள், மதங்கள் கூறும் 'அறம்' என்பது பெரும் நாகரிகமாகப் பேசப்படுவதை எள்ளி நகையாடி, கிண்டலும் பகடியும் கலந்த மொழியில் வெளிக்கொண்டு வருகிறார். இந்தப் பின்புலத்தில் ராஜ்கௌதமனின் பணி தனித்ததாக இருப்பதையும் இன்றைய வளர்ச்சியோடு கூடிய புரிதலாகவும் புரிந்துகொள்ள வேண்டும். மறைக்கப்பட்ட மற்றும் மறைந்து கிடக்கும் அதிகார மையங்களைப் புரிந்து கொள்ள இந்நூல் நல்ல கையேடாக உள்ளது.

ராஜ்கௌதமன் வரையறைப் படுத்திக்கொள்ளும் 'அதிகாரம்' என்பதின் வரையறைகள் பற்றிய விவாதங்கள் தமிழ்ச் சூழலில் எழுவது அவசியம். ஆனால், இந்நூலில் அதிகாரம் பற்றிய விவரணங்கள் அந்நியப்பட்ட மொழிநடையில் இல்லாமல் இருப்பதை ஒரு முக்கியப் புள்ளியாகக் கொள்ள வேண்டும். மிக விரிவான தளத்தில் சான்றுகளை அடுக்கும் இந்நூல், தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு 'கூறியது கூறல்' போன்ற மனப்பிரமை ஏற்படுத்தும் தன்மை கொண்டுள்ளது. கௌதமன் கொடுக்கும் ஏராளமான சான்றுகள் பாகுபாடு மற்றும் வரிசைப்படுத்தல் என்ற தொகுப்பு நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால், மேற்கூறிய மனப்பிரமைகூட எழாது போயிருக்கும். பிரமிக்கத்தக்க அளவில் உள்ள கௌதமனின் தமிழ் இலக்கிய வாசிப்பு, தமிழ்ச் சமூகத்தில் நிலவிய அதிகாரக் கூறுகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

'தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு' என்ற நூலில் தமிழ் மக்களின் பேச்சு வழக்கு சார்ந்த உரையாடல் மொழியை கௌத

படிப்பகம்

www.padippakam.com



மன் கையாண்டிருந்ததால் அது வாசகனுக்கு கலக மொழியாக அமைந்திருந்தது. வெறும் வாசிப்பைத் தாண்டி, கலகத்திற்கான மனநிலையை உருவாக்கியது. இந்நூலில் கௌதமன் மொழி கிண்டல் தொனியில் சுவையாக அமைந்திருக்கிறது. இவ்வகை மொழி தமிழ் ஆய்வு எல்லைக்குள் வருவது அவசியம்.

தமிழ் இலக்கியங்கள் வழி வெளியாகும் மதக் கருத்துகளை அறமாகப் பேசுவதை நாம் அதிகாரமாகப் புரிந்துகொள்ள உதவும் இக்கலகக் குரலை ஒவ்வொருவரும் கேட்பது அவ்சியம்; அதற்காக அறம் / அதிகாரத்தை வாசிக்கலாம். ●

**மார்ச் 8 பெண்கள் நாளாம்!**

## ஆசிரியர் குறிப்பு: 1



★ அறம் / அதிகாரம் இன்னும் எனக்குப் படிக்கக் கிடைக்கவில்லை. நூல் சிறப்பாக மொழியப் பட்டிருக்கும் என்பதோடு, உள்ளுறை சீற்றம் கனல வெகு நேர்மையாகவும் பதியப்பட்டிருக்கும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்தில்லை. அதனாலேயே இந்தக் குறிப்பு தவிர்க்க வேண்டாததாகிறது.

ஒருநாள் 'கீழைக் காற்று'- புத்தக மையத்திற்குச் சென்றிருந்த போது, கையெட்டும்படியாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்த இந்நூலை எடுத்துப் புரட்டியதும் ஆசிரியர் எழுதிய முன்னுரையின் கடைசி வரிகள் கண்ணில் விழுந்தன.

இந்நூலை என்னால் இப்போதாவது எழுத முடிந்திருக்கிறது என்றால் அதற்கு முழுப்பொறுப்பு என் மனைவி டாக்டர் க. பரிமளம்தான். அவளுடைய பராமரிப்பு இல்லையென்றால் என்னால் உட்கார்ந்து எழுதியிருக்க முடியாது. அவளுக்கு என் அன்பு.— என்றன அவ்வரிகள்.

'தமிழ்த் தாத்தா' எனப் போற்றப்படும் உ. வே. சாமிநாதய்யர் பல நூறு பக்கங்களில் வெகு நீளமாக என் சரிதம்' எழுதியுள்ளார். ஆனால் அதில் அவர் மனைவியைப் பற்றி மருந்துக்குக்கூட ஒரு

படிப்பகம்

www.padippakam.com



சொல் இல்லையாம். இதை அம்பை கண்டுபிடித்துச் சொன்னதாக கி. ராஜநாராயணன் குறிப்பிடுகிறார். பெண்ணியப் பார்வை என்றில்லாமல் பொதுப் பார்வையாகவே அதிர்ச்சி என்றால் இதுமாதிரியாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் உ.வே.சா.வுக்கு அதுவே அறமாகப் பட்டிருக்கும். பெண்ணுக்குப் 'போற்றிக் கவசம்' பூட்டுவதெல்லாம் அவளைப் பெண்டாட்டியாக்கிப் புதைப்பதற்குத்தான் என்பதான அறம். உ.வே.சா. உயிரோடிருந்து, அவரைக் கேட்டிருந்தால், ''பெண்டாட்டியானவள் உணவில் க(ை)ரந்திருக்கும் உப்பைப் போன்றவள். நான் விழுங்கும் ஒவ்வொரு கவளத்தையும் என் அன்னக் குழாயில் அமிர்தமாய் இறக்குபவள் அவளேயாகும் போது, அவளுக்கெதற்கு இந்த ஊத்தைச் சொல் அலங்காரமெல்லாம்?'' என்பாராக்கும். பெண்ணெனில் எல்லாருக்கும் வக்கணை பேச வருமாயிருக்கலாம். என் செய்ய. பெண்டாட்டி என்பவள் இன்னமும் தின்னப்படுகிறவள்தான்– உடம்பாலும் உணர்வாலும்.

மனைவியாய்ச் சிறைபிடிக்கப்பட்டவள் துடைப்பமும் கையுமாய்த் தன் உயரத்தைப் பாதியாய் ஒடித்துக்கொண்டு, வீட்டைப் பெருக்கி அழுக்கைத் திரட்ட வேண்டும்; வீட்டில் விளக்கேற்றி, விளக்கடி இருட்டில் தன்னை ஒதுக்கமாய் இருத்திக்கொள்ள வேண்டும். இதைக் கட்டமைக்க காலங்காலமாய்ப் புதுட்பிக்சப்படும் சாத்திரங்கள். உறிஞ்சித் துடைப்பான்களும் பொத்தான் விளக்குகளும் கற்பனையில்கூடச் சாத்தியமற்ற கற்காலச் சாத்திரங்கள்.

இருப்பினும் அண்மைக் காலமாகப் பெண்கள் தங்களை நிமிர்த்திக் கொள்ளும் ஆயுதமாகத் துடைப்பான்களைப் பற்றி நிற்பதாகக் 'கெட்ட கனவுகள்' தோன்றத் தொடங்கியுள்ளன. எனவே நிலைமை வெகுவாக மேம்பட்டு வருவதாகவும், பெண்ணும் இணையான மனிதப்பிறவியாக மதிக்கப்படுவதாகவும் ஒரு இனிய சித்திரம் வரையப்படுகிறது. உண்மையில் இதன் நடைமுறை, வீட்டுக்கு வெளியே நடத்தப்படும் ஒரு நாகரிகம் போலான நாடகம் என்பதாகத்தான் இருக்கிறது. இந்த நாடகத்தை சமூக வாழ்வியக்கமாய் நிலைப்படுத்துவதில் கண்கொத்திப் பாம்பாய்ச் செயல்படக் கூடியவர்கள் மாற்றுச் சிந்தனையாளர்களே.

ராஜ்கௌதமன் அப்படியொரு மாற்றுச் சிந்தனையாளர். 'அறம் / அதிகாரம்' வரை அவர் பதித்திருக்கும் சிந்தனைத் தடமே அதற்குச் சான்று.

அப்படிப்பட்டவர் எழுதிய 'என்னுரை'யின் கடைசி வரிகள் தாம் என் கண்ணை உறுத்தின. இவ்வரிகளில் அவர் தன் துணைவியாரை உலர்ந்த ஒற்றை விளியாக 'மனைவி' என்கிறார். பெண்

படிப்பகம்

www.padippakam.com



பால் விகுதி போட்டு கன்னம் வலிக்கிற மாதிரி 'அவள்' என்கிறார். அவருக்கான தன் நன்றியுணர்வை எப்போதும் போல 'அன்பு' என்கிறார். இதற்கு முன் வந்துள்ள இவருடைய மூன்று நூல்களில் (மூன்றும் நான் படித்தவை; என்னிடம் உள்ளவை) தன் அரிய துணையைத் 'துணைவி' என்றே அழைக்கிறார். அவருடைய இந் நூலுக்கு முந்தைய வெளியீடான 'பொய் + அபத்தம் = உண்மை'யில் "என் துணைவி முனைவர் க. பரிமளம் அவர்களுக்கு..." என்று (தன் இயல்பான சடங்குத்தனத்திலிருந்து பளிச்சென்று விடுபட்டு) மிகுந்த மதிப்புணர்வோடு பதிவு செய்தவரும் அவர்தான். அடுத்த இரண்டாண்டு (இரண்டு நூல்களுக்குமான இடைப்பட்ட) காலத்தில் கௌதமன் வளர்ந்திருக்கிறார். கலகக்கார கௌதமன் தனது 'மனைவி'யின்பால் தனக்கான அதிகாரம் சார்ந்த அறத்தை வரையறுக்கும் 'நல்ல' கணவராக வளர்ந்திருக்கிறார். ●

குறிப்பு: 2

# பெண்ணாய் ஒரு புரிதல்

★ முந்தைய குறிப்பை நான் எழுதுவது என் துணைவியாருக்குத் துளியும் பிடிக்கவில்லை பல நூறு விஷயங்களை நாங்கள் மனத்தயக்கங்களற்றுப் பகிர்ந்து கொள்ளப் பழகினாலும், 'கணவன் – மனைவி' உறவை மட்டும் ஒளிவு மறைவற்ற கேள்விகளுக்குட்படுத்துவதைத் தவிர்ப்பதே அந்த அம்மாளின் வழக்கமாய் இருக்கிறது. அவரின் இந்த அடக்கத்தில், "அடப் போங்கய்யா, இந்த ஆம்பளைங்களை எங்களுக்குத் தெரியாதா?..." என்றொரு நறுவிசான மௌனம் கிடந்து என்னை அறைவதுபோல் ஓரோர் சமயம் நோகச் செய்வதுண்டு. உண்மையில் இதுபோன்ற ஜனீர்க் கசிதலுக்குச் சுரணையற்றுப் போவதைவிட, பெண்களோடான சமத்துவப் பகிர்வால் ஆசாரம் பேசும் மனிதர்களுக்கேற்படும் தலைக்குனிவை அவனடையும் கர்வபங்கமாக ஏற்று ஆற்றிக்கொள்வது விவேகமுள்ள தீர்வாயிருக்கும் என்பது எனது நம்பிக்கை. அவ்வகையில் எனக்குச் சில முன் முயற்சிகள் உண்டு; என் கருத்தினை அந்தத் திசைவழியில் நெருக்கிப் படர்த்தத் துணைசெய்த முன் முயற்சிகள் அவை. பாகற்காய் எனக்குப் பிடிக்கும்; கசந்து

படிப்பகம்

www.padippakam.com



கொள்வதற்காக அல்ல; கசப்பு இந்த உடலைத் தகவமைக்கும் என்பதற்காகவே.

"ஏன் வேண்டாங்கிறே?" என்றேன்.

"விடுங்க. வேற வேலையப் பாருங்க," என்றார்.

"மாற்று முறைமையை வளர்த்தெடுக்கிறதில இதுவும் ஒரு முக்கியமான வேலைதானே?"

"ஆனா தலைபோற வேலையா இது?"

"இல்லியா பின்னே?"

"ஒவ்வொருத்தருக்கும் அப்பப்போ எது அவங்க மண்டையக் கொடையுதோ, அதுமட்டுந்தான் தலைபோற வேலையாப் படும். உங்களுக்கு இப்போ இது."

"இருக்கட்டுமே."

"இதப் பாருங்க. இது 'புருஷன் – பெண்டாட்டி' விவகாரம். இதுல குறுக்கிடறதுக்கு உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கு?"

சார்நிலை வாழ்வின் நடப்பியல் ஒழுங்கை அளவீடு செய்வது இடம் பொருள்–ஏவல் என்பதால், என் குறிப்பு முளைக்கும் இடம் அங்கீகரிக்கப்பட்ட கணவன்–மனைவி உறவில் மப்புதட்டிடக் கூடுமான நெருடலான தளம் என்பது அவர் கணிப்பு. ஒளிவும் மறைவும் உள்ள வாழ்வில் இது உண்மையும் கூட.

கலகப் பண்பு என்பது இவ்வுண்மையைக் கேள்விக்குள்ளாக்குவதுதான் அல்லவா? ஆகவே நான் சொன்னேன்: "என்னோட கேள்வி அதிகாரம் பற்றியதுதானே தவிர நீ நினைக்கிற மாதிரியான புருஷன்–பெண்டாட்டி விவகாரம் பற்றியது அல்ல."

"அது என்ன நான் நினைக்கிற மாதிரி?"

"புருஷன்–பெண்டாட்டி உறவுங்கிறது ரொம்பவும் அந்தரங்கமானது; குடும்பம்கிறது ரொம்பவும் புனிதமானது; அதை யாரும் கேள்விக்குள்ளாக்கக் கூடாதுங்கறதுதான் எல்லா மதவாதிகளோடவும், அவர்கள் எல்லைக்குட்பட்ட பெண்ணியக்கங்களோடவும் நிலைப்பாடு. ஏறக்குறைய உன்னோட நிலைப்பாடும் அதுக்கு நிகரானதுதானே?"

"அதில என்னங்க தப்பு?"

படிப்பகம்

www.padippakam.com



"ஒரு மரபான ஆம்பளையா நிமிர்ந்து நான் கேட்க வேண்டிய கேள்வியை ஒரு பொம்பளையா இருந்து நீ கேட்டுக்கிட்டிருக்கியே, அந்தத் தப்புதான். ஏன்னா உண்மையில் அந்தரங்கம், புனிதம்னெல்லாம் ஒரு புடலங்காயும் இல்லப்பா. அப்படிச் சொல்றதெல்லாம் ஆண்-பெண் ஏற்றத்தாழ்வை உன்னதப்படுத்தறதுக்கும், பெண் தன்னை ஒரு மனுஷியாகப் பார்க்காமல் இருக்கப் பண்றதுக்கும் சொல்லிவைக்கப்பட்ட அறம் / அதிகாரம் சார்ந்த கட்டமைப்புதான்."

"ராஜ்கௌதமன் ஒரு தலைப்பைக் கொடுத்தாலும் கொடுத்தார்–நீங்க அதுக்குள்ளேயே சமூகத்தோட சகல ரோகங்களையும் தொகுத்திடலாம்னு சொல்வீங்க போல இருக்கு."

"அட! எவ்வளவு எளிமையா பளிச்சின்னு சொல்லிட்டே. உண்மையாவே அப்படித்தாம்பா."

இந்த விவாதத்தில் மெல்ல மெல்லத் தான் உள்ளிழுக்கப்படுவதை அறிந்து, இதற்கு மேலதிகப் பங்கேற்பு தனக்கு உகந்ததல்ல என்னும் உள்ளுணர்வு தோன்றியிருக்கக் கூடும். அவர் முகத்தில் மெலிதாக ஒரு தயக்கம் இழையோடியது. அதைத் தொடர்ந்து சொல்லிவைத்தாற் போல அந்த வாக்கியம் நீரில் அழுத்திய பந்து மாதிரி விசுக்கென்று மேலெழுந்தது:

"நீங்க எம் ஏ எம் எட் படிச்சவுங்க."

"இரு இரு. நிறுத்து நிறுத்து," என்று கடுத்த குரலில் இடைமறித்தேன். ஒரு பட்டதாரிப் பெண்மணியின் 'பாமர' வெளிப்பாடு இது!

என்னோடு ஈடு கொடுத்துப் பேசுவதைத் தவிர்க்க விரும்பும் போதெல்லாம் தன்னை ஒரு ஆகத் தற்குறி மாதிரி பாவித்துக் கொண்டு, தன் புருஷன் படித்த படிப்புக்கு மேலாக வேறு பெரிய படிப்பே கிடையாது என்பது போன்றதொரு மௌடிகமான தோரணையோடு, மணந்து வந்த நாளிலிருந்தே இப்படித்தான் சொல்லிக் கொண்டு வருகிறார். முதல் தடவையாக இதைக் கேட்டபோது எனக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியுமாகி, என் ரத்த நாளங்கள் யாவும் உச்சந்தலையில் குத்திட்டன. 'இவள் என்ன கிறுக்குப் பொம்பளையா? இல்லன்னா புருஷனோட தன்னகங்காரக் குடை நிழல்ல பாதுகாப்பு தேடுகிற வினயக்காரியா?' என்ற கசந்த விமர்சனம் எழுந்த போதே, அதிர்ச்சி தரும் ஒரு தன்விழிப்பே போல 'அறிவகந்தை மிகுந்த ஆம்பளைப் பிசாசுகளைத் தங்கள் கட்டுக்குள் வைத்திருக்க இந்தப் பொம்பளைகள் என்ன மந்திரி

படிப்பகம்

www.padippakam.com



யான குளிர்பதன வித்தைகளெல்லாம் கற்றுத் தொலைக்க வேண்டியிருக்கிறது' என்ற நெகிழ்ச்சியும் சுரந்தது.

உண்மையில் அந்தக் கணம்தான் நிகழ்களத்தின் பெண் தகைமை பற்றிய உறைப்பை என்னுள் மூட்டிய கணம் என்று சொல்ல வேண்டும். அதுவரை வெற்றுச் சொற்களாய் விழிப்பற்றுக் கிடந்த பெண்ணியக் கருத்துகள் பலவும் நாற்றங்காலில் தூவிய விதைநெல் மாதிரி அர்த்தங்களாய் முளைவிட்ட கணம் அது.

அந்தக் கணத்தில் என்னுள் தன்னிரக்கமே மூண்டது.

"சமத்துவம் பற்றியதான சகமனிதச் சுரணையில்லாத நம்ம ஊர் சவுடால் பேர்வழிகள் பலபேர் தங்களை இந்தச் சமூகம் சகிச்சுக்கிட்டே ஆகணுங்கிற மாதிரி நாலாவழிகளிலும் கூடைகூடையா கனமான முனைவர் பட்டங்கள்லாம் சேகரம் பண்ணித் தங்களை அலங்கரிச்சுக்கிட்டிருக்காங்க தெரியுமா? அவர்களுக்கு முன்னாலே நான் தூசுப்பா. அதோட நான் அந்த அளவுக்கா சகிக்க முடியாதவனா இருக்கிறேன்?" என்று கேட்டேன்.

ஆனால் அது ஒன்றும் என் தலவியை மாற்றிவிடவில்லை. பெண்களின் மண்டை கெட்டியாகத்தான் வனையப்பட்டிருக்கிறது. இல்லையென்றால் குப்பை கொட்டுவதெப்படி? சொல்லப் போனால் குப்பை கொட்டுவதொன்றும் தன்னளவில் முடிந்து போகிற அற்ப சொற்பமான வேலையில்லை என்பதற்கு இதனிலும் அடர்ந்த அம்சம் உண்டு. அதாவது, 'ஒரு மனிதன் எண்ணும்போதும் எழுதும்போதும் இலட்சியவாதியாக ஒருமைப்படல் சாத்தியம்தான் என்றாலும், நடப்பியலில் அவனும் மற்றவர்களைப் போலவே விசுக்விசுக்கென்று தலையை உசுப்பிக்கொள்ளும் கரட்டோணதான்' என்பது மெய்யாகும்போது, ஒரு பெண் தனக்குச் சாபமாக்க் கையளிக்கப்பட்ட குப்பைக்கொட்டும் வேலையைத் தன் சாமர்த்தியத்தால் வரமாக்கிக் கொண்டு வாழப் பழகிக்கொள்கிறாள் என்பதுதான் அது. இதில் ஆணாய் இருக்கிறவன் 'நான் ஒரு விதிவிலக்கு' என்பது வெறும் ஆசைதான். ஆசைக்கு வெட்கமேது? குப்பைக்கு 'செல்வம்' என்றும் ஒரு பொருள்; சுவடற்றுத் தொலைந்து போகிற செல்வம். பெண்ணும் குப்பையும் அப்படித்தான் புழக்கடையில் பெதொலைக்கப்படுகிறார்கள்.

எது எப்படியாயினும் இந்தத்தடவை எனது துணைவியாரின் விருப்பம் அல்லது விருப்பமின்மைக்கு ஏற்ப இந்த விவாதத்தை ஏறக்கட்ட நான் தயாராயில்லை.

"இந்தப் பேச்சைத் தொடர்றதுல உனக்கு அப்படி என்னப்பா சிக்கல்?" என்று கேட்டேன்.

படிப்பகம்

www.padippakam.com



சிறிது மௌனத்திற்குப் பிறகு, இனியும் தவிர்ப்பது சரியில்லை என்னும் முடிவுக்கு வந்தவராய், "சிக்கல்னு பார்த்தா உங்க அளவுக்கு என்னால ஒருமைப்பட முடியிலங்கறதுதான்," என்றார்.

"அதுக்கு என்ன காரணம்னு நினைக்றே?"

"தொட்டில் பழக்கம்தாங்க. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் இல்லியா? அதுதான்".

எனக்கு அதன் போக்கு புலப்படவில்லை என்பதால், "இன்னும் சற்று விளங்குற மாதிரி விவரிக்கலாம்தானே?" என்றேன்.

உண்மையில் அது விவரிப்பாய்த்தான் இருந்தது. நேர்ப்பார்வையைத் தவிர்த்தவராய் அவர் சொன்னார்:

"இப்பல்லாம் மாற்றுச் சிந்தனைங்கிற பேர்ல உங்களால மரபுக்கெதிரான எதையும் நியாயப்படுத்த முடியுது. உங்களுக்கும் மரபுக்கும் உள்ள உறவு எப்பவுமே ஒப்புக்குத்தானோன்னு படுது. ஒரு சராசரி ஆளுக்கு உற்சாகம் தரக்கூடிய சொந்தங்களோடும் சொந்தக் கவலைகளோடும் உங்களுக்குள்ள உறவு அடியோட துண்டிச்சுப் போச்சு. உங்களோட விட்டேத்தியான போக்கை நெனச்சு நான் கவலைப்படறதா, இல்ல கண்ணை மூடிக்கிறதான்னு ஒன்னும் வெளங்குல. ஆர அமர யோசிக்கணும். ஆனா அதக்கூட உங்க பாதிப்பில்லாம என்னால செய்ய முடியுமான்னு ஐயமாயிருக்கு. ஏன்னு கேட்டா நான் இப்போ என் வசத்துல இல்ல. ஓடுறதுதான் நடைன்னு பாய்ஞ்சுக்கிட்டிருக்கிற உங்க கைக்குள்ள என் சுண்டு விரலக் குடுத்துட்டு, இப்ப உங்க பின்னால ஓட்டம் பழகிக்கிட்டிருக்கேன். வெட்டவெளிக் காத்து வந்து மூச்சை முட்டுது. ஆனாலும் மனசுல மட்டும் அப்பப்ப கொஞ்சமா சந்தோஷம் துளுக்குது; இனிக்குது. கூடவே 'விலக்கப்பட்ட கனியைப் புசிச்ச ஏவாளுக்கு இனிச்ச இனிப்போ இது'ன்னு ஒரு நெனப்பு வந்து அப்பிடியே அடிச்சுப் போட்டுடுது.

"இதெல்லாம் பழிச்சொல்லா, பாராட்டா?"

"தெரியிலியே. பேசப் பேசத் தெரியலாமில்லியா? ஆனா இந்த நேரத்துல இப்படியொரு கேள்விய சின்னப் பிள்ளை மாதிரி எவ்வளவு நம்பிக்கையோட கேக்குறீங்க! இதுல உள்ள அந்த ரங்கம் மட்டும் அனாவசியம், இல்லியா;"

—இதன் தொடர்ச்சி 52ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# ஆயிரமாண்டுத் தணல்

தனுஷ்கோடி ராமசாமி



"சொல்லுங்க."

பதிலாக முகம் தூக்கினான். கூர்ந்து பார்த்தான்.

"சும்மா பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்"னான்.

"...ம்."

'மேற்கொண்டு சொல்லு'ன்ற மொறையில தலையாட்டினார்.

"உங்களைப் பார்க்க ஒரு இளைஞன் வந்திருக்கான்"னு மாடி ஏறி வந்து சொன்னதினால கீழே இறங்கி வந்து அவனைப் பார்த்தார். வராண்டாவில் கிடந்த பெஞ்சில அவன ஒக்காறச் சொன்னார். தானும் ஒரு ஓரத்தில அதே பெஞ்சில ஒக்காந்தார்.

"சும்மாப் பாத்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்."

"...ம்..."

"எனக்கு நெருக்கமான நண்பன் ஒருவன்தான். அவன் இப்போ எங்கூடப் பழகறத தவிர்க்கணும்'னு பாக்றான். அத என்னால தாங்க முடியல."

இவனுக்கு வயசு இருபதிலேருந்து இருபத்திமூனுக்குள்ள இருக்கலாம். நல்ல உயரம். வேணும்னே வளர்க்கற தாடியில்ல. ஒரு வாரமா ஷேவ் பண்ணாம இருக்கான். முரட்டுத் தலை முடிய படிய வாரிவிட முயற்சி பண்ணியிருக்கான். சிலிர்த்துக்கிட்டு இருக்கு. பாக்கறதுக்கு அச்சம் தரும் உருவமுடையவனாயிருக்கான். அதற்குக் காரணம் அவன் முகத்திலே படிஞ்சிருக்கிற சோகம். அல்லது அவன் வீரத்தைப் பறை சாற்றும் முறுக்கிய இரும்பாயிருக்கும் அவனது பேருருவம் காரணமா? அந்த அச்சத்தை அதிகப் படுத்தற மாதிரி அவன் போட்டிருக்கிற நீலம்–சிவப்பு பட்டைகள் போட்ட சட்டையும் அடர்ந்த நிறக் கைலியும் இருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



"அவன் ஒருவன்தான் எனக்கு நண்பனே. அவன் என் நட்பை தவிர்க்க நெனைக்கறத என்னால தாங்கிக்க முடியலே. பைத்தியம் பிடிச்சிறும் போல இருக்கு...."

'ஏன் நிறுத்திட்டே? மேற்கொண்டு நீதான் சொல்லணுங்'கற மாதிரி பார்த்தார். 'இவனுக்கு விளங்கும்படி சொல்லணுமே. ரொம்ப உணர்ச்சி வசப்பட்ட நெலையில இருக்கான். இவனோட புரியும் திறன், பக்குவம் என்னான்னு தெரியலையே.'

ஒங்கள் பழக்கத்தின் ஆழம் எவ்வளவுன்னு எனக்குத் தெரியாது. அது எவ்வளவு ஆழமா இருந்தாலும், அவன் வெலகிக் கிடணும்னு நெனைக்கும்போது... நீ மேலும் மேலும் அவனோட நட்பு கொள்ள நெனச்சா அவன் ரொம்ப வெறுத்து ஓடறதத் தவிர அவனுக்கு வேற வழி இருக்காது. ஆகையினாலே..."

அவர் பேச்சை நிறுத்தினார். அவன் சுவரை வெறிச்சுக்கிட்டு ஒதட்டைக் கவ்விக்கிட்டிருந்தான். 'நாம் சொல்றதில இவனுக்கு அக்கறையில்லை'ங்கறது அவருக்கு அதிர்ச்சியா இருந்தது. அவன் நேராப் பார்த்தான்.

"இப்ப நம்ம ஊர் நெலவரத்தப்பத்தி என்ன நெனைக்கிறீங்க?"

அவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. 'எங்கயோ தாவுறானே? மன நோயாளியா?' ஜிவ் ஜிவ்ன்னு இருக்கிற அவன் முக இருக்கம் இவரையும் தொற்றியது.

"ரொம்ப மோசமாயிருக்கு!"

'அதிகமாகப் பேசவேண்டாங்'கற எண்ணத்தில சுருக்கமாகப் பதில் சொன்னார்.

"இந்த ஜாதிக்கலவரத்துக்கு யார் காரணம்னு நெனைக்கீங்க?"

'இந்த மாதிரி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக்கிட்டிருக்கறது நல்லதில்ல'ன்னு தோன்றியது.

"யாரைக் காரணம் சொல்றது?"

பேச்சை இத்தோட முடிச்சுக்கிடலாம்னு நெனச்சார்.

"எஸ். சி.ங்க ஆட்டம் ரொம்ப அளவு கடந்திருச்சி"ன்னான்.

"இது சம்மந்தமா ஒங்ககிட்ட பேசிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்"னான்.

படிப்பகம்

www.padippakam.com



'நண்பனைப் பிரிஞ்ச மன வேதனைக்கு வந்தேன்னு சொன்னயே?' இவர் மனசுக்குள். 'வீடு தேடி வந்தவனை எப்படி வெளியே போகச் சொல்றது...'

"இந்த ஜாதிக் கலவரத்தப்பத்தி ஒங்க அபிப்பிராயம் என்ன?"

'இவனோட என்ன பேசறது? ஆனா சனியன போய்ட்டு வான்னு சொல்றதுகூட வம்ப வெலைக்கு வாங்கறதாயிரும்'னு முளிச்சார்.

"எஸ். சிங்க தலப் பெறட்டாலதான் இங்கே இத்தனை தலைகள் உருளுது"ன்னான். இவர் மௌனமாகவே இருந்தார்.

கலவரம் தொடங்கியது, பரவினதை விஸ்தாரமாக விவரிச்சான். மௌனமாக கேட்டுக்கிட்டிருந்த அவர், "சமூகத்தின் பரிணாம வளர்ச்சியில இது தவிர்க்க முடியாத நிலை"ன்னார்.

"அது என்ன தவிர்க்க முடியாத நிலைன்னு சொல்றீங்க?"ன்னு அதிர்ந்து நிமிர்ந்து எதிர்க் கேள்வி கேட்டான்.

"ஆமாம்."

'பேச்சை இத்தோட முடிச்சிக்கிட்டா நல்லது; அதை எப்படிச் செய்யறதுன்னுதான் தெரியல.'

"நாடு முழுக்க அரசியல் தலைவர்கள், ஆன்மீகத் தலைவர்கள் எல்லாரும் இந்த ஜாதிக் கலவரத் தீ பரவக்கூடாதுன்னு துடிச்சிக்கிட்டு இருக்காங்க. நீங்க இது தவிர்க்க முடியாத நிலைன்னு சொல்லிக்கிட்டிருக்கீங்க."

"ஆமா... அரசியல்வாதிகள், மதவாதிகள் தங்கள் வசதிக்கு ஜாதிக் கலவரங்களை மூட்டி விடுவாங்க. அப்புறம் அதைத் தடுப்பாங்க. மூட்டிவிடறது, அப்புறம் தடுக்கறது... ரெண்டுமே அவங்க வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் தேவை."

அவன் இவரை மொறச்சிக்கிட்டிருந்தான். இவர் தொடர்ந்தார்:

"நாயக்கூட நடுவீட்டுக்குள்ள விடுவாங்க. ஆனா தாழ்த்தப்பட்ட மக்களைப் படியேற விடமாட்டாங்க. கழுத, பன்னிகள்கூட ஊர்க் கொளத்தில தண்ணி குடிச்சிட்டுப் போகலாம். ஆனா தாழ்த்தப்பட்ட மக்கள் நெருங்க முடியாது. ஜாதி வேறுபாடில்லாத ஐரோப்பாக்காரங்க எரநூறு வருஷங்கள் நம்ம நாட்ட ஆட்சி செஞ்சாங்க. அதனால நம்ம ஜாதிக் கொடுமைகள் மறையல.

படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரம் வந்து அம்பது ஆண்டுகள் ஆகப்போகுது. சரியான சோறு, துணி, வீடு, கல்வி வசதிகள் கெடைக்காட்டிக்கூடப் பரவா யில்லை. உழைக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 'மனுஷங்க'ங்கற குறைந்த பட்ச அங்கீகாரம்கூட இல்லாம ஒதுங்கி, ஒடுங்கி வாழ வேண்டிய கேவலம் இருக்கு. இப்படிப்பட்ட கலவரத்துக்குப் பின் னால கொஞ்சம் கொஞ்சம் உரிமை, மரியாதை கெடச்சுக்கிட்டு வருது. ஆகையினால அப்போ அப்போ சமூகத்தில புது ரத்தம் பாய்ச்ச இப்படிப்பட்ட கலவரம் தேவையாப் போகுது.''

''மனித அங்கீகாரத்துக்காக தாழ்த்தப்பட்டவங்க மேல்ஜாதிக் காரங்களோட நடத்தற போராட்டம்தான் இந்தக் கலவரம்னு நீங்க சொல்றீங்க. ஆனா அது உங்க முழுக் கற்பனைதான். ஏன்னா இங்க நடக்கறது அது இல்ல. உண்மையிலேயே சமூக மாற்றத்துக்கான போராட்டம்னா தொழில்கள்லேயும் வியாபாரத்தி லேயும் ரொம்ப முன்னேறியிருக்கிற உயர்ந்த ஜாதிக்காரங்களோட இந்தப் பள்ளர்கள் மோதியிருக்கணும். ஆனா, பள்ளர்களைவிட கொஞ்சம்போல மேல இருக்கற தேவமார் மேலே பொறாமையும் வெறுப்புங் கொண்டு பள்ளர்கள் வஞ்சகமாகச் செய்யற கொலை கள்தான் இங்கே நடந்துக்கிட்டிருக்கு...''

''மேட்டாப்பல பாத்தா, நீங்க சொல்றது சரியானதாத் தெரி யும். ஆனா தெறந்த மனசோட ஆழமா யோசிக்கணும். பிராம ணர்கள் தவிர்த்த மத்த ஜாதிக்காரங்கள்லாம் ஒண்ணா பழகிக் கிட்டிருக்காங்க. அவங்களுக்குள்ள திருமண உறவுகள் மட்டும் இல்ல. மத்தபடி வேறுபாடே பாக்கறதில்லே. ஆனா தாழ்த்தப் பட்டவங்க விஷயத்தில அப்படியில்ல. பள்ளிக்கொடம், அலுவல கங்கள், பொதுவிடங்கள்ல தாழ்த்தப்பட்டவர்கள சமமா நடத்தற மாதிரியிருக்கும். ஆனா தங்களோட வீடுகள்ல அனுமதிக்கிற தில்ல. அதாவது பிராமணனத் தவிர்த்த நம்ம சமூகம் ரெண்டு அடுக்கா பிரிஞ்சிருக்கு. மேல் அடுக்கில மற்ற எல்லாச் ஜாதிக ளும் ஒண்ணாயிருக்கு. கீழ் அடுக்கில தங்களுக்குள் சின்னச் சின்ன வேற்றுமைகள் இருந்தாலும் தாழ்த்தப்பட்டவங்க எல்லாரும் சேர்ந்து இருக்காங்க. மேல் அடுக்கின் கீழ் சுவராக இருக்கற வங்க தேவர்கள். தென்மாவட்டங்கள்ல கீழ்தட்டு மக்கள்ல பள்ளர் கள்தான் பொருளாதாரம், கல்வி, நாகரிகம், மனத்துணிச்சல்ல மேம்பட்டு இருக்காங்க. இவங்க தடைச் சுவரை இடிச்சிக்கிட்டு மேல வர நெனைக்காங்க. ஆக பள்ளர், மறவர் ரெண்டு ஜாதிக ளுக்கிடையே மோதல் ஏற்படுகிறது.

''மற்ற மேல் ஜாதிக்காரங்க பள்ளர்களோட மோதல் போக்கை நேரடியாக மேற்கொள்றதே இல்லை. ஆனா மறைமுகமாக மற

படிப்பகம்

www.padippakam.com



வர்களை ஆதரிக்காங்க. அவர்களுக்கு மறவர்களை வச்சு தாழ்த் தப்பட்டவங்கள நசுக்கணுங்கற வெறி. பறையர், சக்கிலியர் ரொம்ப நொஞ்சவங்களா இருக்காங்க. இவங்க மறவர்கள எதிர்க் கறதில்ல. ஆனா பள்ளர்கள் ஜெயிக்கணுங்கறது அவங்க பக்க நியாயம். ஆக ரெண்டு அணிகளின் பிரதிநிதிகளா பள்ளர்களும் மறவர்களும் சண்டை போடுறாங்க.''

''நீங்க சொல்றது உங்க கற்பனை. தாழ்த்தப்பட்டவங்களுக் குத்தான் மத்திய-மாநில அரசாங்கங்கள் சலுகைகளை வாரிவாரி இறைக்கிறாங்க. அதிலே இவனுங்க திமிர் பிடிச்சிப்போயி அலை யறானுக. எங்கப் பாருங்க... எல்லாப் பதவியிலேயும் அவங்கதான் கொட்டம் அடிக்கிறாங்க.''

''அப்படி உங்களுக்குத் தோணுது. நாட்டிலே 20% தாழ்த்தப் பட்ட மக்கள் இருக்காங்க. ஆனா மேல்மட்ட அதிகார நிலையிலே 1% கூட இல்லை. அடிமட்ட வேலையிலதான் கொஞ்சம் ஆட்கள் வந்துக்கிட்டிருக்காங்க. முழுக்க சமூகத்துக்குத் தொண்டூழியம் பண்ணிக்கிட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் ரொம்ப ரொம்ப கொஞ் சம் பேர் மேலே வந்தவுடனே உங்களுக்கு அப்படித் தெரியுது.''

''நீங்க எல்லாத்துக்கும் காரணம் சொல்லிருவீங்க. காலேஜ் கள்ல அவங்க ஆடற ஆட்டம் சொல்ல முடியாது! அந்தப் பயல்கள் கூடப் படிக்கிற பெண்களைப் பண்ற லந்து கொஞ்ச நஞ்சமல்ல. எல்லாப் பெண்களையும் அவனுங்க வெரட்டுவானுக கொச்சையா கமெண்ட் அடிப்பானுக. ஆனா, அவங்க ஜாதிப் பொண்ணுங்கள மத்தவங்க கேலி பண்ணிறமுடியாது. எங்க காலேஜ்ல ஒரு பையன் அவங்க பொண்ணு ஒருத்திய கேலி பண்ணிட்டான்னு காலேஜ் முழுக்க இருக்கற அவங்க பையங்களும் வெளியிலேருக்கிற ரிக்ஷாக் காரங்களும் சேர்ந்து அந்தப் பையன அடிச்சு, அவன் சட்டைய நார்நாராக் கிழிச்சு, பேண்ட்ட கழத்தி அவன் கழுத்திலே போட்டு, அவன் மேல தண்ணிய ஊத்தி நனச்சு, ஜட்டியோட அவன இழுத் துக்கிட்டு வந்தாங்க. மத்தவங்க யாரும் நெருங்க முடியல. ரிக் ஷாக்காரங்க கையில கத்தி, அருவாள். பையங்க கையில சைக்கிள் செயின். ஹாஸ்டலே ஆடிப்போச்சு. இதுதான் அவங்க நடத்தற புரட்சி... நியாயம்.''

ரொம்ப ஆத்திரத்தோடு பேசினான்.

''அது தப்புத்தான்''னார்.

''இல்லை. இதுவும், இந்த இந்த விதத்தில நியாயம்தான்னு காரணம் சொல்லுங்களேன்...''னு எரிச்சலாக கிண்டல் பண்ணி னான்.

படிப்பகம்

www.padippakam.com



மௌனமாயிருந்தார்.

"என்ன, ஒங்க நேசத்திற்குரிய எஸ். சி. க்களை சப்போர்ட் பண்ண வழியில்லையேன்னு தயக்கம் வந்திருச்சா?"

விகாரமாகச் சிரிச்சான்.

"தெறந்த மனசோட, அறிவியல் பூர்வமா, மனிதாபிமானத் தோட சிந்திக்கத் தயாராக இருக்கணும்"னார்.

"யாருக்குச் சொல்றீங்க தெறந்த மனசோட, அறிவியல் பூர்வமா, மனிதாபிமானத்தோடன்னு... ஒங்களுக்குத்தான் அது இப்பத் தேவை. எல்லாம் மறந்து குருட்டு வெறியில இருக்கிற அறிவாளி நீங்கதான்."

"தம்பி! ஒரு தப்பு பண்ணின ஒரு மேல்ஜாதிக்கார இளைஞன எஸ். சி. பையங்கள்லாம் சேர்ந்து அளவுக்கு அதிகமா, கொடுமையா தண்டிச்சிட்டாங்களேன்னு ஒனக்கு ரத்தம் கொதிக்கு. ஆனா, ரெண்டாயிரம் வருஷங்களா தாழ்த்தப்பட்ட பெண்கள மேல்ஜாதிக்காரங்க வரமுறையில்லாம பெண்டாண்டாங்க தெரியுமா? ஊர்ல புதுசா ஒரு தாழ்த்தப்பட்டவன் கல்யாணம் பண்ணிட்டு வந்தா அவன் பொண்டாட்டி முதல் இரவை மேல்ஜாதிக் காரனோட வச்சிக்கிடணும்னு நீதி இருந்தது, தெரியுமா உனக்கு? புருஷனக் காட்டுக்கும் களத்து மேட்டுக்கும் வெறட்டிட்டு அவன் பொண்டாட்டியோட மேல் ஜாதி மிருகம் படுத்துக்கெடக்கறதே வாடிக்கையா இருந்திருக்கே, தெரியுமா உனக்கு? இத எதுத்தா தாழ்த்தப்பட்ட அந்த மனுஷன அடிச்சி உறிச்சிருக்காங்க... கொன்னுருக்காங்களே தெரியுமா உனக்கு? இது ஒரு வருஷம் ரெண்டு வருஷம் இல்ல. ரெண்டாயிரம் வருஷமா இந்த மண்ணுல, தமிழ் நாட்டிலே, இந்தியா முழுவதிலும் இந்தக் கொடுமை அமைதியான நீதியா நடந்துக்கிட்டு வந்திருக்கு. ஆயிரம் ரெண்டாயிரம் வருஷங்களுக்கு பின் நோக்கிப் போக வேண்டாம். ரெண்டு மாதத்துக்கு முன்னே இங்கேருந்து பதினெட்டு மைல்லேருக்கற கீழ நல்லூர்ல புதுசா கட்டிக்கிட்டு வந்தவனோட பொண்டாட்டி பக்கத்துக் கிராமத்துக் கடைக்குப் போய்ட்டுத் திரும்பி வந்திருக்காள். பாதையில போனவள மேல் ஜாதி மைனர் அப்படியே - தூக்கி பக்கத்து மோட்டார் ரூம்லே போட்டு அசிங்கம் பண்ணியிருக்கான். அவள் வந்து புருஷங்கிட்ட சொல்லியிருக்காள். புருஷன் ஆவேசமாப் போயி கேட்டிருக்கான். ஊர்க்காரங்க எல்லாரும் சேர்ந்து அவனப் பிடிச்சு அடிச்சு, மரத்தில கட்டிவச்சு, தலையை தாறுமாறாச் செறச்சு, நரகலக் கலக்கி அவன் தலைமேல ஊத்தியிருக்காங்க. அசிங்கப்படுத்தப்பட்ட, கொடுமைக் குள்ளாக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பட்ட மனுஷங்களுக்குள்ளே ஆயிரம் ஆயிரம் ஆண்டு அக்கினி குமுறிக் கொதிச்சிக்கிட்டிருக்கு. அந்த இளைஞனை எஸ். சி· மாணவர்கள் சேர்ந்து அடிச்சத நான் நியாயம்னு சொல்லல. ஆனா முதல் வெள்ளம் வரும்போது தெளிந்த நீரா இல்லாம, செத்தை குப்பைகளோட வர்றது இயற்கை.''

''நீங்க ஒரு எஸ். சி. சப்போர்ட்டர்!''

''அப்படின்னு நான் நெனைக்கல. எனக்குத் தெரியற ஒரு சிறு நியாயத்த சொன்னேன்.''

''நீங்க ஒரு புகழ் வெறி பிடிச்சு அலையறவர். என்ன செஞ்சாவது, என்ன பேசி, எழுதியாவது பேர் பெறணும்னு வெறி பிடிச்சி அலையுறீங்க.''

''அப்படியும் என்னைப் பத்தி நான் நெனைக்கல. புரிஞ்சுக்கிட்ட நியாயத்த சொல்லணும், செயல் படுத்தணும்னு நெனைக்கிறவன்.''

''நீங்க கீழ்ஜாதிக்காரங்கள உங்க மனசில கேவலமா நெனைக்கிறீங்க. நானாவது எஸ்.சி.ங்கன்னு கொஞ்சம் மரியாதையாச் சொல்றேன் நீங்க பள்ளன், பறையன் சக்கிலியன்னே பேசுறீங்க. ஆனா சப்போர்ட் பண்ணா புகழ் வருங்கறதாலே சப்போர்ட் பண்றீங்க.''

பெருமூச்சு விட்டார். லேசாகச் சிரிச்சார். ''இல்லை! 'தேவமார்', 'முதலியார்', 'ரெட்டியார்'ன்னு நீ சொல்லும் போது எப்படி உனக்குத் தோணுதோ அதே மாதிரிதான் 'பள்ளர்', 'பறையர்', 'சக்கிலியர்'னு சொல்லும் போது எனக்குத் தோணுது. இன்னுஞ் சொன்னா, அவுங்க ஒழைக்கறவங்க...ஊழல் பண்ணாதவங்கன்ற பெருமையும் அதிலேயிருக்கு. நீதான் 'எஸ்.சி.' ன்னு மனசில அசூயையா நெனச்சுக்கிட்டு சொல்றே.''

மௌனமா அவர நேராப் பார்த்தான். ''அரசாங்கம், கலெக்டர், எல்லா மதப் பெரியவங்க, ஜாதிக்காரங்க எல்லாம் சண்டைய நிறுத்தி சமாதானம் பண்ணி வைக்க படாதபாடு படறாங்க... நீங்க கலவரத்தை ஆசீர்வதிக்கீங்க. ...க்கும்.''

''இல்லை. இப்போ சமாதானம் பண்ணி வச்சாலும் திரும்பவும் கலவரம் வெடிக்கும். நிரந்தரமான சமாதானம் சமத்துவத்திலேதான் வரும்னு சொல்றேன்.''

''ஆமா! ஆமா! ஊரே அல்லோலப்பட்டுப் போய்க் கெடக்கு. ஜனங்க தீப்பெட்டி ஆபீசுக்குப் போக முடியல. அடுப்புல பூன

படிப்பகம்

www.padippakam.com



ஒறங்குது. கிராமங்கள்லேருந்து பால் வராம கொழந்தைங்க செத்துக்கிட்டிருக்கு. நீங்க என்னடான்னா 'ஜாதிக் கலவரம் தவிர்க்க முடியாதது; இது சமூகப் பரிணாம வளர்ச்சியின் ஒரு பகுதி'ன்னு கொஞ்சங்கூடக் கூசாம சாக்குருவி வேதாந்தம் பேசிக்கிட்டிருக்கீங்க."

"... ... ... ... ..."

"'போராட்டம்', 'புரட்சி'ன்னுதானே பேசுவீங்க. இப்ப என்ன திடீர்ன்னு கலவரத்த ஆதரிக்க ஆரம்பிச்சுட்டீங்க?"

கிண்டலடித்தான்.

'இவனோட இவ்வளவு நேரம் பேசினதே வீண்தான். விரும்பியா பேசினேன்? ஊர் வேற அல்லோலப்பட்டுக் கெடக்கு.'

"நான் இந்தவூர் தேவமார் இளைஞர் சங்கத்தின் செயலாளர்."

நிமிர்ந்து உட்கார்ந்து ஏறிட்டுப் பார்த்துக்கிட்டே சொன்னான். இவருக்குள் அதிர்ச்சி!

"நீங்க எஸ். சி.களுக்கு சேவை செய்யறவர்"ன்னான்.

"நான் என் சம்பளத்த வாங்கி அவங்களுக்கு தானமிட்டுக்கிட்டா இருக்கேன்?"

"ஆமா. முழுசுமா சூற விடல. அப்போ அப்போ அந்த வேலயச் செய்றீங்க."

"இல்லை!"

"நீங்க அவங்க கலவரத்துக்கு காசு குடுக்கறதா நான் சொல்லலே. அவங்க பையங்க படிப்புக்கு உதவுறீங்க."

"...ம்..."

"நீங்க பொறந்த ஜாதிக்கு துரோகம் பண்றீங்க."

"இல்லை... நிச்சயமா இல்லை."

"நீங்க ஜாதி துரோகி. எந்த ஜாதியில பொறந்து அதே ஜாதி பெண்ணைக் கட்டிக்கிட்டு, அந்த ஜாதியின் பாதுகாப்பில வாழ்ந்துக்கிட்டு அவங்களுக்கு எதிரியா இருக்கறவங்கள ஆதரிக்கிற இனத் துரோகி நீங்க!"

"அப்படி இல்லப்பா... பேச்ச விடு!"

படிப்பகம்

www.padippakam.com



"பேச்ச விடறது என்ன சார். நீங்க பிறந்த குலத் துரோகி தான்."

"எனக்குள்ள வீரமும் விவேகமும் நான் பெறந்து வளர்ந்த இனம், சூழ்நிலையினாலே இருக்கலாம். அதுக்கு நான் துரோகம் பண்ணிறல. அவங்களும் தெளிந்த அறிவோடு இருக்கணும். உயர்ந்த மனிதாபிமானத்தோட இருக்கணும். சமூக வளர்ச்சியி லும் மாற்றத்திலயும் அவங்களும் பங்களிப்புச் செய்து உயரணும்னு நெனைக்கிறேன். இது எப்படி ஜாதிக்குச் செய்யற துரோகமா கும்? 'உலகம் உருண்டை'ன்னு சொன்ன கலிலியோங்கற விஞ் ஞானிய 'உலகம் தட்டை'ன்னு நம்பற கிறிஸ்தவத்துக்கு எதிரி, துரோகின்னு சிறையிலடச்சு கொன்னாங்க. 'தெண்டச்சோறுண் ணும் பாப்பான் படைத்த சதிதான் கீழான சாத்திரம்'னு சொன்ன பாரதியார 'பிராமண இனத் துரோகி'ன்னு அன்னைக்கிச் சொன் னாங்க. ஆனா இன்னைக்கு தல மேலே தூக்கி வச்சு ஆடுறாங்க.

"இப்பவும் தேவமார் இளைஞர்சளுக்குச் சொல்றேன் ஜாதிங் கறதே கற்பிதமானது. சமூகத்தின் பரிணாம வளர்ச்சியில சூழ்ச் சியால் உருவாக்கப்பட்டது. மனித உடம்பில ரத்தம், தசை, எலும்பு, உமிழ்நீர், கண்ணீர் எதிலேயும் இல்லை. மனுஷங்கள மனுஷங்க தாழ்த்தறதுதான் அசிங்கம். இன்னைக்கு இல்லாட்டா லும் இன்னம் அம்பது வருஷத்திலயாவது இது ஒழிஞ்சுபோயிரும்."

"நீங்க எங்க சங்கத்துக்கு வரணும். கூட்டிப் போகத்தான் வந்தேன்."

"ஒரு ஆசிரியர் ஜாதி சங்கத்துக்குப் போகக் கூடாது. நான் வர முடியாது."

"ஜாதிதான் இப்போ உங்களுக்குப் பாதுகாப்பு குடுக்க முடியும்."

"இருக்கலாம்."

"அதுக்குத்தான் நாங்க சொல்றோம். உங்களக் காப்பாத் திக்கிட இப்ப எங்க சங்கத்துக்கு வாங்க. கலவரம் எல்லாம் முடிஞ்சப் பெறகு 'ஜாதி இல்லை', 'மதமில்லை'ங்கற ஒங்க பேச் சுக்கு அப்புறமா திரும்பிக்கங்க. எங்க சங்கத்தில எல்லாரும் ஜாதி வெறி புடிச்சுப்போயி இல்ல. படிச்சவங்க, வேலை பாக்கற வங்க, அதிகாரிகள்லாம் இருக்காங்க. ஒங்க மேல ரொம்ப மரி யாதை வச்சிருக்கிறவங்க நெறையப் பேர் இருக்காங்க. இன் னைக்கு ராத்திரி பத்து மணிக்கு மேல நமகோடி வீட்டு மாடியில

படிப்பகம்

www.padippakam.com



கூட்டம். இளவட்டங்கள்லாம் ஒங்களக் கூட்டிட்டு வரச் சொன்னாங்க. நீங்க சும்மா வந்து பத்து நிமிஷம் நின்னுட்டுப் போயிருங்க. அது உங்களுக்கும் நல்லது.''

''முடியாது.''

''விளைவுகளப் பாத்துக்கங்க.''

கிரில் கேட்டைத் தள்ளும் சத்தம் அலறியது. படியில் கிடந்த செருப்பை மாட்டிக்கிட்டு குதித்துச் செல்கிறவனின் காலடிச் சத்தம் செவியில் அறைந்தது.

இருட்டில அனாதையா நிக்கற மாதிரியிருந்தது. திரையை வெலக்கிட்டு ஹாலுக்குள் நுழைந்தார். அவர் மனைவி நின்னுக்கிட்டிருந்தாங்க.

'எப்பவும் இப்பிடி அவள் கட்டியணைச்சதில்ல. என்ன எழுதினாலும் என்ன பேசினாலும் ஏதாவது கொறையையே சொல்லுவாள். இப்போ... இறுக்கம்... பூமணம்... மனுஷி மணம்.' ●

---

ஆங்கிலத்திலிருந்து —லாவண்யா மொழியாக்கத்தில்

## என் முகவரி / அம்ரிதா ப்ரீதம்

பஞ்சாபி மூலம்

இன்று,
என் வீட்டின் இலக்கத்தை அழித்துவிட்டேன்
தெருவின் பெயரையும்
பெருவீதிகளிலுள்ள அம்புக் கோடுகளையும்
ஆனால்
கட்டாயம் நீயென்னைக்
கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டுமென்றால்
ஒவ்வொரு தேசத்திலுள்ள
ஒவ்வொரு நகரத்திலுள்ள
ஒவ்வொரு தெருவிலுமுள்ள
ஒவ்வொரு கதவையும் தட்டு
இது ஒரு சாபம்
அல்லது வரம்
எங்கு சுதந்திரமான ஒரு ஜீவனைச் சந்திக்கிறாயோ
அதுவே என் வீடென்று புரிந்துகொள்.

படிப்பகம்

www.padippakam.com



## எதுவும் தேவையில்லாமல் / சாந்தரசா

கன்னட மூலம்

எதுவுமில்லையெனக்குன் லட்சியங்கள்
நிராகரிக்கிறேன் எல்லா மதங்களையும்
எல்லா கோட்பாடுகளையும்
உன் புத்திமதிகளால் எனக்குச் சுமை சேர்க்காதே.
எவரும் என் தலைமீது கைவைக்க வேண்டாம்
எனக்கெதுவும் வேண்டாம்
எதற்குமாசைப்படவில்லை நான்
வாழ விரும்புகிறேன்
எவர் சுமையுமெனக்கு வேண்டாம்
நான் யாருக்கும் சுமையாகவிருக்க விரும்பவில்லை
நான் வெறுமனே பிழைக்க விரும்புகிறேன்
திசைகாட்டிகள் எனக்காக அல்ல
பாட்டன் நட்ட மரத்தின் பழங்கள்
அம்மாவின் உணவுப் பொட்டலம்
அப்பாவின் துணிவூட்டும் வார்த்தைகள்
வேண்டாம், எதுவும் வேண்டாம்
எனக்கு மகிழ்ச்சிதரும் பாதையிலென்னை நடக்கவிடு
சராசரிக்கதிகமாய் இருக்கும் ஆசை எனக்கில்லை
மற்றவர்களுக்கு ஆதர்சமாகவும்
புதிய பரிமாணங்களையோ புதிய விதிமுறைகளையோ
உருவாக்கும் உத்தேசமும் இல்லையெனக்கு
இது போன்றவைகளால்
உலகம் அழுகிய முட்டையாகிவிட்டதென்றன் கணிப்பு
ஒன்றைப் பேசி ஒன்பதில் முடிந்து
உலகின் தரம் ஊழல் மிகுந்து போயிற்று
பலம் அருவருப்பூட்டுவதாயிற்று நாற்றத்தில்
இறந்த காலத்தின்மீது நான் சாய்வதில்லை
கைகளை நீட்டி எதிர்காலத்தைப்
பற்றிக்கொள்ளப்போவதில்லை
நான் வாழ விரும்புகிறேன்
என்னைப்போன்ற எளிமையான வாழ்க்கையை.'

படிப்பகம்

www.padippakam.com



—40ஆம் பக்கத் தொடர்ச்சி

# மாற்று



"அந்தரங்கம்கிறது நீயா வச்சுக்கிற அவசியமில்லாத பேர் தாம்பா. எதையும் வகைப்படுத்த விழையுறது இயல்பான மனப் போக்குதான். எனக்கு மாத்தி ரம் இருக்கக் கூடாதா என்ன? ஆனா, எப்படிப்பா உனக்கு இவ்வளவு நுட்பங்கள்லாம் பிடி படுது?"

"என்னோட வார்த்தையை எனக்கே வகைப்படுத்தத் தெரிய லேங்கிறதை இப்படி நுட்பமா சொல்லிக் காட்டுறீங்க. ஒன்னு தெரியுங்களா– ஒரு நல்ல மனைவியோட பழிச்சொல் கூட உள் ளார்ந்த பாராட்டாத்தான் இருக்கும். இது உங்க அறிவோட வகைப்படுத்தல்ல அடங்குறதில்ல."

"மெய்யாகவா? அந்தரங்கம் தொடர்பான இன்னொரு புதிய சூத்திரமா இதை நான் எடுத்துக்கலாம்னு நினைக்கிறேன். அதா வது, இதை 'பழி = பாராட்டு'ன்னு சமன்பாடக்கலாமா, சொல்லு.'"

"நீங்க கணக்கு வாத்தியார். போடி 'முட்டாள்'னா நான் முட்டாளாயிடப்போறேன். அதை விட்டுட்டு ஒரு அபத்த சமன் பாட்டைத் தலையில கட்டித்தானா என்னை முட்டாளாக்கணும். நான் சமன்பாடா சொல்லல. மாற்றீடா சொல்றேன். ரெண்டுக் கும் வேறுபாடு இருக்குல்ல?"

"அப்படியா? அதிரடிங்கிறது இதுதாம்பா. ஒரு அசப்பில நான் எங்க தொலைஞ்சேன்னே தெரியல. இதுக்கான விளக்கங் கள் உன்கிட்ட இருக்கும். அந்த விளக்குகளை ஏற்று. வெளிச் சக் கற்றைகள் என்னை விரட்டிப் பிடித்து மீட்டு வரட்டும்."

"'Light I say light'ன்னு டெஸ்டிமோனா அப்பன் கத்துற காட்சி என் கண்ணுக்கு முன்னால விரியுது. ஒரு சின்ன கேள்வி. அதைச் சொல்றதுக்கு என்னென்ன நயங்கள்லாம் வேண்டியிருக்கு உங்களுக்கு! ஆனா கலகப் பண்பு முன்னெடுக்கிற வாழ்வியக்கத் துக்கு மட்டும் நயங்கள் அந்நியப்பட்டுப் போகணும், இல்லியா?"

"நான் பயன்படுத்தினது நயங்கள்னா, அது முட்டாள் தனத்தை மறைக்கிற ஒரு உத்திப்பா. வாழ்க்கைக்கு நயங்கள்

படிப்பகம்

www.padippakam.com



கட்டாயம் வேணும்— கவிதையா, கலைகளா, சொல்லாலும் செயலாலும். ஆனா புனிதம்கிற பேர்ல முட்டாள்தனமா வாழ்றதுதான் சுகம்னு ஏத்துக்கிறதுக்கு இல்ல. சொல்லாக்கம்கிறது சும்மா போற போக்கில உருவாயிடறதில்ல. அதுக்கொரு அரசியல் உண்டு. அடிப்படைவாத, அதிகாரத்துவ அரசியலைக் கட்டமைக்கிற வல்லாண்மை உண்டு. அதன் முகமதிப்பில் உள்ள நயத்தில் மயங்கி அதனோட செலாவணி மதிப்பில் வெளிப்படுகிற வேரறுக்கும் குரூரத்துக்குப் பலியாகிவிடக் கூடாதில்லையா? ஆனா அதுதான் இன்னிக்கும் நடந்துக்கிட்டிருக்கு. சரி, இதைப் பற்றி பிறகு பேசுவோம். இப்ப உன் மாற்றீடு கருத்தைக் கொஞ்சம் தெளிவாக்கு.''

'' 'பெண்ணுரிமை, தலித் விடுதலை, விளிம்பு மக்கள் மேம்பாடு போன்ற குவியங்கள்ல மரபான அறிவாளிகள் ரொம்பப் பேர் படு மூடர்களா கண்ணை மூடிக்கிறதும், மதம் - சாதி - ஆன்மீகம் – தெய்வீகம் போன்ற கற்பிதங்கள்ல எல்லா மூடர்களும் அறிவாளிகளா மூன்றாவது கண் கொண்டு தரிசிப்பதும் இந்திய மண்ணுக்குரிய தலையாய பண்புகளில் ஒன்று'ன்னு நீங்க ஒரு தடவை சொன்னிங்க, நினைவிருக்கா? நான் சொல்ற மாற்றீடுக்கு அது தாங்க மூலம். ஆனா, நான் இதை மரபு சார்ந்த கருத்தாக்கத்துல பொருத்திப் பார்க்கிறேன். அதுக்கு முன்னாலே மாற்றீடு பத்தியும் மற்ற சில விஷயங்களையும் எனக்குத் தெரிஞ்ச மதிப்பீடுகளா சொல்லியாகணும்.''

''முதல்ல மாற்றீடு பற்றி இன்னும் கொஞ்சம் விளக்கு.''

'' 'பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்'– என்று வள்ளுவர் சொல்றார். அதாவது பொய்யை வாய்மைக்கு மாற்றாக வைக்கிறார்.''

''ஆனா...''

''ஒரு நிபந்தனையோடத்தான்– சந்தர்ப்பச் சூழல் சார்ந்த நிபந்தனை. ஒரு முற்று வாக்கியத்துல இந்த நிபந்தனை ஒரு சார்பு வாசகம்தான். அதை நினைவு வச்சுக்கறதும், ஒரு நெகிழ்ச்சியில மறந்து போறதும் ஒருத்தரோட மதிப்பீடுகள் சார்ந்த பிரச்சினை அல்லது நேர்மை சார்ந்த பிரச்சினை—எப்படி வேணும்னாலும் இருக்கட்டும். ஆனா மாற்று பேசுற முதன்மை வாசகம் எப்பவும் நடைமுறை நியாயமாவே கடைப்பிடிக்கப்பட்டு வருது. இதுல வாழ்க்கையே விதண்டாவாதமாயிடுச்சுன்னு ஒரு புலம்பல் இடைவிடாம ஒலிக்கிறதுண்டு. அவ்வளவு தூரம் போவானேன்; சந்தர்ப்பம், நிபந்தனைங்கிறதெல்லாம் கிடக்கட்டும். நம்ம அறிவுக்கும் அல்லது அறிவின்மைக்கும் தக்கபடி ஒரு பொய் மெய்யா

படிப்பகம்

www.padippakam.com



வும், ஒரு மெய் பொய்யாவும் மாற்றீடு ஆகுறதும் நடைமுறை நியாயமா இருக்குதில்லையா. 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்கிறார் அதே வள்ளுவர் இன்னொரு இடத்துல. மணலை எவ்வளவு தோண்டுறமோ அவ்வளவுக்கு ஊற்று பெருகும். இங்க உள்ள பிரச்சினை நீரோட இருப்பு பத்தினதில்ல; அது இருக்குது. ஆனா ஊறிப் பெருகுதா, உள்ளயே கரங்குதாங்குறதுதான் கேள்வி. பெருக்கம் – சுருக்கம்கிற இந்த இருமையே ஒன்னுக்கொன்னு மாற்றாகப் பாவிக்கப்படுறதுதான் வாழ்க்கையோட போக்காயிருக்குது. வள்ளுவர் இதை அறிவுக்கு உவமையா சொல்றார். அறிவுங்குறதே ஒரு கருத்தாக்கம்தான்ங்களே. இப்ப அது என்னமோ ஒரு பருப்பொருள் மாதிரி– இன்னும் கொஞ்ச நாள் போனா ஒரு கடைச்சரக்கு மாதிரி கூறுபடும் போல்ருக்கு. அறிவு எல்லார்க்குள்ளயும் இருக்கு. அதைத் தேடினவன் அறிஞன்; தேடாதவன் மூடன். ஒரு சந்தர்ப்பம், ஒரு நிபந்தனை ஊடாக அறிஞன் மூடனாகவும், மூடன் அறிஞனாகவும் மாற்றீடாகுறது தானே வாழ்க்கை. நேத்து ஒரு கவிதையைப் பார்த்தேன், கல்யாணராமனோட கவிதை நூல்ல. கவிதையின் தலைப்பு 'மிருகம்'. கவிதை இது:

> தாலி கட்டியோ கட்டாமலோ
> ஒரு பெண்ணைக் கற்பழிப்பது
> குற்றமே அல்ல
> நீ மிருகமாய் இருந்தால்.

இப்ப ரொம்ப கவிஞர்கள் 'கற்பழிப்பு'ங்கிற சொல்லை என்னமோ எருமைமாடு மழையில நனைஞ்சாப்பில சொரணையத்த சுகமா ரொம்ப அனுபவிச்சு எழுதறாங்க. நவீனத்துவக் கவிஞர்கள். நல்ல வேளை கற்போட மரபு காக்கிற நவீனத்துவக்காரங்களா இருக்காங்க.''

''கற்புங்கிறது மனிதன் தனக்காகக் கற்பிச்சிக்கிட்டது அப்படி கற்பிக்க தோணுனதே அதை அழிக்கிற உந்துதல்னாலதான்.''

''இருக்கட்டும் விடுங்க. இதுல உள்ள வினோதத்தைப் பாருங்க. அதாவது கற்பழிக்கிறவன் மனிதனில்ல; அவன் மிருகம். ஆனா நிஜ மிருகங்கள்ல எதுவும் அந்தக் கொடுமையைச் செய்யறதில்ல. இந்த விஷயத்துல அவை உயர்ந்த பாரம்பரியம் உள்ளவை. அப்படின்னா கற்பழிக்கிற மிருகம் வேறு. அது மனிதன் பெத்தெடுத்த மிருகம்– மனிதனுக்கு மாற்றாகிற மிருகம், இல்லிங்களா? இந்தக் கருத்தை இப்படி முடிக்கலாம்னு நினைக்கிறேன்: வாழ்க்கையே இருமைகளை மாற்றீடு செய்யிற விளையாட்டுதான். இயற்கை, இருமைகள்ல ஒரு நிகழ்வொருமையை நியதியா பேணி வருது.

படிப்பகம்

www.padippakam.com



மனிதன் தன் 'மாற்று' விளையாட்டால சிக்கல்களை உருவாக்கு றான். அறிவு, அந்த சிக்கல்களை வாழ்க்கையோட பரிணாமங் களா அர்த்தப்படுத்துது. சொல்லப்போனா, அறிவோட எல்லாப் பரிமாணங்களையும் மனிதனோட தன்னாதிக்கத்தின் தவிர்க்க முடியாத வில்லங்கங்களா உருவேத்தியாச்சு. அதனால, வாழ்க் கையை இயற்கையின் ஒத்திசைவான நீட்சியா மீட்க நினைக்கிற வனுக்கு 'எது அறிவு'ங்கிற கேள்வி தவிர்க்க முடியாததாயிடுச்சு. இன்னிக்கு ஆகப்பெரிய அறிவியல் மேதைங்கிறவன் இயற்கையை கலைச்சுப் பகைச்சுக்கிற முழு மூர்க்கனாத்தான் இருக்கான். இங்க மூர்க்கன், மேதைக்கு மாற்றாகிறான்— என் பழி, பாராட் டுக்கு மாற்றானது போல. சரியா முடிச்சிருக்கேனா? மாற்று பத்தின இந்த முடிவுரைக்கு நீங்கதான் பொறுப்பேற்கணும். ஏன்னா இது முற்றமுழுக்க உங்களோட தாக்கத்தின் விளைவு. என்னோட அறிவுக்கு இது வெறும் சொல்லலங்காரம்தான். கார ணம் இதைச் சொல்ல நான் ஒன்னும் பிரயாசைப் படல.''

எனக்குக் கொஞ்சம் அவகாசம் தேவையாயிருந்தது. அதற் காகவே அவர் கடைசி வாக்கியங்களைச் சேர்த்தார் என்று பட்டது.

''சில கருத்துகள் ஊன்றி சிந்திக்காமலே சொல்லுருவம் பெறும். அவற்றை நமது பட்டறிவோடோ, அல்லது கற்றறி வோடோ பொருத்திப் பார்க்காத வரைக்கும் வெறும் சொல்லலங் காரமாகவே படும். ஆனாலும் நமக்குப் பிரியமான அலங்காரம் கிறதுதான் அதன் நம்பகத்தன்மைக்கான சான்று. அதிருக்கட் டும். எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா. உன்னோட கருத்தாக்கத்தை சீர்படுத்தறது, விமர்சிக்கிறதெல்லாம் அப்புறம். இப்ப உன் பேச்சு உன்னை ஒரு முழு மனுஷியா பார்க்கவும் படிக் கவும் எனக்கொரு சாளரத்தைத் திறந்து விட்டிருக்கு.''

''உங்களுக்கு எரிச்சலா இல்லியா?''

''இருக்கும்னு நினைச்சுதான் இவ்வளவு நாளும் பேசுறதத் தவிர்த்தியா? போகட்டும். மூலத்தில் என் தன்முனைப்பு ஆளுமை சம்பந்தப்பட்டதாத்தான் முளைகட்டப்பட்டது. ஆனால் ஒத்தி சைவற்ற சமூகச்சூழல் அதை ஆண்பால் சம்பந்தப்பட்டதா அடை யாளப் படுத்திடுச்சு. ஆண்-பெண் சமத்துவம் பேண முனையிற எல்லார்க்கும் நேரக்கூடிய விபத்துதான் இது. இப்போ வயசு என்னை மீட்டெடுத்தாலும் உனக்குத்தான் அதை ஏற்கவும் இருத் தவும் முனைப்பில்ல. ஆம்பளை 'ஆம்பளைத்தனமா' இருந்தாத் தான் அழகுங்கற 'மனுஷத்தனம்' நுகர்வுக் கலாச்சாரத்துல செலா வணியாகிக்கிட்டுத்தான் இருக்கும் போல. ஆனா நான் இதுக்கு

படிப்பகம்

www.padippakam.com



உடந்தையில்லை. இப்பல்லாம் வாழ்க்கையில் நமக்கு மிச்சமிருப்பது இந்த 'நான'க் கடந்த சிந்தனையுணர்வுதானோங்கிற முற்றும் 'புள்ளிக்கு வந்தாச்சுப்பா. ஒன்னு சொல்லவா? தைப்பொங்கலுக்கு நாம கரும்பு வாங்குவோமே. பல்லால கடிச்சு, பட்டையை உறிச்சு கரும்பு தின்ன உன் பல்லுக்கு வலு இல்ல. அதனால உனக்காக நான் உறிச்சு, சின்னச் சின்ன துண்டுகளா கடிச்சுத் தருவேன். சின்ன வயசுல எங்கம்மா எனக்கு அப்படித்தான் தந்தாங்க. அதுல அவுங்களுக்கு ஒரு சந்தோஷம். இப்ப உன்னோட வலிமை மிக்க சொல்லாடலைக் கேட்கும்போது அதே மாதிரி சந்தோஷம்தான் எனக்கு. ஆனா, ஒரு பெண் இப்படி பரிவுணர்ச்சிகளால மட்டும்தான் சகித்துக்கொள்ளப்படணுமாங்கிறது ரொம்ப முக்கியமான கேள்வியாகிறது. இதை யோசிச்சுப் பாரு– இவ்வளவு புத்திசாலித்தனமா பேசத் தெரிஞ்ச ஒரு பெண்ணுக்கு 'மூடன், அறிஞன்'னு ஆண்பாலைத்தான் சான்றாக்கத் தோணிச்சே தவிர பெண்ணின் இருப்பை நினைவு கூரத் தோணலையே. 'போமு முட்டாள்னா முட்டாளாயிடப் போறேன்'னியே. அது நம்ம ரெண்டு பேர் சம்பந்தப்பட்ட விமர்சனமா முடியிற விஷயமா. சமூகத்தளத்தில ஆணும் பெண்ணும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற விதத்தை இதைவிடத் தெளிவாச் சொல்ல முடியாது. சரி, உனக்கேன் பெண்பால் சான்றுகள் கொடுக்கத் தோணலே?''

''அது மரபு இல்லியே. மரபுங்கிறதே தொட்டில் பழக்கத்தின் தொடர்ச்சிதானே. நீங்க கேட்ட பிறகுதான் இப்படியொரு கிளை பிரியறதே நினைப்புக்கு வருது. வலிஞ்சு நான் சொல்ல முனைஞ்சாலும் 'மூடன், அறிஞனு'க்குப் பெண்பால் என்னங்க? மூடனுக்கு மூடச்சின்னு சொல்லிடலாம். அறிஞனுக்கு? இது நீங்க திறந்து வைக்கிற சாளரம். அதன் வழியா எட்டிப் பாத்தா பல ஆண்பால் சொற்களுக்கு இணையான பெண்பால் சொற்கள் வழக்கத்திலேயே இல்ல. உதாரணமா, மனுஷன்கிற சொல்லை மனிதன்னு தமிழ் மரபு வயப்படுத்தினவுங்க மனுஷியை அப்படிப் படுத்தவே இல்லியே.''

''அதுதான் சொல்லாக்க அரசியல். சனாதன இழைப்புளியால மெருகேற்றப்பட்ட மரபுங்கிற சட்டகத்தைக் கெட்டியா பிடிச்சிக்கிட்டிருப்பது இந்த சொற்கள்'ங்கிற இரும்பு ஆணிகள்தாம்பா; துருப் பிடிக்கிற இரும்பாணிகள். துரு ஏறி, பிடிப்பு நெகிழ நெகிழ, மேலும் புதுப்புது ஆணிகள் அடிக்கப்படும். இவைகளைத் தூக்கி எறிஞ்சிட்டு, குறைந்த பட்சம் மர ஆணிகளாவது வைக்கலாம் அல்லவா. மரத்தோட மரம் பொருந்திப் போகும்.''

''ஆனா, யுகயுகத்துக்கும் நிலைச்சு வர்ற இல்லறம்-குடும்பம்-சமூகம்கிற நியதி பொம்பளையை நூலா வச்சு கோத்த மாலை

படிப்பகம்

www.padippakam.com



தான்னா, எனக்கு இந்த சொற்களோட போதாமை பத்தி ஒரு முணுமுணுப்பும் இல்லிங்க. மனுஷனோட மானம்–மரியாதையைக் காப்பாத்துற பெட்டகமா பொம்பளை இருக்காள்னா, அவ சில சிரமங்களை சகிச்சுக்கிறதும், சில உரிமைகளை இழக்கிறதும் ஒரு பொருட்டே இல்ல. யாருக்காக? பெத்தவனுக்காக, பொறந்தவனுக்காக, புருஷனுக்காக, பிள்ளைக்காக. ஆம்பளை அங்கீகரிச்சாதான் பொம்பளை பெரியவளா என்ன?''

"என்ன, தேர் திடுதிப்புன்னு நிலைக்கு வந்திட்டா மாதிரி?''

"சரியாத்தான் ஞாபகப்படுத்துனிங்க. தேர் மாதிரிதாங்க நானும். தேருக்கு அலங்காரம் மாதிரிதான் எனக்கு உங்க கருத்துகளோட பாதிப்பு. தழையத் தழைய அலங்காரம் பண்ணி, வீதி வீதியா வலம் வந்தாலும், தேர் முட்டிக்கு வந்ததும் அலங்காரம் அதுக்கு அதிகப்படியான விஷயந்தானே.''

"ஆனா அது தேருக்குச் சொந்தமானதுப்பா- தூக்கி எறிஞ்சிடறதில்ல. கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தா, உனக்கும் எனக்கும் உள்ள இடைவெளி ஒன்னும் கடக்க முடியாத தூரம் அல்ல. இந்த உண்மைதான் நம்மை ஒரே தளத்துல நின்னு விவாதிக்க வைக்குது தெரியுமா? சரி, தேர் முட்டியில நிக்கிற தேரைப் பார்த்து உனக்கு ஏதாவது தோன்றியதுண்டா, நயமா, நம்பிக்கையூட்டக்கூடியதா?''

"உங்களுக்கு அப்படித் தோனியிருக்கு. என்னது அது?''

"தேருக்கழகு ஊர்வலம் போதல். வடக்கயிறுகளை அடிமடியில் கட்டிக்கிட்டு, மழை- வெயிலுக்கு மறைப்பா மனுஷன் அடிச்சுக் கொடுத்த தகரக் குடை பிடிச்சுக்கிட்டு, ஒருநாள் ஊர்வலத்துக்காக ஆண்டு பூரா அசையாமல் தவம் கிடக்கிற மாதிரி தோனும்.''

"நல்லாத்தான் தோனியிருக்கு. ஆனா எனக்குத் தோனினது ரொம்ப வறட்சியானது.''

"எப்படி?''

"இந்த சக்கரம் இவ்வளவு பாரம் சுமந்து என்ன பலன்? சன்னக் கட்டை போட்டுத்தானே நகத்த வேண்டியிருக்கு.''

"உன்னை நகர்த்தற மாதிரி? பிரமாதம். உன் பார்வை தாம்பா ரொம்ப அர்த்தம் உள்ளதா இருக்கு. இதோட ஒப்பிட்டா என் பார்வை ஒரு பொய்க் கவிதை. கவிதை பொய்யாய் இருப்பதற்கு ஒரு சான்று. உன்னைவிட உனக்குள்ள இருக்கிற மனுஷி பளிச்சின்னு இருக்கிறாப்பா. சன்னக்கட்டை போடாமலே நகர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



கொடுக்கிறா. உண்மையைச் சொன்னா உன் மூலமா அவள்கிட்ட தான் என் பேச்சுன்னு படுது.''

''ஒரு ஆணோட மரபணுச் சாரமா ஊறிப்போன 'சின்ன வீடு' சமாச்சாரம் என்ன அப்பாவித்தனமா வெளிப்படுது பாத்திங்களா.''

''அடப் பாவி!''

''நோக்காடு ரொம்பவா?''

''இருக்கட்டுமே. 'உன்னை விட உனக்குள் இருக்கிற மனுஷனைத்தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு'ன்னு சொல்ற 'கற்புரிமை'யைக்கூட ஒரு பொம்பளை சொந்தப்படுத்திக்கொள்ள முடியிலதானே. பாம்புக்கு கூரிய அறிவுங்கிறது அது குறி தவறாம கொத்தற தன்மைதான். ஒரு ஆணோட அறிவுங்கறதும் அடிப்படையில அவன் ஆம்படையாளை அடிச்சு வீழ்த்தறதுதான்.''

''இப்படித்தாங்க என்னை நழுவவிடாம மடக்கிப்போட்டு தவங்க வச்சிடுறிங்க. உங்களோட கருத்துகளைத் தொடர்ந்து காது கொடுத்து கேட்டுக்கிட்டு, என்னையறியாமலே தலையாட்டிக்கிட்டு இருக்கிறதுனாலே ஒரு பழக்கதோஷம் மாதிரி அப்பப்போ உங்க மாற்றுக் கருத்துகளோட ஒத்துப் போகுப்படியாயிடுது. ஆனா அதுக்கு நான் கொடுக்கிற விலை தெரியாது உங்களுக்கு. உங்களோட ஒத்துப்போற சந்தர்ப்பங்கள்ல 'ஐயோ, நாம தப்பு பண்றமோ. நம்ம நிலைப்பாட்டைவிட்டு ரொம்ப தூரம் விலகிப் போயிட்டோமோ'ன்னு மனசுக்குள்ள எப்பவும் ஒரு பதட்டம் இருந்துக்கிட்டே இருக்குதுங்க. நீங்க சொன்னிங்களே– சமூகத்தோட சீர்கேடுகளையெல்லாம் தோலுரிச்சுக்காட்டி, தன் எழுத்து மூலமா நையாண்டி பண்ணிக்கிட்டிருந்த ரஷ்ய முன்னோடி எழுத்தாளன் கொகோல் தன்னோட கடைசிக் காலத்துல ஆழ்ந்த மதவுணர்வு காரணமா, 'ஐயோ நாம தெய்வ குத்தம் பண்றமோ'ன்னு ஒரு மனப்பிளவுக்காளாகி, தனது கடைசி நாவலோட கையெழுத்துப் படியை நெருப்புல போட்டுட்டான்னு. அதே மாதிரி பயம் எனக்கும் வருதுங்க. மனப்பிளவுக்கு ஆளாகாமே ஈடுகொடுத்து நிக்கிறேன்னா அதுக்கு முதல் காரணம் நீங்க என் பக்கத்துல மலை மாதிரி உறுதியா நிக்கிறது.''

''நான் நிக்கிறதுதானே உன் பயத்துக்கே காரணம்?''

''நான் சொன்னேனா? விவாதம் செய்யணும்னா தப்பாத்தான் புருஞ்சுக்கணும்னு விதியா? நீங்க ஒரு நல்ல கணவரா இல்லியாங்கிற ஆராய்ச்சி எனக்கு வேணாம். ஆனா ஒருத்தரோ

படிப்பகம்

www.padippakam.com



டொருத்தர் கருத்து பரிமாறிக்கிறதுல இனிய தோழமையுணர்வோட தங்கள் மனைவிமார்களை அரவணைச்சிப் போறவங்க உங்களை மாதிரி எத்தனை பேர் தேறுவாங்க! என் பயத்துக்குக் காரணம் எங்கே உங்க மாற்றுக் கருத்துகள் என்னை அநியாயமா முழுங்கிடுமோன்னுதான்."

"உன் மொழியில சொன்னா இந்தப் பயம் ஒரு நியாயத்தின் மாற்றீடு. சரி, அடுத்த காரணம்?"

"மரபு மேல எனக்கிருக்கிற பிடிப்பு. தொட்டில் பழக்கமா எனக்குள்ளே ஆழமா வேரோடியிருக்கிற, நான் பாவிக்கிற விஷயம் அது. ஒரு தடவை நீந்தக் கத்துக்கிட்டா கடைசி வரைக்கும் மறக்காதது மாதிரி. உங்ககிட்ட ஒரு விண்ணப்பம் – தொட்டில் பருவத்தை வரையறைப்படுத்த முடியுதான்னு பாருங்களேன்."

"பொதுவா குழந்தைப் பருவத்தைத்தான் சொல்வாங்க. அதை வரையறைக்குட்படுத்துறதுன்னா, குழந்தை ஆடை அணியாததை அசிங்கம்னு உணரத் தலைப்படுகிறவரைன்னு சொல்லலாம். என்னோட கருத்துதான். அதன் முன்னொட்டாக இருப்பது பெத்தவங்க மூலமா குழந்தை கொண்டு வரும் மரபணுத் தொடர்ச்சி. சமூகத்தோடு குழந்தைக்குள்ள அடிப்படை உறவு இது. தொட்டில் பருவத்தின் பின்னொட்டாக- குழந்தை நடை பழகி, உடை பழகி, நாப்பழகிய பின்னும், பண்பியல் கருத்தாக்கங்கள் மீது அதன் பகுத்தறிவுத் தாக்கம் அறியப்படாத பிள்ளைப் பருவத்தின் நீட்சியையும் அடக்கலாம். இடைப்பட்ட காலத்தில் குழந்தை பார்த்துப் பழகுவதும், 'செய் – செய்யாதே' கட்டளைகளைக் கேள்விகளற்று ஏற்றுப் பழகுவதும் தொட்டில் பழக்கமாய்க் கெட்டிப் படுகின்றன. இதையொட்டி இன்னொரு அதிர்ச்சி தரும் நிஜத்தையும் பதிவு பண்ணியாக வேண்டும்."

"அதிர்ச்சி தரும் நிஜமா? என்ன அது?"

"இந்த மண்ணுல உள்ள ஆகப் பெரும்பான்மையானவர்கள் மனிதர்களுக்கே உரிய பகுத்தறிவைப் பற்றிய தன்னுணர்வே இல்லாமல், உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் உளறுவதற்கும் போதுமான பழக்கப்படுத்தப்பட்ட மரபறிவோடே வாழ்ந்து மடிகிறவர்கள். அவர்கள் மனிதர்களாய் அடையாளப்படுவது, 'இது நியாயம் இது அநியாயம்' என்னும் பாகுபாடின்றி, பொருக்குகள் பிய்ந்து இரத்தம் கசிந்தாலும் அரிக்கும் சிரங்கை சொரிதல் சுகம்போலத் தாங்கள் கழித்த நாட்களை ஞாபகச் சுருளில் பதிவு செய்யத் தெரிந்தவர்கள் என்பதால்தான். விலங்குகள் பதிவதில்லை."

**—இதன் தொடர்ச்சி 69ஆம் பக்கம்**

படிப்பகம்

www.padippakam.com

# ஏலத்திற்கு வரும் இலக்கியங்கள்

31-7-1998

## ஒரு பரிசு

அனுப்புநர்:
மா. ப. கிருஷ்ணன்

அன்புடையீர்,

வணக்கம், இத்துடன் எங்களின் புதிய அமைப்பான புதுயுகம் தமிழ்க்கலை- இலக்கியப் படைப்பாளிகள் மன்றத்தின் இலக்கியப் பரிசுத் திட்டம் பற்றிய துண்டறிக்கை ஒன்று தன்னிலை விளக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.

தாங்கள் எழுதி 1997இல் வெளியிடப் பெற்றுள்ள நூலான ''மீண்டும் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்'' என்கிற சிறு கதைகள் தொகுப்பினை நர்மதா பதிப்பகத்திலிருந்து பெற்று வந்துள்ளோம். இதனை மேற்காணும் பரிசுத்திட்டத்தில் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ள விரும்புகிறோம்.

எனவே இந்தத் துண்டறிக்கையில் கேட்கப்பட்டுள்ளவாறு தங்களின் சுய விலாசக் குறிப்பு, மற்றும் படைப்பு பற்றிய உறுதி மொழி ஆகியவற்றை உடனே அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,
**மா.ப. கிருஷ்ணன்**
தலைவர்
(புதுயுகம் தமிழ்க் கலை-இலக்கியப் படைப்பாளிகள் மன்றம்)

3-8-98

## ஒரு மறுப்பு

அன்பு நண்பர் மா.ப.கிருஷ்ணன் அவர்களுக்கு, வணக்கம். உங்கள் கடிதம் கிடைத்தது. நன்றி. ஆயினும் சில காரணங்களால் எனது நூலை உங்கள் பரிசுத் திட்டத்தின் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காரணம்:—

1. வருஷம் ரூ. 2000 - ஒதுக்க முடிந்தவர்கள் எல்லாம் தமிழ் எழுத்தாளனின் புரவலர்கள் ஆவதும், அதையும் தமிழ் எழுத்தா

www.padippakam.com



ஏன் பெற்றுக் கொள்வதும் எனக்கு உடன்பாடான விஷயமாக இல்லை. பரிசு கொடுப்பதில் பொருளாதாரத்தைக் கலக்கும்போது —அதாவது பரிசைப் பணமாகத் தரும்போது— என்ன தொகை என்ற கேள்வியும் அதற்குள்ள மரியாதையும் தவிர்க்க முடியாதது. ஒரு சின்ன உதாரணம்:— யாராவது பரிசு ரூ. நூறு வழங்க முன் வருகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; இந்த அவலம் விளங்கிவிடும்.

2. இன்றைய நிலையில் ஒரு எழுத்தாளனுக்கு ஏதாவது உபயோகமாக இருக்கும் பரிசுத்தொகை என்றால் அது 25000 ரூபாயாவது இருக்க வேண்டும். அல்லது குறைந்தது பத்தாயிரம். இதைக்கொண்டு அவன் குறைந்தது தனது இதுவரை வெளிவராத—பதிப்பகங்கள் வெளியிட முன்வராத ஏதாவது நூலை அச்சுக்குக் கொண்டுவர முடியும். அல்லது பட்ட கடனை அடைக்க முடியும்.

உங்கள் அமைப்பில்கூட மொத்தம் ரூ. 10,000 கொடுக்கப் போகிறீர்கள். ஆனால் அதைப் பிரித்து தலைக்கு 2000 ஆக சுண்டல் விநியோகம் செய்யப் போகிறீர்கள். சில துறைகள் மேல் பிரத்யேக கவனம் கொள்வதில் எனக்கும் உடன்பாடுதான். இதற்குச் சரியான ஏற்பாடாக பரிசுத் தொகையை பத்தாயிரமாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு துறைக்கும் வருடாந்தர சுழற்சி முறையில் பரிசு கொடுக்கலாம். உதாரணமாக இந்த வருஷம் விளையாட்டுத் துறைக்கு, அடுத்த ஆண்டு விமர்சனத்திற்கு. இதன் காரணமாக பரிசுக்கு நூல்கள் உட்படும் ஆண்டுகளை 5 என்று வைத்துக்கொள்ளலாம். 94 முதல் 98 வரை வெளிவந்த நூல்கள், 95 முதல் 99 வரை. இதில் கூடுதல் விசேஷம் ஒரு துறையில் கடந்த 5 ஆண்டுகளில் வெளியான நூல்களிலேயே மிகச் சிறந்த நூல் என்ற பெருமையோடு அந்தப் பரிசு கொடுக்கப்படுகிறது. அந்தந்த ஆண்டு வெளிவந்த (5துறை) நூல்கள் என்றால் சில நூல்களுக்கு ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்ற ரீதியில் பரிசுகள் போய்விடவும் வாய்ப்புகள் உண்டு. (ஒரு வேளை நீங்கள் இந்த மாதிரி வரப்போகிற இலுப்பைப்பூ நூல்களுக்கும் ரூ. 2000/- போதாதா என்று நினைத்துத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறீர்களா? சும்மா தமாஸ்.)

அப்புறம் அய்யா, இந்தப் பரிசு அளிப்பவர்களுக்கு இதில் அப்படியென்ன விசாலமான இடம்?

நாங்கள் ஐவர் கூடி ரூ. 10,CCO அளிக்கப் போகிறோம் என்றால் போதாதோ. ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி, அதற்குப் பின்னால் இன்ன நினைவுப் பரிசு என்ற ஒரு வாலையும் ஒட்ட வைத்து...

படிப்பகம்

www.padippakam.com



**பச்சான் வழங்கும் பச்சான் நினைவு இலக்கியப் பரிசு:**

இலக்கியப் பரிசு! பச்சான் சிறந்த ஒளிப்பதிவாளர் என்பது தெரியும். ஆனால் அவரிடம் இவ்வளவு நகைச்சுவையும் உண்டா?

பொதுவாக இலக்கியப் பரிசுகள் குறித்து இப்படியொரு எண்ணமும் இருக்கிறது. அதாவது பெரும்பாலான இ. பரிசுகள் எழுத்தையோ எழுத்தாளனையோ முன்னிலைப் படுத்துவதற்குப் பதிலாக கொடுப்பவர்கள் தங்களை முன்னிலைப்படுத்தி மாலை போட்டுக் கொள்ளும் நோக்கத்திற்காகவே கொடுக்கப் படுகிறதென்று. நீங்களும் இதற்குப் பக்கத்தில்தான் நிற்பது போல் தோன்றிவிடக் கூடாது. பார்த்துச் செய்யுங்கள்.

இது உங்கள் விஷயத்தில் மட்டுமல்ல. ஏற்கனவே திருப்பூர் தமிழ்ச் சங்க விருதுகள் விஷயத்திலும் என் நிலை இதுதான். அவர்கள் மொத்தம் 34ஆயிரம் ரூபாய் பரிசு கொடுப்பார்கள். விழா— திருவிழா செலவாகப் பல ஆயிரம். ஆனால் 17 பேருக்கு சுண்டலோ சுண்டல்! இதையும் வாங்க தமிழ் எழுத்தாளர்கள் பலபேர் பெட்டியைத் தூக்கிக்கொண்டு திருப்பூர் யாத்திரை கிளம்பி வருவார்கள். 'அங்கேயும்' அங்குள்ள நண்பர்கள் வற்புறுத்தியும் அந்தப் பரிசுகளுக்கு என் படைப்புகளை அனுப்ப மறுத்து வந்திருக்கிறேன்.

இப்படி நண்பர்களை மறுதலிப்பதில் எனக்கு சந்தோஷம் என்று நினைத்து விடாதீர்கள். ஆகக் கூடிய வருத்தம் உள்ளே இருக்கிறது; உங்களைப் போன்ற இலக்கிய தாகமும் நல்லெண்ணமும் கொண்ட, கைப்பொருள் இழக்கவும் தயாராகி வரும் நண்பர்கள் எல்லாம் சரியான வழிகாட்டல் இல்லாமல் இப்படி இடறுவதைக் காணும் சோகம் அந்த வருத்தம். இதைக் களைய என்னால் முடிந்ததைச் செய்துவிட வேண்டும் என்கிற எண்ணம்தான் இந்தக் கடிதம். தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

அன்புடன்,

**ஜெயந்தன்**

குறிப்பு: இது ஜெயந்தனின் சொந்தக் கருத்து. மிகுந்த ரசனையோடு வருடியிருக்கிறார் காஞ்சிரங்காய் இலையால். அரிப்பது சுரணையின் அடையாளம். பொதுநூலகத்தை நம்பிப் புத்தகம் போடும் பலபேர் இந்தப் புரவலர்களை நம்பியும் போடுகிறார்கள். ஆமாம், போடுவதற்கு முன்பே இந்தப் புரவலர் பரிசு தமக்கு உண்டு என்று சிலருக்குத் தெரிகிறதே, எப்படி! ஜெயந்தன் கடிதம்கூட மெல்லிசாய் இதைக் கோடி காட்டுகிறது. ஒருவேளை, 'சுண்டல்தானே, கிடைக்காமலா போகும்' என்பதாயிருக்கும். —ஆ–ர்.

படிப்பகம்

www.padippakam.com

# புலைப்பேடி சம்பிரதாயம்

—எ. எம். சாலன்



நம் தேசத்தில் கட்டி எழுப்பப்பட்டுள்ள தடுப்புச் சுவர்களில் எல்லாம் மிகவும் வலிமை வாய்ந்தவை சாதிகளுக்கிடையே நாம் எழுப்பிக்கொண்ட தடுப்புச்சுவர்கள்தான். இவற்றை இடித்து நொறுக்குவது அவ்வளவு எளிய காரியம் அல்ல. காரணம், கண்ணுக்குத் தெரியாதவை என்றாலும், கான்க்ரீட் கட்டிடங்களை விட பலம் வாய்ந்தவை மாத்திரமல்ல, மேல் சாதிக்காரர்களுடைய பாதுகாப்பும் இவற்றுக்கு இருந்து வருகிறது.

எனினும் சமூகத்தில் சிறுமைப்படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் தங்கள் அவமானத்திற்கு காரணமான இவற்றின் மேல் மூர்க்கத்தனமாக மோதிப் பார்த்திருக்கிறார்கள். இம்மாதிரியான பலப்பரீட்சையில் எத்தனையோ பேர் தங்களுடைய உயிரைக்கூட இழந்திருக்கிறார்கள். சிலர் (அன்றைய) நீதிமன்றங்களால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற மனிதக் குழுக்களோடு தங்களை சகோதர உறவு கொள்ளவிடாமல் பிரித்து வைத்து இழிவுபடுத்தும் 'இந்தக் குட்டிச் சுவர்களை அகற்றியே தீருவோம்!' என காலங்காலமாக தாழ்த்தப்பட்டவர்கள் ஒருபுறம் வரிந்து கட்டிக்கொண்டு நிற்க, மறுபுறம் 'கடவுளே வந்து சொன்னால்கூட இச்சுவர்களை அசைக்க மாட்டோம்' என சாதிய ரீதியாக மேலாதிக்கம் பண்ணுவோர் கோபம் பூண்டு நிற்கிறார்கள். மேலோருக்கும் கீழோருக்கும் இப்போராட்டம் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்க:

“இதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது இந்த சாதிய தடுப்புச்சுவர்களை நொறுக்கித் தள்ளிவிட்டு, சாதிக்கு சாதி இணைவது! ஒரு வார்த்தையில் சொல்வதானால், 'காதல் வாசனையோடுள்ள கலப்புமணம்' என்ற பேராயுதம் ஒன்றினால் மட்டும்தான் இந்தத் தடுப்புச் சுவர்களை வீழ்த்த முடியும். அல்லது பாலியல் பலாத்காரம்,” என்றெண்ணிய தாழ்த்தப்பட்டவர்கள், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இதை நடைமுறைக்குக் கொண்டுவர– பல காலமாக, அது அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



அதைச் சுட்டி நிற்கும் சம்பவம்தான் இந்த புலைப்பேடி சம்பிரதாயம்.

இது ஒரு காலங்கடந்து போன சம்பிரதாயம்தான், என்றாலும்கூட நம் சமூகத்தில் காணப்படும் மேடுபள்ளங்களை அகற்ற மனித குலம் தெரிந்தெடுத்த சில அற்புதமான மார்க்கங்களும் இதனுள் அடங்கி இருக்கிறது.

'இச்சம்பிரதாயம் சுமார் 500 ஆண்டு காலமாவது வழக்கத்திலிருக்க வேண்டும்' என இது சம்பந்தமாக ஆய்வு செய்த அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

பெப்ரவரி, மார்ச் மாதங்கள்தான் இப்புலைப்பேடி அல்லது வண்ணாப்பேடி அல்லது பறைப்பேடி காலமாக கருதப்பட்டு வந்தது. அதாவது தை மாதத்திலே இருபத்து எட்டு ஆசாரம் கழிந்தால், உச்சாரநாள் முதல் பத்தாம் உதயம்வரை (அதாவது அடுத்த ஒன்றாம் தேதி முதல் 20ஆம் தேதி வரை) புலைப்பேடி காலம் என்கிறார்கள். (டி. எச். பி. செந்தாரசேரி மலையாளத்தில் எழுதிய அய்யங்காளியின் வாழ்க்கை வரலாறு.)

இப்புலைப்பேடி சம்பிரதாயத்தைப் பற்றி கி.பி. 1517-இல் இந்தியாவுக்கு வந்திருந்த பெர்போசா என்ற போர்ச்சுகீசியன் குறிப்பிட்டிருப்பதாவது:

"...புலையர்கள் ஆண்டு தோறும் சில மாதங்களில் தங்களால் முடிந்த அளவு மேல் சாதியினரான நாயர் பெண்களைத் தொட முயலுகிறார்கள். ராத்திரி காலங்களில், ரகசியமாக அவர்களை நெருங்கிச் சென்று, அவர்களைத் தொந்தரவு செய்ய எத்தனிப்பதுண்டு. அந்தி நேரங்களில் அப்பெண்களைத் தொடுவதற்காக வேண்டி புலையர்கள், நாயர்கள் வாழும் வீடடோரமாகச் சென்று ஒளிந்திருப்பர் நாயர் பெண்கள் இம்மாதிரி தொந்தரவுகளிலிருந்து தப்பித்துக்கொள்ள, கூடிய மட்டும் முயற்சிக்கவும் செய்கிறார்கள். இதற்கிடையே அவர்கள் ஏதாவது ஒரு நாயர் பெண்ணை தொட்டுவிட்டால், அதை வேறு எவராவது கவனிக்கவில்லையென்றாலும்கூட தொட்டவர்கள் பிறரைக் கூவியழைத்து இதைத் தெரிவிக்கிறார்கள். தொடப்பட்ட மேல்சாதிப் பெண்களோ தங்களுடைய சொந்த வீடுகளுக்குப் போகாமல் தங்களைத் தொட்ட அதே புலையன் அல்லது வண்ணான் அல்லது பறையனோடு ஓடியும் போய்விடுகிறார்கள். மேற்கண்ட தீண்டலின் மூலம் தங்கள் குடும்பத்திலுள்ள மற்ற உறுப்பினர்களுக்குத் தீங்கு ஏதாவது ஏற்பட்டுவிடக் கூடாது என்பதால்தான் அப்பெண்கள் இம்மாதிரி

படிப்பகம்

www.padippakam.com



யான செயல்களில் ஈடுபடுகிறார்கள். இச்செயல்களுக்கு அவர்களுடைய அடிமனதில் உறைந்து கிடக்கக் கூடிய ஆசார சம்பந்தமான நம்பிக்கைகள்தான் காரணம் எனத் தோன்றுகிறது. அல்லது அவர்களுடைய உறவினர்கள் இதையறிந்து வந்து பிடித்துக் கொன்றுவிடவோ அல்லது அந்நியர்களுக்கு விற்றுவிடவோ செய்துவிடாமலிருப்பதற்காக வேண்டித்தான் அப்பெண்கள் இம்மாதிரி செல்லத் துணிகிறார்கள். (அப்போது அந்நிய நாட்டிலிருந்து வந்தவர்களுக்கு இந்தியப் பெண்களை விற்கும் பழக்கம் இருந்திருக்க வேண்டும்.) ஒருவேளை புலையர்கள் அப்பெண்களைத் தொடுவதற்குப் பதிலாக ஒரு கல்லையோ அல்லது ஒரு கம்பையோ கொண்டு அவர்கள் மேல் படும்படியாக எறிந்தாலும் போதும். அதுவும் புலையர்கள் நாயர் பெண்களைத் தொடுவதற்குச் சமமாகத்தான் கருதப்படுகிறது.''

இது சம்பந்தமாக மலபாரிலுள்ள பொன்னானிக் கரையிலிருந்து ஷெய்க் சைனுதின் தரும் சேதி. (காலம்: 17ஆம் நூற்றாண்டு):

''ஒரு ஆண்டில் சில பிரத்தியேக ராத்திரிகளில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஆண்கள் உயர்ந்த சாதியிலுள்ள பெண்கள் இருக்கும் அறைக்குள் நுழைந்தாலோ, அவளுடன் சரீர உறவு கொண்டாலோ (இதன் மூலம் அவள் கர்ப்பம் தரிக்காவிட்டாலுங்கூட) அவள் கெட்டுவிட்டதாகத்தான் பொருள். அந்நியர்கள் அவளைப் பிடித்துக் கொண்டு போய் விற்பனை செய்யவோ அல்லது அப்பெண் நம்மிடம் (இஸ்லாமியர்களிடம்) வந்து சேரவோ, கன்னியாஸ்திரி ஆகவோ செய்வாள். இது போல உயர்ந்த சாதியிலுள்ள ஆண்கள், தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பெண்களுடன் உடலுறவு கொண்டாலும் கூட— மேற் குறிப்பிட்டவைகளில் ஏதாவது ஒன்றை அவன் மேற்கொள்ள வேண்டி வரும். (இந்த இடத்தில் சைனுதின் அவர்களால் குறிப்பிடப்படும் 'மலபார்' அன்றைய சென்னை மாகாணத்தின் அரவணைப்பிலிருந்த பகுதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.) இது, 1997, டிசம்பர் 7, கலாகவுமுதி மலையாள வாரப் பத்திரிகையில் வெளிவந்த சேதியாகும்.

இவற்றைப் பற்றி ஆய்வு செய்த டாக்டர். சேலநாட்டு அச்சுதமேனன் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கலாம்.

''தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை தெரு வழியாக நடந்து செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியைத் தொடர்ந்து 'காடு'களில் திருவிழாவும் 'வேலை'யும் (வேல் கொண்டு குத்தி நடத்தும் சடங்கு போலிருக்கிறது) நடை பெறக்கூடிய வேளைக

படிப்பகம்

www.padippakam.com



ளில்– புலையர்களுக்கு ஒருவகை சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வேளைகளில் தாழ்த்தப்பட்டவர்கள், மேல் சாதியினர் குளிக்கக்கூடிய குளத்தில் குளிக்கலாம். காவுகளுக்குள் கடந்து சென்று அவர்கள் அர்ச்சனை நடத்திக் கொள்ளலாம். வேண்டுமானால் அப்போதே அவர்களுக்கு வழியில் காணக்கூடிய மேல் சாதிப் பெண்களைத் தொட்டுக் கொள்ளலாம். அப்படி அவர்களால் தொடப்பட்ட பெண்கள், அவ் ஆண்களுடனேயே போய்விட வேண்டும். பிறகு அப்பெண்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லக் கூடாது என்பது அன்றைய கொச்சி, திருவிதாங்கூர் வழக்கம். இப்படி அவர்களுக்கு சர்வ சுதந்திரம் கொடுக்கப்பட்ட நாட்களன்று முன்கூட்டியே அந்நாட்டு சனங்களுக்கு முரசறைந்து அறிவிப்பார்கள். இம்மாதிரி 'புலைப்பேடி' நிலவியுள்ள காலங்களில் – வெளியே நடமாடும் மேல் சாதிப் பெண்களைத் தவிர, வீட்டைவிட்டு வெளியிலிறங்காத பெண்களிடம் தாழ்த்தப்பட்டவர்கள் அவமரியாதையாக நடந்துகொள்வதில்லை.

"இந்த மாதிரியான சர்வ சுதந்திரமான காலங்களில், இதில் ஈடுபட மனமில்லாத பெண்கள் வீட்டிற்குள் முடங்கிக்கொள்ளலாம் என்பதற்குரிய முன்அறிவிப்பாக இருக்கலாம் இப்படி முரசு அறைவதின் நோக்கம்" என்கிறார் சேலநாட்டு அச்சுதமேனன்.

"ஒரு பெண்ணுக்கு மூன்று வயதான ஒரு ஆண் குழந்தையை வழித்துணைக்கு கூட்டிக்கொண்டு எங்கே வேண்டுமானாலும் எந்த ராத்திரி வேளையானாலும் போய் வரலாம். வழியில் வைத்து ஒரு புலையனோ அல்லது பறையனோ அல்லது வண்ணானோ அவர்களை (மேல் சாதிப் பெண்களைக்) கண்டால் வழியிலிருந்து விலகி நின்று கொள்ள வேண்டும். அதனால் புலைப்பேடியிலுள்ள மாதங்களில் புலையர் சாதியிலுள்ள ஆண்களோடு உறவு கொள்ள விருப்பமுள்ள மேல்சாதிப் பெண்கள் மாத்திரம்தான் அவ்வேளைகளில்– தனியாக துணிந்து வெளியே நடமாடியிருக்க வேண்டும். அதுமட்டுமல்ல! ஆண் துணையில்லாத நாயர் பெண்களை இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலையர்கள் தங்களோடு சேர்த்திருக்கவும் கூடும்."

இனி இப்புலைய தரிசன வேளைகளில் நாயர் சாதிப் பெண்ணானவள் ஒரு ஆண் பனையைத் தொட்டுவிட்டால்கூட, பிறகு புலையன் அப்பெண்ணை தொட்டுவிடக்கூடாது. அப்படி தொடப்பட்டவர்கள் கற்பமுற்றவர்களாக இருந்தால் தன்னுடைய பேறு காலம் முடியும் வரையில் வேறு வீட்டில்தான் தங்கியிருக்க வேண்டும். அவள் பெறுவது ஆண் குழந்தையாக இருந்தால், மீண்டும்

படிப்பகம்

www.padippakam.com



அவள் தன் சாதியினரால் ஏற்றுக் கொள்ளப்படுவாள். ஒரு வேளை பெற்றது பெண் குழந்தையாக இருந்தாலோ அப்பெண் அப்புலையனுக்குத்தான் வாழ்க்கைப்பட வேண்டும். புலைப்பேடி மாதங்களைத் தவிர, வலம் வரும் அரசர்களைத் தரிசிக்கச் செல்லும் வேகைளிலும்கூட முடிந்தால் நாயர் பெண்களைக் கூட்டிக் கொண்டு போவதற்குரிய அனுமதி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இது அடிமைகளுடைய எண்ணிக்கை குறைந்து போகாமல் இருப்பதற்காக வேண்டி செய்யப்பட்ட ஒரு வகை ஏற்பாடாக இருக்கலாம்!

''இம்மாதிரி சந்தர்ப்பத்தின் மூலம் புலையர்களோடு நாயர்கள் இணைய ஆரம்பித்தது, போர்ச்சுகீசியர்களுடைய வருகைக்கு அநேகம் நூறு ஆண்டுகளுக்கு முன்பாக இருக்க வேண்டும்'' என்கிறார் இவற்றைப் பற்றி ஆய்வு செய்த குஞ்ஞன் பிள்ளை அவர்கள்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் வரை இப்புலைப்பேடி சம்பிரதாயம் மலபாரில் இருந்து வந்தது. ஆனால் அதே வேளையில் இது திருவிதாங்கூரில், கொல்ல வருடம் 871 இல் (கி. பி. 1695) உண்ணி கேரள வர்மா என்ற அரசரால் தடை செய்யப்பட்டது

கல்குளம் (பத்மநாபபுரத்தில்) தாலுக்காவில் திருவிதாங்கூர் சாலையோரம் நிறுவப்பட்ட ஒரு கல்லில் இச்சேதி குறிக்கப்பட்டுள்ளது. (அன்று பத்மநாபபுரம், திருவிதாங்கூர் சமஸ்தானத்தினுடைய இரண்டாவது தலைநகரமாக இருந்து வந்தது.) இது சம்பந்தமான தடயங்கள் பத்மநாபபுரத்திலுள்ள அகழ்வாராய்ச்சி மியூஸியத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. 106 வரிகளாக தமிழில் எழுதப்பட்டிருந்த போதிலும், தமிழும் மலையாளமும் கலந்தே இருக்கிறது.

''கொல்ல வருடம் 871 ஆம் ஆண்டு கன்னி மாதம் 25ஆம் தேதி சனிக்கிழமை சதயம் நட்சத்திரத்தில், ராஜ கட்டளைப் பிரகாரம் வந்து கூடிய இரண்டு வகை மகா சனங்களுடைய முன்னிலையில் சிரவா மூத்தவராய கேரளவர்மா என்ற வேணாட்டு ராஜா (தலைநகரான கொல்லத்திலிருந்து) கல்குளத்தில் (தர்ப்பகுளங்கரா கோட்டையில் வைத்து எழுந்தருளிக் கொண்டு) அனுப்பிய உத்தரவாக்கும் இது. தேவாளைக்கு மேற்கும் கண்ணேற்றிற்குக் கிழக்கும் கடலுக்கும் மலைக்கும் இடையே இருந்து வரும் புலைப்பேடியும், வண்ணாப்பேடியும் இல்லை என தம்புரான் திருவுள்ளத்தோடு இட்ட கட்டளைப் பிரகாரம், இரு சாராரும் சூழ்மியிருக்கவே இந்த கட்டளையைக் கல்லில் கொத்தி வைத்து, இவ்

படிப்பகம்

www.padippakam.com



வாறு எல்லோரும் காணும்படி நட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுக்கு மாறாக புலைப்பேடியும் வண்ணாப்பேடியும் மேல் சாதிப் பெண்களுக்கு ஏற்படுமேயானால், அதற்குக் காரணமான புலையன் அல்லது வண்ணான்கள் குடும்ப சகிதம்- பெண்கள் கர்ப்பமுற்றிருந்தால் அக்கர்ப்பப் பைக்குள்ளிருக்கும் சிசுக்கள் போலும் வெளியே தோண்டியெடுக்கப்பட்டு- கொன்று அழிக்கப் படுவார்கள் என இதனால் அறிவித்துக்கொள்ளப்படுகிறது. இந்த உத்தரவையும் மீறி, புலைப்பேடியும் வண்ணாப்பேடியும் (மேல் சாதிப்) பெண்களுக்கு ஏற்படுமெனில், அவர்கள் குளித்து முடித்து கரையேறினால் அதனால் உண்டாகும் தோஷம் மாறிக் கொள்ளும்! புல்லும் பூமியும், கல்லும் காவேரியும் உள்ள காலம் வரை இதன்படி நடக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. இந்த உத்தரவின்படி, இது கல்லில் பொறித்து திருவிதாங்கோடு, கெண்டப்ப வீட்டினுடைய வடக்கு வாசலில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த சிலைக்கு சேதம் விளைவித்தால், அது கங்கையோரத்தில் வைத்து கருத்த பசுவினைக் கொன்றால் உண்டாகும் பாவத்திற்கு சமமானதாகும்."

"இந்தச் சம்பிரதாயத்தினுடைய தொடக்கம் எப்படியிருந்த போதிலும் இதிலிருந்து ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. நிலவுடைமைக் காலத்தில் குடும்ப சுகத்தில் அதிருப்தியான மேல்சாதிப் பெண்களும் மறுமணத்தை சொப்பனத்தில்கூட காண முடியாத விதவைகளும் இச்சந்தர்ப்பத்தை தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். வருணாசிரம தர்மத்தின்படி 60 அடி தூரத்திற்கு அப்பால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த தலித்துகளும்கூட- தங்களுக்குச் சாதகமான இச்சம்பிரதாயத்தை மிக நன்றாகப் பயன்படுத்தியிருக்கலாம். இதனால் சாதி சமத்துவமும், கூடவே வர்ணங்களும் ஒன்றுடன் மற்றொன்று கலந்து வர்ண பேதம் அல்லது சாதிபேதம் நீங்கிவிடுமோ என அன்றைய நிலவுடைமைவாதிகளும் ராஜாவும் பயப்பட்டிருப்பதையும் மேற்கண்ட நிகழ்ச்சிகள் நமக்குச் சுட்டுகின்றன," என்றும் இது சம்பந்தமாக ஆய்வு செய்த டி. எச். பி. செந்தாரசேரி அவர்கள் (மேற்கண்ட அதே புத்தகத்தில்) தன் அபிப்ராயத்தை முன் வைக்கிறார். ●

படிப்பகம்

www.padippakam.com



## நாசரின் நாலு கவிதைகள்

### 1

என் வீட்டில் ஒரு நாய் வளர்கிறது
அது வாலாட்டும்
வாலாட்டு முன்னும் வாலாட்டிய பின்னும்
எலும்பு போடும் போதும்
திருடன் போன பின்னும்
கடிதம் வரும் போதும்
கனவு காணும் போதும்
எதிர் வீட்டு நாய் ஆட்டும் போதும்
கண்ணாடி பார்க்கும் போதும்
என் வீட்டில் நாய்
எப்போதாவது வாலாட்டும்
எப்போதும் ஆட்டுவது போல்
பேதம் புரியாமல் உற்று நோக்கினேன்
எனக்கும் வால் முளைத்திருப்பதாய்
நினைத்திருக்க வேண்டும்
வேகமாக ஆட்டத் தொடங்கியது

வாலில் கண் பொருத்தி பிம்பம் கண்டால்
கண்ணாடி ஆடுமோ?
நாயின் தாய் எதில் பொருத்திப்
பார்த்திருக்கும் இதுநாள் வரை?

ஆடிக்கொண்டிருக்கிறது.

### 2

எல்லோரையும் போல்
குரைக்க முடிவதில்லை இப்போதெல்லாம்
முயலவில்லை என்பதும்
காரணமாயிருக்கலாம்

இங்கு வரவேண்டிய 59ஆம் பக்கத் தொடர்ச்சி பின்னொரு பக்கத்தில்

படிப்பகம்

www.padippakam.com



வால் அறுபட்டதும்
வசதிதான்
பிறரால் முடிவதில்லை
கோபம் பயம் இன்ன பிற
அகவிளைவை முன்கூட்டி முடிவு செய்ய
இருந்தும்
வாலைக் குழைத்துச்
சொட்டும் அன்பொழுக்கை
யாரும் பருக இயலாமலானதால்
அவதிப்படுகிறது அடிமூட்டு.

## பிராயச் சிதைவு

நிதானப் பிராண்டல் தொடங்கியது
அழுக்கு நிறைத்து நகம் நீட்டிய
கரிய விரல் வழி

முதல் நடைக்காக
உடைபட்ட தேங்காய்களின்
ஓசையை விழுங்கின
கூடிய கர ஒலிகள்

பயிற்சியில் பல் போக
கூவிக் கோழையாக்கின
சில பல குரல்கள்

மீசையும் ஆசையும்
அரைத்தெடுத்தபோது மிகையான
வேகம் உந்த உண்டான வலி
ஒப்பாரிகளில் ஊமையானது

இன்னும் குமுறுகின்றன
நேசமுலாம் பூசி
குழைத்து சுட்டு உடைத்து
வேச முகம் காட்டி வேடிக்கை பார்க்க.

ஓசைச் சில்களை
ஒப்பாரிச் சிதறல்களை

படிப்பகம்

www.padippakam.com



உதிர்ந்த பூச்சுக்களை
நகத்தோடு அழுக்குகளை
கிளறக் கிளற

கூட்டியவையும் கழித்தவையும்
வகுப்பில் குப்பையாகி...
பெருக்கலுக்காகத் துடிக்கிறது உள்.

## பதிவு

கேள்வித்திரை கிழிக்கும்
பதில்களின் கூரில்
சிராய்ப்பில் திரும்பிய
முழங்காலில்
என்னைப் பிரித்து உன்னைத் திரிக்கும்
முறுக்கலின் பிரியில்
மாளிகையை அண்ணாந்து பார்த்து
விடுபட்ட மூச்சில்
முன் பல்லைச் சீர் செய்ய
பிடுங்கப்படும் கடைப்பல்லில்
காத்திருந்தவளின்
பூத்திருந்த கண்ணில்
வோட்டுப் போட்டு
ஓட்டையானவர் வாழ்வில்
உள்ளங்கை
விழுந்தெழுந்த கன்னத்தில்
கதவில் சிக்கிய
கட்டை விரலில்
திருத்திய போதும் திரும்பாத
படுக்கை விரிப்புப் பாதக் கறையில்
அன்பிற்காக
அலைபவன் மனதில்
சக்கரப்போரில் முகம் கறுக்கும்
சாலையோரச் சுவரில்

படிப்பகம்

www.padippakam.com


எதிரில் அமர்ந்தவன்
உறிஞ்சிவைத்த கோப்பையில்
கசிந்துகொண்டிருந்தது உயிர்.

## சாட்சியம்

கடையாணி இறுகிப்போன
கால நகர்வில் சிக்கிச் சிதைந்த
சிதைவுகளின் நீண்ட தொடர்
இடையிடை ஒன்றிரண்டு உயிர்த்தெழும்
கவனம் கவரப்பட தோலுரிக்கத்
தொடங்கும் வாழ்வு
கனவுகளின் சீழ் பிதுங்க
நினைவு ஸ்தம்பித்து நிலைக்கும்

தெம்பி எழுந்து மிதிக்க
சுழற்சி கூடும் சக்கரம்
கையாலாகாமல் காற்றைக் கிழிக்கும்
வெறுப்பின் விதைப்பில் கலவரப்பட்டு
கனவு களைந்து மறையும்

சொல்லப்படாதவற்றின்
சவ உறக்கத்தினூடே சலனப்படுத்தும்
உதிர்ந்த உண்மைகள்.



படிப்பகம்

www.padippakam.com

## பார்த்தசாரதி கோயில் யானைக்கு நன்றி

**—கல்யாணராமன்**

அதிர்ச்சியடையாதே
எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன்

உன் பாடல்களை அடகு வைத்துச்
சகுந்தலைக்கு மணம் முடிக்கும்படி
நிர்க்கதியாய்ச் செல்லம்மாவை
வருங்கால முதல்வர்கள் தத்தெடுக்க
ஒரு பிள்ளையற்றுத்
தரித்திரத்தில் தவிக்க விட்டுப் போன
யென்ன பெரிய மனுஷன்?

கண்ணம்மா சமைஞ்சதெப்படி என்றெழுதத் தெரியாத
நீயென்ன பெரிய கிவி.

"எல்லாரும் இந்நாட்டு மன்னர் —நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் —ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

ஒரு தடவை சொன்னா
நூறு தடவை சொன்னா மாதிரி
என்பதுகூடப் புரியாத
நீயென்ன பெரிய சக்தீ?

தீப்பெட்டியும் மண்ணெண்ணெயுமாய்
உன் கவிதைகள் விற்பது கிடக்கட்டும்

மயானத்திற்கு 20பேர்கூட வராத
செப்டம்பர் 11 போலவே இன்றும் நீ
டிசம்பர் 11 அல்ல பனிரெண்டுதான்
சூப்பர் ஸ்டார் பிறந்த நாள்தான்
இந்த தேசத்தின் திருநாள் இனி

நடிகனாகவோ பாடலாசிரியனாகவோ பிறந்திருக்க வேண்டும்
தொலைக்காட்சிகள் தோறும் ஜொலித்திருக்கலாம்
கவிஞர்கள் தினமாகவும் கொண்டாடியிருக்கலாம்

படிப்பகம்

www.padippakam.com



அசடே
காணி நிலமென்ன
கடற்கரையே வாங்கியிருக்கலாம் நீ.

ஐந்தில்
தாயை விழுங்கிய தறுதலை
பத்தில்
ஒன்பது வயது சிறுமியைக்
காதலித்த கயவன்
பதினான்கில்
எட்டுகூட முதிராத குழந்தைக்கு
நிர்ப்பந்தத்தால் தாலி கட்டிய மூடன்
பதினைந்தில்
தந்தையைத் தின்ற பாவி
பதினெட்டில்
ராஜாவின் கஞ்சாத் தோழன்
இருபத்து மூன்றில்
பைசாவுக்குப் பிரயோசனமில்லாத பத்திரிக்காசிரியன்
இருபத்தைந்தில்
புதுவைக்கு ஓடிய கோழை
இருபத்தெட்டில்
சுயசரிதை எழுதிய அதிகப்பிரசங்சி
முப்பதில்
அரசால் வேவு பார்க்கப்பட்ட
அமைதி குலைக்கும் ஆள்
முப்பைத்தைந்தில் ருஷிய விழிப்பிற்கு
மாகாளி தயவை இழுத்த பூர்ஷ்வா
முப்பத்தேழில்
கழுதையைத் தோளில் போட்டபடி
ஊரை வலம் வந்த பைத்தியம்!

அரிசியைக்
குருவிகள் தின்ன
'கோட்'டைப் பிச்சைக்காரன் எடுத்துக் கொள்ள
ஓட்டடா ரதத்தையென்று...

படிப்பகம்

www.padippakam.com



ஊரே அதிர
செல்லம்மாவின் கரம் பற்றி
அக்ரஹாரத்து முதல் மீசை திருகியபடி
சுப்புரத்தினம் பின்தொடர
பூணூலிட்ட கனகலிங்கத்தின் கறுப்புத்தோளை அணைத்தபடி
குளிருடன் பசியுடன் கனிவுடன்
நீ விட்டு விடுதலையாகி நின்ற
அந்தக் கணங்கள்
எந்தப் பாட நூலிலும் பதிவாகவில்லை

துலுக்கர்களோடு பழகினாயென்று
ஜாதிப் பிரஷ்டம் செய்த நாய்கள்
இன்றுன் பெயரை
ஊர் அதிரக் குலைக்கின்றன...

"பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்"
நெஞ்சில் ஈரத்தோடு எழுதிய வரிகள்
பாபர் மசூதி இடிப்பிற்குப் பயன்படுகின்றன

பூணூல் அறுத்த உன் வீரம்
வகுப்பறைகளில் மட்டுமல்ல
மேடை வானொலிகளிலும் ஒலிப்பதில்லை

ஊரறிந்த பார்ப்பானாய்
மாற்றிவிட்டார்கள் உன்னையும்...

மீசையும் முண்டாசுமாய்
சினிமா ஹீரோ போல்
புதுவருடக் காலண்டர்களில் மட்டும் நீ
பேச்சுத் தாசிகளின் வாயில்
விழுந்து புரளும்
ஒரு வெறும் பெயராய் நீ...

அதிர்ச்சியடையாதே
எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன்
புழுதியில் தெய்வ வீணை
புரளச் சகியாத எந்தப் பக்தனும்
அதைத்தான் செய்திருப்பான்
கருணைக்கொலை புரிந்த அந்த யானைக்கு
என் கோடானு கோடி நன்றி!

படிப்பகம்

www.padippakam.com

# ஜெயமோகன் என்கிற ஃபாஸிஸ்ட் ஓநாயின் வெறிக் கூச்சல்

—சாரு நிவேதிதா

1994 குற்றாலம் கருத்தரங்கம். தோப்பில் முகமதுமீரான் சில காகிதங்களைக் காண்பிக்கிறார். மலையாளத்தில் ஜெயமோகன் எழுதிய கட்டுரையின் நகல். அதில் தமிழ்ப் பெண்கள் கேரளப்பெண்களைப்போல் இல்லாமல் ஆண்களைப் போல் இருக்கிறார்கள்; அவர்களிடம் நளினமே இல்லை என்றும் இன்ன பிற அவதூறுகளும் எழுதியிருப்பதாகத் தெரிவிக்கிறார் மீரான். உடனே பக்கத்திலிருந்த கோமல் சுவாமிநாதன் 'இதை இப்போது வெளியிட வேண்டாம்; ரசாபாசமாகிவிடும்' என்று தடுக்கவே அப்போது அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இதைப்போல் எத்தனையோ சம்பவங்கள்; எத்னையோ ஒற்றை வரி அபிப்பிராய உதிர்ப்புகள்:

'ஐந்திணைப் பாகுபாடு சமஸ்கிருதத்தில் இருந்துதான் தமிழுக்கு வந்தது.'

'தமிழில் நாவலே இல்லை.'

'பிரம்மராஜன் கவிதை குரங்கு டைப் அடிக்கிறாற் போல.'

துக்குட்டிகள்.'

'நாகார்ச்சுனன் ஒரு போலி. ஹம்பக்.'

'காலம் அழிக்கும் முதல் பெயர் போர்ஹேஸின் பெயராகத்தான் இருக்கும்.'

இதெல்லாம் ஜெயமோகன் போகிற போக்கில் உதிர்த்து விட்டிருக்கும் அபிப்பிராய முத்துக்கள். இப்போது இவருடைய லேட்டஸ்ட் அபிப்பிராயம் பின் வருவது:

''தமிழில் மிகப் பிரபலமாக உள்ள வேடம் தார்மீகக் கோபமேயாகும். இவர்கள் சில சமயம் கோஷமிடுவதும் மேடையை

படிப்பகம்

www.padippakam.com



நோக்கிப் பாய்வதும் உண்டு. இன்னொரு பாவனை, கலகக்காரனின் பாவனை... தமிழ்ப் பையன்கள் 'கலக' உடைகளை அணிந்து கொள்கிறார்கள். பெரும்பாலும் இது பெர்முடா அண்டர்வேர், டீ-ஷர்ட் முதலிய கோடை கால உடைகள். சிற்றிதழ் சம்பந்தப்பட்ட கருத்தரங்குகளில் இவ்வாறு கலக உடையணிந்த சிலரை உலகத் தமிழ் மாநாட்டுக்கு அரசு அழைத்தது. அங்கே உரிய முறையில் உடையணிந்தே இவர்கள் சென்றார்கள். (காலி) சூட்கேஸ்களை முறைப்படி பெற்றுத் திரும்பினார்கள்.''

'நவீனத் தமிழ் இலக்கிய அறிமுகம்' என்ற ஜெயமோகனின் புத்தகத்திற்கு மதிப்புரை எழுதியிருக்கும் வெங்கட்சாமிநாதன் என்ற ரிட்டயர்டு விமர்சகருக்கு அந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட இந்த ஒரே ஒரு பகுதிதான் கிடைத்திருக்கிறது (இந்தியா டுடே: 26-8-98) என்றால், இதில் ஒளிந்து கிடக்கும் அரசியலை கவனிக்க வேண்டும்.

இந்த வெங்கட்சாமிநாதன் யார்? தமிழ் இலக்கியமே வெறும் பாலையாகக் கிடக்கிறது என்று சொன்னவர். இதன் அர்த்தம் என்னவென்றால் 'தமிழர்கள் முட்டாள்கள், கலை இலக்கியச் செழுமை அற்றவர்கள்' என்பதுதான். இதைச் சொல்வது யார் என்று பார்த்தால் அந்த நபரின் சட்டைக்கு உள்ளே மறைந்து கிடக்கும் பூணூல் நெருடுகிறது.

இப்போது அந்தப் பூணூலுக்கு ஒரு வாரிசு கிளம்பியிருக்கிறது. ஆரியப் பூணூல் சொன்னதையே வேறு வார்த்தைகளில் சொல்கிறது அதன் மலையாள வாரிசு— நாம் 'தமிழ்ப் பையன்கள்' என்று

விட்டால் 'உலகில் சிந்திய முதல் விந்துத் துளியே சமஸ்கிருதம் பேசியவனுக்குத்தான் சொந்தம்' என்று சொல்வார்கள் போலிருக்கிறது.

மேலைய க்ளாஸிகல் நாவல் அல்லது மலையாள நாவலை அளவுகோலாக வைத்து 'தமிழில் நாவலே இல்லை' என்று ஜெ. சொல்லும் போது மற்றொரு கலாச்சாரத் தளத்தில் இருந்து கொண்டு (மலையாளம் மற்றும் ரஷ்யன்) தமிழை அளக்கும் விபரீதம் நடக்கிறது. இதுதான் ஃபாஸிஸத்தின் அடிப்படைக் கூறு. இந்த ஃபாஸிஸம்தான் தமிழனை முட்டாள் என்கிறது. தமிழ்ப் பெண்களைக் கேவலப்படுத்துகிறது. தமிழ் நாட்டின் பாமர மக்களை பொறுக்கிகள் என்றும் ரவுடிகள் என்றும் ரஜினி ரசிகர்கள் என்றும் சாடுகிறது.

ரஷ்ய நாவலைப் போன்ற ஒன்றை நான் எப்படி எழுத முடியும்? அதற்கு குறைந்த பட்சம் வோட்காவும் மைனஸ் முப்பது

படிப்பகம்

www.padippakam.com



டிகிரி சென்டிகிரேட் குளிரும் இருந்தால்தான் சாத்தியம் என்பது இந்த ஃபாஸிஸ ஓநாய்க்குப் புரியவில்லை.

★

கலக உடை என்று ஜெ.வினால் கிண்டலாக வர்ணிக்கப்படும் பெர்முடா கால்சராய் பற்றி சில கருத்துக்கள்:

பாண்டிச்சேரியில் பல ஆண்டுகளாக பழக்கத்தில் இருந்து வரும் உடைதான் இந்த பெர்முடா கால்சராய். அங்குள்ள அரவிந்தர் ஆசிரமத்திலுள்ள ஆண்கள், பெண்கள் அனைவரும் அணியும் ஆடையும் அதுதான். அப்படியானால் ஜெ. சொல்வதுபோல் அரவிந்தாசிரமத்துப் பேர்வழிகள் எல்லாம் கலகக்காரர்களா?

ஆர். எஸ். எஸ். கட்சியின் உடையே காக்கி டிராயரும் வெள்ளைச் சட்டையும்தானே? ஜெயமோகனுக்கு தான் சார்ந்திருக்கும் கட்சி உடையின் ஞாபகம் வந்துவிட்டதா? அப்படியானால் ஜெயமோகனும் கலகக்காரர்தானே? ஆர். எஸ். எஸ். ஷாக்காவில் கலந்துகொள்ளும்போது மட்டும்தான் ஜெயமோகன் அந்த ஆடையை அணிவது வழக்கம் போலும். இனிமேல் அவர் இலக்கியக் கருத்தரங்குகளுக்கும் ஷாக்கா உடையுடன் வரலாமே?

சரித்திரத்தில் பின்னோக்கிப் பார்க்கையில், மேல்சாதிக்காரர்களின் ஒடுக்குமுறைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் ஆளானபோது அடக்குமுறைச் சாதனங்களில் ஆடையும் ஒன்றாக இருந்தது என்பது நமக்குத் தெரியும். உதாரணமாக தாழ்த்தப்பட்ட பெண்கள் தங்கள் மார்பில் வஸ்திரம் எதுவும் அணியக்கூடாதென்பது விதி. பின்னர், மார்பில் வஸ்திரம் அணியலாம்; ஆனால் உயர்சாதிக்காரர்கள் எதிரே வரும்போது வஸ்திரத்தை எடுத்துவிட வேண்டும் என்பதாக அந்த விதி மாறியது.

பிரபஞ்சனின் 'சப்பாத்து' என்ற கதை ஞாபகம் வருகிறது. பாண்டிச்சேரியை ஃப்ரெஞ்சுக்காரர்கள் ஆண்டபோது நடந்த கதை அது. அப்போது உள்ளூர்வாசிகள் பூட்ஸ், ஷூ எதுவும் அணியக் கூடாது என்பது நியதி. அந்த நியதியை மீறி அப்போது தமிழர் ஒருவர் ஷூ அணிந்து தெருவில்நடக்க, அதை அந்த ஊரே வேடிக்கை பார்த்ததாம்.

உடைகளைக் கொண்டும் மனித உடல்களை ஒடுக்குவது ஃபாஸிஸ்டுகளின் வழக்கம். இத்தகைய ஃபாஸிஸ மனோபாவம்தான் ஜெயமோகனின் அபிப்பிராய உதிர்ப்பில் தெரிகிறது.

ஜெயமோகன் குறிப்பிடும் குற்றாலம் கருத்தரங்கின் பின்னணியைப் பார்ப்போம்:

படிப்பகம்

www.padippakam.com



அந்த மூன்று நாள் கருத்தரங்கில் பெர்முடா நிக்கர் அணிந்திருந்தவர்கள் நான்கு பேர். பிரேம், ரமேஷ், விக்கிரமாதித்யன், நான். இந்த நான்கு பேரில் யாருமே உலகத் தமிழ் மாநாட்டுக்கு 'கோட் சூட்' போட்டுக்கொண்டு போய், (காலி) சூட்கேஸ்களை முறைப்படி பெற்றவர்கள் அல்லர். மாநாட்டுக்குச் சென்றவர்கள் தமிழவன், நாகார்ச்சுனன் போன்ற அமைப்பியல் வாதப் 'பையன் கள்'தான். அவர்கள் சூட்கேஸ் பெற்றார்களா, அல்லது சாக்கு மூட்டையில் அள்ளிக்கொண்டு வந்தார்களா என்பதெல்லாம் ஜெய மோகனுக்குத்தான் தெரியும். ஏனென்றால் தமிழர்களைக் காட்டிக் கொடுத்து சூட்கேஸ்களைப் பெறுவது ஜெயமோகனுக்குத் தான் கைவந்த கலையாகத் தெரிகிறது.

மேலும், அந்தக் கருத்தரங்கில் மூன்று தினங்களும் சிந்தனைத் தளத்தில் பல்வேறு கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. முதல் நாள் அமர்வில் "தலித் இலக்கியத்தின் நிலப்பரப்பில் கலகங்களின் சாத்தியப்பாடுகள்" என்ற கட்டுரையை ரமேஷ்–பிரேம் வாசித்தனர். இது பின்னர் கணையாழியில் வெளிவந்தது. தலித் சிந்தனை குறித்த பிரதானமான கட்டுரைகளில் இதுவும் ஒன்று. மூன்றாம் நாள் அமர்வில் "அங்கும் இங்கும் உடல்கள், இங்கும் அங்கும் கதைகள்" என்ற metafiction குறித்த கட்டுரை பிரேம்–ரமேஷினால் வாசிக்கப்பட்டது. இக்கட்டுரை தன்னளவிலேயே ஒரு metafiction ஆகவும் இருந்தது.

ஆனால், இக்கருத்தரங்கில் முதல்நாள் மட்டுமே கலந்து கொண்டு, தனக்குத் தெரியாத போர்ஹேஸ் பற்றி ஏதோ வாயில் வந்ததை உளறிக் கொட்டிய ஜெயமோகன் பிறகு 'தமிழ்ப் பையன்'களின் எதிர்வாதத்துக்குப் பயந்து, மற்ற இரு தினங்களும் கருத்தரங்கம் நடக்கும் இடத்தின் பக்கமே எட்டிப் பார்க்காமல் குற்றாலம் கடைத் தெருவில் சுற்றிக் கொண்டிருந்ததை எல்லாரும் பார்த்திருக்கிறார்கள்.

★

ஜெயமோகன் நிறைய எழுதுவதாகச் சொல்கிறார்கள். படித்துப் பார்த்தால் எல்லாம் 'அமீபிக் டிஸன்ட்ரி' வகையைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட மலக்கழிச்சலில் ஒன்று தான் அவருடைய சமீபத்திய நூலான 'நவீனத் தமிழ் இலக்கிய அறிமுகம்.' இதில் வாய்வழி பிஸாதுகளை ( gossip ) இலக்கிய வரலாறாகப் பதிவு செய்து அதை 'அறிமுகம்' என்று சொல்லும் பச்சை அயோக்கியத்தனத்தைச் செய்திருக்கிறார் இந்த நபர். உதாரணம்: கோணங்கியின் முந்தைய கதைகளை சயபவேல்

படிப்பகம்

www.padippakam.com



என்பவர் 'எடிட்' செய்ததாலேயே நன்றாக இருந்தன என்றும் பிந்திய கதைகளில் அது நடக்காததாலேயே அக்கதைகள் தோற்று விட்டன என்றும் சொல்கிறார் ஜெ. இதற்கு அவர் எந்த ஆதாரமும் தரவில்லை. தவிர சமயவேலுவோ கோணங்கியோ இப்படி நடந்ததாக தங்கள் பேச்சிலோ எழுத்திலோ எங்குமே பதிவு செய்ததில்லை. ஆகவே இது வெறும் பிஸாது. தனது சமகால எழுத்தாளன் மீது ஜெயமோகன் சுமத்தியிருக்கும் அபாண்டம். இப்படியாக ஒரு சரித்திர ஆசிரியனின் அறத்திலிருந்தே வழுவியிருக்கிறார் அவர்.

★

பிரபலங்களுக்கு வாரம் இருமுறை முப்பது பக்கங்களுக்கு கடிதம் எழுதுவது, தினமும் ஒருமுறை போனில் பேசுவது, பிரபலங்களின் அம்மா, மனைவி, மற்றும் குழந்தைகளை குசலம் விசாரிப்பது, பிரபலங்களின் மகிழ்ச்சி மற்றும் துக்கத்தைப் பகிர்ந்து கொள்வதாக பாவலா பண்ணுவது, ரிட்டயர்டு விமர்சகர்களுக்கு உருவி விடுவது போன்ற வேலைகளைத் 'தவறாமல் செய்து தன்னுடைய பெயரை எல்லாப் பத்திரிகைகளிலும் கண்டு களிக்கும் இலக்கியத் தரகர் ஜெயமோகனுக்கு கடந்த இருபது வருடங்களாக கலாச்சார தளத்தில் நாங்கள் செய்துவரும் பங்களிப்பைப் பற்றியும் அதன் தாக்கத்தைப் பற்றியும் புரிந்துகொள்ள இயலாது. நாங்கள் வாசிக்கும் புத்தகங்களின் ஒரு வார்த்தையைக்கூட புரிந்து கொள்ள முடியாத இந்த இடியட் எங்களைப் போலிகள் என்று சொல்வதற்கு முன்னால் ஏன் அப்படிச் சொல்கிறார் என்ற வாதத்தையும் முன் வைக்க வேண்டும்

அவரால் போலி என்றும் ஹம்பக் என்றும் பெர்முடா அண்டர்வேர் தமிழ்ப் பையன்கள் என்றும் வர்ணிக்கப்படும் பிரம்மராஜன், நாகார்ச்சுனன், மற்றும் நான் (முறையே) 'மீட்சி' பத்திரிகையிலும் இன்ன பிற சிறு பத்திரிகைகளிலும் எழுதியவைகளை ஜெயமோகன் வாசித்திருக்கிறாரா?

என்னுடைய எழுத்தை மட்டும் வைத்துச் சொல்வதானால் இறுகிப்போன கதை சொல்லல் முறையை 'லிபரேட்' செய்திருக்கிறேன். பிரதிக்குள் பலவிதமான அர்த்தங்களை உருவாக்கியிருக்கிறேன். வாசித்தலை ஜனநாயகத்துவப் படுத்தியிருக்கிறேன். (Democratization of reading என்பது பின்நவீனத்துவத்தின் மிக முக்கியமான விளைவாகக் கருதப்படுகிறது.)

Metafiction என்றால் என்ன என்பதை விளக்கி எங்களால் பல கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. பல கட்டுரைகள் மொழி

படிப்பகம்

www.padippakam.com



பெயர்க்கப்பட்டிருக்கின்றன. பல விவாதங்கள் நடத்தப்பட்டு அவை முழுவதும் பதிவு செய்யப்பட்டு பிரசுரமாகியிருக்கின்றன. Non–linear எழுத்து என்னுடைய கதைகள் மூலமாக அறிமுகமாகி பெரும் சர்ச்சைகளையும் விவாதங்களையும் எழுப்பியிருக்கிறது. வெறும் கருத்துத் தளத்தில் மட்டும் நின்றுவிடாமல் உடனுக்குடன் கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. கதைகள் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. Death of the author பற்றியும் Literature of trash பற்றியும் நீண்ட விவாதங்களும் மொழிபெயர்ப்புகளும் நடந் திருக்கின்றன. (Donald Barthelme, John Barth, ஃபூக்கோ, ரேமன் ஃபெடர்மென், ரொலான் பார்த் என்று எத்தனையோ மொழிபெயர்ப்புகளைச் சொல்லலாம்)

உலகச் சிறுகதைகளும் லத்தீன் அமெரிக்கச் சிறுகதைகளும் மொழிபெயர்க்கப்பட்டன. உலகின் மிக முக்கியமான எழுத்தா ளர்களான போர்ஹேஸ், மார்க்வெஸ், ஜுலியோ கொர்த்தஸார், அலெஹோ கார்ப்பெந்தியர், ரொனால்ட் சுகேனிக், வால்டர் அபிஷ் போன்றவர்களின் எழுத்துக்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் செயல்பாடுகளில் நான் ‘என் வாழ்வின் அர்த்தமே இதுதான்’ என்றுணர்ந்து முற்றிலுமாக என் னைப் பிணைத்துக்கொண்டிருக்கிறேன்; பங்களித்திருக்கிறேன்.

★

நாகார்ச்சுனனைப் போலி என்று சொல்லும் ஜெயமோக னுக்கு ஒன்றை நினைவுபடுத்துகிறேன். தமிழில் முதல் முதலாக textual analysis என்பதை அறிமுகப்படுத்தியது ஜி. நாகராஜ னின் ‘நாளை மற்றுமொரு நாளே’ நாவலைப் பற்றிய நாகார்ச் சுனனின் கட்டுரை. இதற்கு முன்னால் ‘விமர்சனம்’ என்பது ஏழெட்டு வார்த்தைகளை வைத்துக்கொண்டு மந்திரித்து தாயத்து கொடுக்கும் ஜிகிர்தண்டா வேலையாகத்தான் இருந்தது. ‘ஜீவ னுள்ள எழுத்து’, ‘சுயமான பார்வை’, ‘அர்த்தச் செழுமை’ ‘சுய அனுபவ வெளிப்பாடு’, ‘வாழ்வின் தர்ஸனம்’ என்பன போன்ற மோடி மஸ்தான் வார்த்தைகளே அவை. இப்படிப்பட்ட மோடி மஸ்தான்களையெல்லாம் விரட்டிவிட்டு விமரசனம் என்பதை சிந் தனைத் தளத்திற்குக் கொண்டு வந்தவை நாகார்ச்சுனன், பிரேம்-ரமேஷ் எழுதிய கட்டுரைகள்.

★

டெக்னலாஜியின் பாதிப்போடு கவிதையை எதிர்-கவிதையாக மாற்றியவர் பிரம்மராஜன். இவரை என்னென்னவோ குரங்கு சேஷ்டையெல்லாம் பண்ணி நையாண்டி செய்துவிட்டு, பிறகு அதற்

படிப்பகம்

www.padippakam.com



காக சுபமங்களாவில் மன்னிப்பு கேட்ட ஜெயமோகன் மீண்டும் பிரம்மராஜனிடம் தனது வழக்கமான குரங்கு சேஷ்டைகளைக் காட்டியிருக்கிறார்.

★

வசைகளை வீசுவதற்கு முன்னால் இவர் அதற்கான வாதங் களை வைக்க வேண்டும். அல்லாமல் நீதிபதியின் நாற்காலியைப் போட்டுக் கொண்டு, அதில் ஏறி நின்றுகொண்டு மெகா போன் மூலம் 'போலிகள், போலிகள்' என்று கூச்சலிடுவது ஃபாஸிஸம். காரணங்களை எடுத்துச் சொல்லாமல் தீர்ப்பு வழங்குவது ஃபாஸி ஸம். தனது நாவலை 'எடிட்' செய்ய சுஜதாவை அணுகியிருக் கும் ஒருவர் ஜட்ஜ் ஸ்தானத்தில் உட்கார்ந்திருப்பது எப்படி? தனது இந்து ஃபாஸிஸத்தை அவர் தனது தாய்மொழியான மலை யாளத்தில் முன் வைக்க முடியுமா? மலையாள இன வாதத்தைத் தமிழில் முன் வைத்து அதன் மூலம் தமிழர்களை இழிவு படுத்தி வெ.சா. போன்ற பூணூல் விமர்சகர்கள் கைதட்டலைப் பெறும் ஜெ. இதே வேலையை மலையாளத்தில் செய்ய முடியுமா? இந்த தேசத்தில் ஒரு ட்ரெஸ் போடக்கூடவா உரிமையில்லை. 'தமிழ்ப் பையன்' என்று சொல்லி இனத்தைக் குறிப்பிட்டு நக்கலடிப்பது, அதுவும் மலையாளத்தை தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் செய் வது மலையாள இன்வாதம் அல்லாமல் வேறு என்ன?

இதெல்லாம் ஜெயமோகனுக்கு எப்படி சாத்தியமாகிற தெனில், அவர் ஒரு இலக்கியவாதி அல்ல. அவர் ஒரு இந்து ஃபாஸிஸ்ட். மலையாள இனவாதி. அரசியல்வாதி. PRO வேலை மூலமாக மட்டுமே தான் எழுதுவதை இலக்கியமாக முன்னி றுத்திவிடும் சாமர்த்தியம் கொண்டவர். இப்போதுகூட 'கவிதா சரண் பத்திரிகையில் என்னைப் பற்றி இத்தனை பக்கங்கள் விவா தித்திருக்கிறார்கள்' என்று தன்னைப்பற்றிப் பூரித்துக்கொள்ளக் கூடியவர்தான். இவரை இனியேனும் உதாசீனப்படுத்துவதே இவ ருக்கு நாம் செய்யக்கூடிய நல்லுதவியாக இருக்கும்! ●

**குறிப்பு: கட்டுரையின் முதல் பக்கத்தில் ஒரு வரியில் பாதி எழுத்துகள் உதிர்ந்துள்ளன. அந்த வரி ''பிரேம்-ரமேஷ் கத்துக்குட்டிகள்.'' என இருக்க வேண்டும். திருத்தி வாசித்துக் கொள்க.**

படிப்பகம்

www.padippakam.com



| பழமலய் |

## தெருக்கள், சாலைகள்

தெருக்களையும் சாலைகளையும் குறித்துத்
திரும்பத் திரும்பச் சிந்திக்கிறேன்:

போகணுமே வரணுமே- என்று
போகிறார்கள், வருகிறார்கள்.
எண்ணுவதாகத் தெரியவில்லை.
ஏதாவது நடக்கும் போது கூட.

'சும்மா' என்பவர்கள் யாரும் இல்லை.
ஒரு காலத்தில் இருந்தார்கள்!
காரியமாக ஓடுபவர்களின்
காரியங்கள்
சும்மாவாக இருக்கின்றன என்பது சுவையானது.

சாலைகள், தெருக்கள்.
இழை வேறுபாடுதான்.
எது, எப்போது, எங்கே, எப்படி,

படிப்பகம்

www.padippakam.com



இன்னொன்றாக மாறுகிறது என்பதற்கு
அறுதியிட்டு யாரும் உறுதி கூற முடியாது.

ஓடுபவர்களுக்கு என்றாகிவிட்டன.
ஓரங்கள் இல்லாமல் போயின.
கல்நெய் ஊர்திகளைக்
கடா எருமைகளாக வடிவமைக்கலாம்!

எதிரே வருபவர்களிடத்தில்
பக்கத்தில் கடப்பவர்களிடத்தில்
எச்சரிக்கை வேண்டியிருக்கிறது.
மோதிக் கொள்வதும்
முகம் பார்த்துத் திட்டுவதும் அதிகரிக்கின்றன.

மக்கள்– நம்மைப் போன்றவர்கள்–
விரும்பப்படுபவர்களாக இல்லை.
எனக்கு என்னையும் வெறுத்துப் போகிறது!

அந்தக் காலத்தில் 'பூமிபாரம்'
அத்துணை ஒன்றும் பெரிதில்லை.
அதற்கே அவதாரங்கள்!

'இது எப்படி முடியுமோ–'
'இதுக்குத்தான் அணுக்குண்டு தயாரிப்பெல்லாம்!'

விரைவாக நடக்குமென்று தோன்றவில்லை.
எப்போது போட்டுக் கொள்வது–
எப்போது 'நரள்' அழிவது–
எப்போது நீயும் நானும் எதிர்ப்படுகையில்
நடுத்தெருவில் நின்று பேசிக் கொள்வது!

"என்னவோ பேசுகிறார்கள்!" என்று
ஒதுங்கிச் சூரியன் மறைவது–
"என்னதான் பேசுகிறார்கள்?" என்று
நெருங்கிச் சந்திரன் வருவது!

படிப்பகம்

www.padippakam.com



## —59ஆம் பக்கத் தொடர்ச்சி

"நீங்க எப்பவும் இந்திய சமூகத்தோட தனித்துவமான சமத் துவமின்மையைப் பத்தி ஒரு பதட்டத்தோடும் சீற்றத்தோடும் அணுகுறீங்க. அதனாலதான் இதுல உங்களுக்கு அதிர்ச்சி தரும் நிஜமெல்லாம் சாத்தியமாகுது. எங்களுக்கானா, இது ஒரு உலக ளாவிய வழமையாத்தான் படுது."

"அப்படியா சொல்றே?"

"உலகத்துச் சாமானியனைவிடவும் இந்தியச் சாமானியன் தீண்டாமையைப் பிடிமானமாக் கொண்ட சாதிங்கிற கூடுதல் விலங்கைப் பூட்டிக்கிட்டிருக்கிறான்கிறதைத் தவிர, மற்றபடி உலக முழுக்கவும் - உங்க மொழியிலேயே சொல்றதுன்னா - இன வேற் றுமை, நிறவேற்றுமை, மொழி வேற்றுமை, வெள்ளைத் தோல் மேலாண்மை, அதிகார அத்துமீறல், எளியோர்மீதான வன்கொ டுமை, தேசிய இன எழுச்சிகளுக்கெதிரான ஒற்றைத்துவ ஒடுக்கு முறை, உலகளாவிய பண்பாட்டுச் சீரழிவை முன்னெடுக்கும் ஊடக வாணிகம், நுகர்பொருள் வாணிகக் காலனியாதிக்கம் எனப் பஞ் சைகளைக் குப்பைக் கூளமாக்குகிற வல்லடித் தாக்குதல்களெல் லாம் தொடர்ந்து நடக்கத்தான் செய்யுது. ஒரு விலங்கு தன் னோட இரைக்காக மட்டுமே கொலை செய்யுது. ஆனா, மனுஷன் மட்டும்தான் கொல்லுகிற சந்தோஷத்துக்காகவே கொல்லுகிறவன். உலகத்துல சமத்துவத்தை நிலைப்படுத்துற அதிகாரமோ, அதிகா ரத்தை ஏவல் நாயாக்குற சமத்துவமோ இன்னும் எட்டாத கனவா கத்தான் இருக்குது. நீங்கதான் அடிக்கடி சொல்லுவீங்களே, பொதுமனிதன் பேசத் தெரிந்த விலங்காத்தான் வைக்கப்பட்டிருக் கிறான்னு. அந்த நிலை நீடிக்கிற வரைக்கும் மனிதனைத் தனித் துப் பார்க்கிறதுல ஒரு அர்த்தமும் இல்லன்னு தோணுது. உலக உயிரின ஒழுங்குப்படி, எத்தனையோ உயிரினங்கள் போல மனி தனும் ஒரு உயிரினம். ஒவ்வொரு உயிரினத்துக்கும் சில சிறப் புக் குணங்கள் இருக்கிற மாதிரி மனிதனுக்கு அறிவும் பேச்சும். இந்தச் சிறப்புக் குணங்களாலேயே ஒட்டு மொத்த மனித குலமே உச்சமான அறிவு ஜீவிகளாகவும், வாழ்க்கையின் புதிர்களையெல் லாம் விடுவிக்கக் கூடிய உரையாடலைக் கண்டெடுக்கிறவர்களாக வும் இருக்கணும்னு நாம ஏன் ஆசைப்படணும்?"

"எனக்கு ஆச்சரியமா இருக்குதுப்பா. எனக்கு அதிர்ச்சி தரும் நிஜமாகப் படுவது, உனக்கு உலகளாவிய வழமையாகப் படு கிறது. நாம எவ்வளவு நெருங்கி நிற்கிறோம்! ஆனா எவ்வளவு விலகி சிந்திக்கிறோம்! எனக்கு நேர் செய்யப்பட வேண்டிய அநி

படிப்பகம்

www.padippakam.com



யாயமாகத் தோன்றுகிற ஒன்னு, உனக்கு அலட்டிக் கொள்ளத் தேவையில்லாத உலக நியதியாகப் படுகிறது. உன்னைப் போன்றவர்களுக்காகத்தான் வரலாற்றில் நிறைய பொற்காலங்கள் சொல்லப்பட்டிருக்கு தெரியுமா? ஒடுக்கப்பட்டவர்கள் கட்டுக்கோப்பாக மௌனம் காக்கிறவரை ஹிட்லர் காலம்கூடப் பொற்காலம்தான். நாம் ஏன் ஆசைப்படணும்னு கேட்டே இல்லே? அறிவானது அகந்தையோடும் அதிகாரத்தோடும் எவ்வித ரசாயன வினையையும் ஏற்காத தனிமமாகப் பிரித்துக் கட்டப்படுகிற வரை நீ சொல்ற மாதிரி இது ஆசை மட்டும்தான். ஆசைப்படறது ஒன்னும் தப்பில்லியேப்பா. ஏன்னா, அறிவும் பேச்சும் மனிதனோட சிறப்புக் குணங்கள் மட்டுமில்ல, பல லட்சம் ஆண்டுகளின் பரிணாமப் போக்கில் வளர்த்தெடுக்கப்பட்ட உச்சங்கள். இப்போதைக்கு மனிதன் மட்டும்தான் இந்த உச்சங்களின் மிச்சங்களையும் சொச்சங்களையும் ஊடறுத்துச் செல்லக் கூடியவன்.''

''நீங்க எப்பவுமே உங்க எண்ணங்களை என்னோட பகிர்ந்துக்கிறதுக்கு முன்னுரிமை தந்திருக்கிறீங்க. அதிலும் நாம நம்ம இதழைத் தொடங்க முடிவு செய்ததிலிருந்து அதை ஒரு நோன்பு மாதிரி கடைப்பிடிக்கிறீங்க. ஒருவேளை உங்களுக்கும் எனக்கும் நடுவில் இட்டு நிரப்ப முடியாத இடைவெளி ஏற்பட்டுவிடக்கூடாதுங்கிற அக்கறை அதுக்கொரு காரணமா இருக்கலாம். இந்த எண்ணப் பகிர்வின் போது நீங்க காட்டுற தோழமையை நெனச்சா, அதுமாத்திரம்தான் உங்கள்ல நிஜம் மாதிரியும், அந்த நிஜத்தைப் பொதிஞ்சு வச்சுக்கத்தான் நீங்க உங்க ஆளுமைக்குள் அடைக்கப்பட்டிருக்கீங்களோன்னு மனசு கிடந்து உருகுது. உங்க எண்ணங்களின் பன்முகத் தன்மைகளை விவாதிப்பதின் மூலம் தலைசிறந்த உரையாடல் உருவாகியிருக்கலாம். ஆனா என்னோட போதாமையால பல சமயங்கள்ல நம்ம விவாதங்களை வெறும் தர்க்கமாக்கிட்டேனோங்கிற அச்சம் எனக்குண்டு.''

''தர்க்கமும் தேவைதான், இல்லியா?''

''இருக்கலாம். ஆனா, அது ஒரு கெட்டிக்காரத்தனமான பேச்சுதானே. மண்டையில நிரம்பி வழியிற தகவல்களைக் கொண்டு கொஞ்சம் புத்தி சாதுர்யம் உள்ள யாரும் அதைச் செய்யக் கூடும்; வெல்லக் கூடும். ஆனா உரையாடல் அப்படியில்லியே. அது சிந்தனை இழைகளால் நெய்யப்பட்ட பட்டுப் பீதாம்பரம் மாதிரி. இதுல என் போதாமை அல்லது அறியாமை என்பது என் வார்ப்பையும் வளர்ப்பையும் பொருத்த விஷயமாகிறது.''

''உன்னைப் பத்தி உரத்து சிந்திக்கணும் போல இருந்தா செய்திட வேண்டியதுதானே.''

படிப்பகம்

www.padippakam.com



"உங்களையும் சேர்த்துத்தான். நான் மரபு சார்ந்தவ· அதை சனாதன மரபுன்னு நீங்க சொன்னா எனக்கொன்னும் ஆட்சேபனை இல்ல. தொட்டில் பழக்கம்கிறது மரபு சார்ந்த பயிற்சிதானே. உடல் பழக்கமா தொடங்கி, மனப்பழக்சமா ஊன்றப்படுற விஷயம். கல்விங்கிறது மனப்பழக்கப்னு ஔவை சொல்றார். கல்வியைக் கற்கக் கற்க அறிவு பெருகுதுன்னு வள்ளுவர் சொல்றார். ஆக, அறிவுன்னு அறியப்படுற ஒன்னு மரபின் விளக்கம்தான். ஒரு குடும்பத்துல பெத்தவுங்களும் பெரியவங்களும் பகுத்தறிவுவாதிகளா இருந்தாலொழிய, முதல்ல ஒரு பெண் குழந்தை சொப்பு வைச்சு விளையாடத்தான் கத்துக்குது. போகப் போக சாதி சார்ந்த, சமயம் சார்ந்த, சாமி சார்ந்த, சடங்கு சாத்திரம் சார்ந்த, பாவ புண்ணியம் சார்ந்த பழக்க வழக்கங்களைத் தன்னோட பண்புகளா வளர்த்துக்குது. நான் அப்படி வளர்க்கப்பட்டவ. கூச்சநாச்சமில்லாம சொல்லணும்னா, எனக்கு சாமி வேணும்; சாதி வேணும்; சமயம் வேணும் எனக்கு அவை ஒரு அடையாளமாத்தான் வேணுமே தவிர மத்தவங்களை வித்தியாசப் படுத்துறதுக்காக இல்ல. நான் சின்ன வயசில இருந்து முஸ்லிம் களோடவே சேர்ந்து வளர்ந்தவ. நம்ம கல்யாணத்துல கலந்து கிட்ட முஸ்லிம்களைப் பார்த்தே நீங்க தெரிஞ்சிக்கிட்டிருப்பீங்க. எனக்கு ஒரு முஸ்லிம் அண்ணன்கூட இருக்கான். எங்க அப்பா அவனை வளத்து ஆளாக்கி வேலை வாங்கிக் கொடுத்தார். இதெல்லாம் உங்களுக்கும் தெரிஞ்ச சேதிதான்."

"மதங்களிடையே இதுமாதிரியான இணக்கம் பேணுவதுதான் தமிழ் மக்களின் தனிப் பெரும் பண்பு. இப்போது அது குலைக்கப்பட்டுவிட்டது ஒரு கொடுமை. வீதிகளில் வந்து மதங்களின் தனித்துவங்களை விவாதிக்காதவர்கள், இப்பொழுது அதையே விவகாரமாக்கிக் காலந் தள்ளும்படி மலினப்படுத்தப்படுகிறார்கள். ஆர். எஸ். எஸ்.சும் அதிலிருந்து கிளைத்த இன்றைய மதக் குப்பை அமைப்புகளும் ஒரு புதிய அசுர மதத்தை இந்து மதம் என்னும் பெயரில் வளர்த்தெடுத்துப் பரப்பி வருகின்றனர். இந்தியப் பெண்களை அந்த மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும் என்பதே இப்போதைய வேண்டுதலாகிறது. காரணம் பெண்கள்தான் சமூகத்தின் அனைத்துக் கட்டுமானங்களுக்கும் மேல் முறையீடில்லாத கவசமாக வசியப்படுத்தப்படுகிறவர்கள். சரி, மேலே சொல்லு."

"எனக்கு சாதியும் வேணும். சாதி சனமும் வேணும்."

"சன்னதம் வராத குறையாக சாதி வேணும் சாதி வேணும்னு சொல்ற நீதான் உன் சாதியைச் சேராத ஒருவனைத் திருமணம் செய்து கொண்டே."

படிப்பகம்

www.padippakam.com



''இந்த சமூக அமைப்பை நான் ஒத்துக்கிறேன்னு சொன்னா, அதன் அந்தரங்கமான நெகிழ்வுத் தன்மையையும் மீறலையும்கூட சேர்த்துத்தான். உங்களோடான என் திருமணம் ஒரு காலத்தில் மீறலாகக் கருதப்பட்டிருக்கலாம். இப்போ சமூகத்தின் நெகிழ்வுத் தன்மையா ஏத்துக்கிற நிலை வந்தாச்சு. நீங்க மட்டும் சராசரியாகவோ அல்லது அதற்கும் கொஞ்சம் கீழாகவோ இருந்திருந்தா நான் கொடூரமா சபிக்கப்பட்டிருப்பேன்; நினைவுகள்ல இருந்து துடைக்கப்பட்டிருப்பேன். ஆனா உங்களால இப்ப நான் யாரைவிடவும் மேன்மையாத்தான் மதிக்கப்படுறேன்: வேண்டப்படுறேன்.''

''தொட்டுக்கொள்ளும் சாதிகளிடையே இதுவெல்லாம் பிரச்சினையே இல்லேன்னு ஆகிவருது. இப்போ அவுங்க பிரச்சினையெல்லாம் தொடக்கூடாத சாதிகளின் எழுச்சியும் அறைகூவலும் தான் இல்லியா?''

''அப்படித்தான் படுது.''

''படிப்பு, சொத்து, பவிசு மூணும் கூடி வரவர அவர்களோடான உறவும்கூட சமூகத்தின் நெகிழ்வுத்தன்மையா ஏற்கப்படும் தானே. ஆனா இது வரப்புத் தகராறு மாதிரியான இரத்தத்தை சூடேற்றும் பிரச்சினை. அதனால் கொஞ்சம் கூடுதலான காலமும் குத்துப்பழி வெட்டுப்பழிகளும் தேவைப்படும்.''

''இருக்கலாம். ஆனா நான் தீட்டு பார்ப்பதில்லை; சாதி பார்ப்பதில்லை; கேட்பதில்லை. ஏன்னா அதெல்லாம் என் கணவருக்குப் பிடிக்காது. கட்டிய கணவருக்கு உவப்பாயிருக்கக் கற்றுக் கொண்ட மனைவி நல்லகதியடைவாள்னு நம்பிக்கையூட்டப்பட்டவ நான். காந்தி தன் மனைவியைக் கக்கூஸ் கழுவச் சொன்னார். நீங்க அதைச் சொல்லல என்பதற்காக வேணும்னா நான் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்.

''இது மாதிரியான அற்ப சந்தோஷங்களே உன்னை திருப்திப் படுத்திடும்னா என்னால ஆயிரம் சந்தோஷங்களை அள்ளித் தர முடியும். அவற்றுக்கான விலையையும் வலியையும் சுமப்பது எனக்கொரு பொருட்டே அல்ல, தெரியுமா?''

''தெரிஞ்சதனாலதான் எனக்குச் சரணாகதியே கரையேறி மீள்றதுக்கான வழியாகுது. ரொம்ப ஆயாசமா இருக்கும்போது, தரையில உட்கார்ந்து, சுவர்ல சாஞ்சுக்கிட்டுக் கால்களை நீட்டிக் கொள்ளத் தோணும். அப்போன்னு பாத்து தொலைக்காட்சிப் பெட்டியிலே தெய்வ சொரூபங்கள் வரும். சரேல்னு கால்களை

படிப்பகம்

www.padippakam.com



மடக்கிக் கொள்வேன். அது ரொம்ப அணிச்சையா நடக்கும். அப்போ நீங்க மந்தகாசமா ஓசையில்லாம ஒரு சிரிப்பு சிரிப்பீங் களே—நான் அசடு வழிவேனே. என்னோட மனசு அப்போ என்ன செய்யும் தெரியுமா? கன்னத்துலே போட்டுக்கும். காதைப் புடிச் சுக்கிட்டு தோப்புக்கரணம் போடும். ‘தெய்வமே அவர் குழந்தை மாதிரி. அற்பங்களுக்கு அப்பாற்பட்டவர். அவர் சிரிப்பு உன்னை அவமதித்தல்ல. என்னைப் பரிகாசம் பண்ண. இது தெரியாதா உனக்கு? நீதான் அவருக்குக் காப்பு’ன்னு கரைந்துருகும்.''

‘‘அப்படியா! நான் இன்னும் பிழைச்சுக்கிடக்கிற ரகசியம் இதுதானா?''

‘‘கேலி பேசாதீங்க.''

‘‘இதுக்கு இன்னொரு முகம்கூட இருக்குப்பா. அதுதான் முக்கியமான முகம்கூட. இந்த வேண்டுதலை நீ ஒரு மனைவி யாய் அல்லாமல் ஒரு தோழியாய் இருந்து செய்திருந்தால் அதற் கொரு மனித நேயப் பொருள் இருந்திருக்கும். அப்படியல்லாமல் தெய்வக் குற்றத்திற்காக எங்கே நான் தண்டிக்கப்பட்டு, நீ அமங் கலியாய் இந்தச் சமூகத்தில் சீரழிய நேருமோ என்னும் அச்சத் தால் செய்து கொண்ட தன்னலம் பேணும் வேண்டுதல்தானே இது? எவ்வளவு சிறந்த பெண்மணிக்கும் இந்தச் சமூகம் எழுதி வைத்துள்ள தீர்ப்பு இதுதானே. உன்னோட அன்பைச் சந்தே கிக்கிற கேள்வியா நீ இதை எடுத்துக் கொள்ளாதே. பெண் படும் பாடு பற்றிய பிரச்சினையாகவல்லவா இது பார்க்கப்பட வேணும்.''

## கோணல் மரங்கள்

‘‘நான் ஒரு மரம்ங்க. வளை சல் நெளிசல் இல்லாம செங் குத்தா வளர்ந்த மரம். தென்ன மரம்னு வச்சுக்கங்களேன். இந்த மரம் மரபுங்கிற மண்ணுல தன் வேர்களை மட்டும் ஊனி நிக்கல; மண்ணுக்கு மேல வளர்ந்துள்ள தன் முழுவெளிப்பாட்டோட புவி ஈர்ப்புப் புள்ளியைக்கூட அதன் வேர்களுக்கு நடுவிலேயே நன்கு பத்திரப்படுத்திக்கொண்டுவிட்ட மரம். இந்த மரத்துக்கு சொந்த சந்தோஷங்கள்ங்கிறது சமூக மரியாதையைப் பெறுகிற சந்தோ ஷங்கள்தான். மணமாகி வந்த புதுசுல நீங்களும் என் மாதிரி தான்னு நினைச்சு ஏமாந்துட்டேன். ரொம்பத் தாமதமாத்தான் தெரிஞ்சது நீங்க ஒரு கோணல் மரம்கிறது. இதை ஒரு பாராட்

படிப்பகம்

www.padippakam.com



டாத்தாங்க சொல்றேன். எப்பவுமே நேரா வளர்ந்த மரத்தைவிட கோணல்மரம் என்னை அதிகம் கவர்றதுண்டு. கோணல் அதுக்கு சிறுமைன்னு நான் ஒருநாளும் நினைச்சதில்ல; அது ஒரு அறைகூவலின் சின்னம். கலகத்தின் வெளிப்பாடு. மரத்துக்கேற் பட்ட சூழ்நிலை நெருக்கடிகளை உடைத்துக்கொண்டு தன் இருப் பைத் தகவமைத்துக் கொண்ட வெற்றி வரலாறல்லவா அந்தக் கோணல். வெப்பத்தை, வெளிச்சத்தை, 'வெளி'யை மூர்க்கமாய்த் தேடித் திமிறி எழுந்து நடந்த தடம் அது. மரபில் அது வேர் பாய்ச்சி நின்றாலும், அதன் வெளிப்பாடு முற்றமுழுக்கத் தன் னுறுதிமிக்க தன்னிருப்பை நிலைநாட்டும் தன்னுரிமைச் சின்னம். கோணல் மரத்தோடு எனக்குள்ள நட்பைக்கொண்டே மாற்றுச்சிந் தனையில் எனக்குள்ள ஈடுபாட்டை அளக்கத் தோன்றுகிறது. ஆனால் என்னால் கோணல் மரமாக முடியவில்லைங்கிறதுதான் விசனிக்க வேண்டிய விஷயம். முடிந்ததெல்லாம் மாற்றுச் சிந்த னையாளர்களைக் கோணல் மரங்களாகப் பாவித்து வியக்கத் தோன்றுவதுதான்.''

''சரி. என்னைப் பற்றிய விமர்சனம் முடிந்ததில்லையா?''

''இப்பதாங்க தொடங்கவே போறேன். நமக்குத் திருமணம் ஆன புதுசுல நீங்க என்னோட எல்லாப் போக்குகளுக்கும் ஒத்து வந்தீங்க. உங்களோட 'முரண்பட்டுடக்கூடாதுங்கிறதில நானும் கவனமா இருந்தேன். மெல்ல மெல்ல எனக்கொரு விழிப்பு வந் தப்பதான் தெரிஞ்சுது நீங்க சந்தோஷப்பட்டதெல்லாம் என்னோட சந்தோஷத்துக்காகத்தான்னு. அண்மையில காலஞ்சென்ற காஞ்சி சங்கராச்சாரியார், குடும்பத்தில் இருந்துகொண்டே பற்றற்று இருப் பது எப்படிங்கிறதுக்கு ஒரு உதாரணம் சொல்லியிருந்தார். வெள் ளரிப்பழம் கொடிகளுக்கிடையே காம்பு கழன்று கிடக்கிற மாதிரி நாம இருக்கணுமாம். உங்களை நான் புரிஞ்சிக்கிட்ட போது எனக்கு இந்த உதாரணந்தான் நினைவுக்கு வந்தது. உங்களுக்கு ரொம்பவும் பொருந்தக்கூடிய உதாரணம். மௌடிகங்களும் அர்த் தமின்மைகளும் பெருகிப்போன இந்த சமூகத்தின் நடுவுல நீங்க உங்க அர்த்தங்களோடு காம்பு கழன்று கிடந்தீங்க. பிறந்த ஊரில் தீக்கிரையாக்கப்பட்ட வீட்டையும், பணிபுரிந்த இடத்துல நிரந்தரமாய் வேலையையும் விலை கொடுக்கும்படியாக உங்க கலக வெளிப்பாடுகள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும் கூட எழுத்தை ஆயுதமாகக் கொண்ட ஒரு தனிமனித இயக்க மாக நீங்க அடையாளப்பட்டது நம்ம இதழ் மூலமாத்தான். இந்த இதழ்தான் உங்க ஏவுகணைகளுக்கான உறுதியான தளம். உங்க ஆளுமையின் கலகப்பரிமாணங்களையெல்லாம் அசாதரணம"

படிப்பகம்

www.padippakam.com



வெளிக்கொணரும் செயலூக்கி. இதுல நீங்க வாழ்ந்து காட்ற சந்தோஷம் என்னையும் தொத்திக்கிடுச்சு. இதுக்கான விலை பத்தி யார் கவலைப்பட்டா. என் கைக்கு ரெண்டு வளையல் பண்ணிப் போட்டுக்கிட்டா தேவலை. கழுத்துல ஒரு சரடு கிடந்தா தேவலை. ஆத்திரம் அவசரத்துக்கு அடகுக் கடைக்குப் போறதுக்குன்னு-அப்பப்ப இதழுக்குத் தாள் வாங்கத்தான்– ஒரு மோதிரம் மூக்குத் தின்னு ஒன்னு ரெண்டு வீட்ல இருந்தா நல்லாத்தான் இருக்கும். இதையெல்லாம் வாங்கிக்கொடுக்கிறது உங்களுக்கு ஒரு பெரிய விஷயமில்ல. ஆனா, படைக்கிறவன் பூவுக்குள்ள வாசம் வைக்கிறமாதிரி நம்ம இதழின் இதழ்களுக்கு வாசம் ஏத்துறதுல திரவியம் கரையுது. எனக்கும் ‘என்ன இருந்தாலும் நான் ஒரு சாதாரண மனுஷிதான்’னு காட்டிக்கிறது வரவர வெட்கப்படும்படியான விஷயமாப் போயிடுச்சு. ‘எனக்கு நான் உதவிக் கொள்றதவிட அதிகமாய் உதவுகிறவர் என் துணைவியார்தான். எனக்கு அது மூன்றாவது கண் மாதிரி’ன்னு நீங்க மற்றவங்ககிட்ட சொல்லிக்கும் போது, இருக்கிறதையெல்லாம் கழட்டிக் கொடுத்துடமாட்டமான்னு இருக்குது. இருந்தாத்தானே கழட்டிக் கொடுக்க?’’

‘‘இதுக்காகவாவது ரெண்டொன்னு வாங்க முயல்றேம்பா?’’

‘‘முயன்றா சரிதான். ஆனா இந்த விவாதத்துக்கு இது ஒரு விஷயமே இல்ல. விடுங்க. இப்ப நீங்க ஒரு சாதியற்றவரா உங்களை நிலைப்படுத்திக்கிட்டீங்க. இதுல இருக்கிற அவலம் என்னன்னா ஒருவர் தன்னைச் சாதியற்ற மனிதராகப் பிரகடனப் படுத்திக்கிறது மிகுந்த பரிகசிப்புக்குரிய பைத்தியக்காரத்தனமாகப் பகுத்தறிவாளர்களாலேயே கருதப்படுவதுதான். பெரியாரின் எலும்புகளைக்கூட தமிழ் மண் அவ்வளவு விரைவாக மட்கடித்துக் கரைத்துவிட்டது. உங்களைப் பொறுத்தவரை ஒரு அதிசயம் போல 17 வயதில் எழுதப்பட்ட உங்கள் முதல் நாவலிலிருந்தே சாதிப் பெயர்களைத் தவிர்த்திருக்கீங்க. அதே நேரத்தில் பார்ப்பன மொழியை பாகுபடுத்துறதுல குறியா இருந்திருக்கீங்க. உங்க மனசில ஒரு மூலையில அந்த மொழி மேலே உங்களுக்கு ஒரு பரிவு இருக்குமோன்னுகூட நினைக்கத் தோணுது. ஏன்னா நீங்க எந்த சந்தர்ப்பத்திலும் அந்த மொழியை ஏகத்தாளப்படுத்தல. எப்போதும் உங்களுக்கு மதம் புடிச்சதில்ல. தமிழகத்தின் வெகு மக்கள்கூட அண்மைக்காலம் வரை மதம் பிடிக்காத பக்தர்களாகத்தான் இருந்தாங்கன்னு நீங்க சொன்னதையும் சேர்த்து நினைச்சுக்கிறேன். சிவன், முருகன், ஓம் என்னும் சொற்களில் மயங்கி வகைக்கொரு பாட்டு எழுதினீங்கன்னு ஞாபகம். இன்னிக்கு எல்லாத்தையும் விலக்கியாச்சு... உங்களை ஒரு நாத்திகர்

படிப்பகம்

www.padippakam.com



என்பதைவிட 'கடவுளைப் பற்றிக் கவலைப்படாதவர்'னா பொருந்தும். நீங்க ஒரு நாத்திகர்னு அறியப்பட்டா உடனே இந்துவாக ஏத்துக்கக்கூடிய வாய்ப்புண்டு. உலகத்திலேயே ஒரு இந்துவால்தான் நாத்திகனாயும் இருக்க முடியுமாம். இந்துக் கடவுள்களாக அறியப்படுவனவற்றைக் கேள்விக்குள்ளாக்குறதில நீங்களும் நாத்திகர்தான். இவ்வளவு 'எதிர்வு'களுக்குப் பிறகும் உங்களோட ஒன்னா நடக்குறதுல எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லங்கிறதுதான் உங்க இயல்பின் சிறப்பு. ஒட்டுமொத்தப் பாமரக் கணிப்பா சொல்றதுன்னா உங்களுக்கு சாதி வேணாம்; மதம் வேணாம்; சாமி வேணாம். மனிதர்கள்கூட மனிதப் பிரச்சினைகளுக்காக மட்டும்தான் வேணும்னு தோணுது. ஆனாலும் நீங்க புலால் மறுத்தவரா இருக்குறீங்க. அண்ணாந்துதான் நீர் பருகுறீங்க. இடது கையால் ஒரு பொருளை எடுத்து வாயில் போட்டுக்கொள்ள கூசுறீங்க. நோயுற்ற காலத்தில்கூடக் குளிச்சாகணும்னு பிரச்சினை பண்றீங்க. நீராலும் நெருப்பாலும் விழுப்பு கழிக்கிற சனாதனிகூட இவற்றில் ஒன்றிரண்டு ஆச்சாரங்களை விட்டுவிடத் தயாராயிருப்பார். ஒருமுறை உங்க வகுப்பு மாணவனை அடிச்சு, வலதுகை அஞ்சு விரலும் மணிக்கட்டும் பெரிசா வீங்கிப்போய் வந்தீங்க. அதைப் பார்த்து காரணம் தெரிஞ்சிக்கிட்டப்போ, உங்க கை வீக்கத்துக்கான பதைபதைப்பைவிட 'என்ன ராட்சசத்தனமா ஊரான் வீட்டுப் புள்ளையை அடிச்சிருப்பீங்க'ன்னு உள்ளுக்குள்ள கோபம்தான் பொங்குச்சு. "எதுக்கு இந்த மாதிரி பண்றீங்க? ஒன்னு அடிக்கிறதை விடணும். இல்ல, அடிச்சுத்தான் ஆகணும்னா பிரம்பு வச்சுக்கிட்டு அடிக்கணும்"னு நான் சொன்னப்போ, "இதுவரைக்கும் நான் பிரம்பைப் பயன்படுத்தியதில்லப்பா. அவன் அனுபவிக்கிற வலியில பாதியாவது நான் அனுபவிக்க வேணாமா. அதுக்குத்தான்"னு நீங்க சொன்னீங்களே. ஒரு நிமிஷம் கதிகலங்கி என்னையே நான் சபிச்சுக்கிட்டேன். இது மாதிரியான ஒழுக்க மதிப்பீடுகள்லாம் உங்களை என்னவாகக் காட்டும்?"

" என்னைக் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டிய விமர்சனப் பொருளாக முற்படுத்துறியா?"

"இப்போது பேசப்படும் கலகப் பண்பில் சுத்தம்×அசுத்தம் என்பதெல்லாம் ஒரு பிரச்சினைதானே?"

"படுகளத்தில் பாதிக்கப்பட்டவனாக நிற்பவனிடம் எதிர்பார்க்கக் கூடாத ஒன்றை என்னிடமிருந்து அந்நியப்படுத்துவதால் நான் ஒரு கருத்தியல் நடிகனாகலாமே தவிர, என் நம்பகத் தன்மைக்கு இது சான்றாகிவிடாது. பூமணி எழுதிய ஒரு கதை. வெகு காலத்திற்கு முன்பு படித்தது; ஒடுக்கப்பட்ட ஒருவன்,

படிப்பகம்

www.padippakam.com



தாகத்தால் நாவறண்டுபோய் தன் எதிரே உள்ள நீர் நிலையில் இறங்கி நீர் பருகக் குனிகிறான். அதில் மலம் மிதந்து கொண்டிருக்கிறது. என்ன செய்ய. இதைவிட்டால் வேறு வழியில்லை. தன் புறங்கையால் அதை ஒதுக்கிவிட்டு அந்த நீரை அள்ளிப் பருகுகிறான். இதைப் படித்த போது எனக்கு ரத்தம் கொதித்தது. ஆனால் என்னொத்தவர்களுக்கு முதலில் தோன்றியது அருவருப்புதான். என் ரத்தம் கொதித்ததற்கு, விதவையின் பிள்ளையாய் மேலே மேலே படித்துக் கொண்டிருந்த நான் சந்தித்த நெருக்கடிகளால் எனக்கேற்பட்ட தெளிவு ஒரு காரணமாயிருக்கலாம். உணர்வு ரீதியாய் நான் எங்கே நிற்கிறேன என்பதுதான் எனக்கு முக்கியம். என் நடைமுறைகளில் சில தொட்டில் பழக்கமாய் என்னைச் சிறையிட்டிருப்பது உண்மை. மற்றபடி மாற்றுக் கருத்துகளை முன்னெடுப்பதில் இவை எனக்குத் தடையாய் இருக்கவில்லை. என் ஓர்மைப்பாடு ஊத்தை விமர்சனங்களால் பின்னப்பட்டுவிடாது.''

''உங்களுடைய இந்த ஒழுங்கு முறைகள்ல எனக்கு முழுமையான உடன்பாடுண்டு. ஆனா உங்க பிடிவாதத்தை– ஒரு மாற்றுச் சிந்னையாளருக்கு வேண்டாத வைதிகப் பிடிவாதத்தை எதில் சேர்ப்பது?''

''சொல்லு.''

''ஒரு பொருள் அல்லது ஒரு மனிதரேகூட வேண்டாம்னா வேண்டாம்தான் உறவுகளை இப்படி வெட்டியெறிவதில் மனசு சொரியும் குருதியும் வலியும் உங்க வலிமை முழுவதையும் குடித்துவிட்டாலுங்கூட வேண்டாம்கிறதில விடாப்பிடியா இருக்கிறீங்க''

''இந்த இதழ் தொடங்கியதிலிருந்து பனிதர்களை எக்காரணம் கொண்டும் தவிர்க்கிறதே இல்லியேப்பா.''

''உறவுகளைமட்டும்தான் தவிர்க்கிறீங்க. ஆனால் அவர்களும் மனிதர்களாய்த்தான் இருந்து தொலைக்கிறார்கள். உங்களைத் தவிர்க்கத் துணிந்தால் உங்கள் ரத்தம்கூட உங்களுக்கு அந்நியம்தான், இல்லையா?''

''ஒரு பதிலைக் கேள்வியாக்குவது ஆற்றாமையின் வெளிப்பாடாகலாம். ஆனால் ஆறிப்போனதை ஆற்றாமைக்குள்ளாக்குவது கழிவிரக்கத்தின் வெளிப்பாடுங்கூட. நமக்கு அது வேண்டாம் என்று நினைக்கிறேன்.''

''நம்ம திருமணத்தில் எனக்கோ என் வீட்டாருக்கோ நீங்க ஒரு செலவும் வைக்கல. என்னோட தோழி என்ன சொன்னா

படிப்பகம்

www.padippakam.com



தெரியுமா? 'இப்படிப்பட்ட கொள்கை வீரர்கள் தங்களுக்குப் பிடிக்காமல் போனா, கட்டிய துணியைக்கூட உருவிக்கிட்டு ஓட்டிவிடவும் தயங்கமாட்டாங்க, பாத்துக்கடி'ன்னா. அவளுக்குத் தெரிந்த உலகமும் நியாயமும்கூட கவனத்தில் வைக்கப்பட வேண்டிய விஷயமாத்தான் படுது. பின்னொரு சந்தர்ப்பத்தில் என் அண்ணன் ஒரு சின்ன மோதிரத்தை உங்களுக்கு அணிவிக்க வேண்டி என்ன பாடுபட்டுப் போனார் தெரியுமா? ஒரு மாற்றுக் கருத்துள்ளவருக்கு இருக்க வேண்டிய நெகிழ்வுத்தன்மை, மனிதர்களை நோகடிக்கிறோம் என்கிற பிரக்ஞை உங்ககிட்ட சுத்தமா இல்லங்கிறது ஒரு பெரிய குறை.''

''நாம் எதை நம்புறமோ, அதுல உறுதியா இருக்கணும்; எதை பேசுறமோ, அதுல உண்மையா இருக்கணும்; எதுவா இருக்க விரும்புறமோ, அதுல நேர்மையா இருக்கணும். இவைகள்ல நெகிழ்வுத்தன்மை அல்லது சமரசம்கிறது நமக்கான முகமூடிகளைத் தேடற வேலைன்னு நெனைக்கிறேன். அதோட என்னோட உறுதி அல்லது பிடிவாதம் அல்லது வைராக்கியம் அல்லது கல்நெஞ்சு என்பது என் தாயார் எனக்களித்த கொடை. ஜெயிச்சுக் காட்டணும்'கிற அவுங்க வைராக்கியம், 'நமக்குப் பிடிச்ச மாதிரி வாழ்ந்துகாட்டணும்'கிறதா எனக்குக் கையளிக்கப்பட்டது. 'எனக்குப் பிடிச்ச மாதிரி' என்பது சொற்களால் மாற்றீடு செய்யப்படாத சமூக சித்தாந்தமா என்னால் கற்பிக்கப்பட்டது. கற்பிதம் எப்போதும் நடைமுறைகளைக் குறைபாடுடையதாக்கும். என்னுடைய குறைபாடுகளும் அந்த வகையைச் சேர்ந்தவைதான். மூங்கில் எவ்வளவு உறுதியா இருக்குது! ஆனா உள்ள ஒன்னுமிருக்காது. அப்படின்னா வெற்றிடத்தைக் காக்கிறதுக்கா அந்த உறுதி? இல்லை. மூங்கிலுக்குள்ள இருக்கிற வெற்றிடம் எப்பவும் வெதுவெதுப்பா இருக்கும். அது மூங்கிலோட உள்ளுறை கோபம். அந்தக் கோபம் குளிர்ந்துச்சுன்னா மூங்கில் நொறுங்கிப் போகும். விம்மி விரிஞ்சதுன்னா மூங்கில் வெடிச்சுச் சிதறிடும். இங்கே உள்ளுறை கோபத்தின் மாற்றீடு வெற்றிடமாகிறது. உள்ளுறை கோபத்தின் கவசமான வைராக்கியத்தை வெற்றிடக் கவசமாய்க் காட்டிச் சிரிக்கத் தெரிந்தவன் வெற்றிகரமான மனிதனாயிருக்கக் கூடும். நான் அதில் தோற்றவனாய் இருக்கலாம். அதனால் ஏற்படும் நோவுகளுக்கெல்லாம் நான் யார்கிட்ட மன்னிப்பு கேட்கணும்னு தெரியில. மனசுல அந்த ஏக்கம் நிரந்தரமா இருக்குப்பா. சொல்லப் போனா அதுதான் என் ஆளுமையின் மிச்சம்.''

என் துணைவியாருக்கு என்னை வருத்திவிட்டோமோ என்

படிப்பகம்

www.padippakam.com



னும் கவலை வந்துவிட்டது. மேற்கொண்டு பேச சொற்களைத் தேடித் தவித்துக் கொண்டிருந்தார்.

நான் சிரித்துக் கொண்டே, ''கோணல் மரங்கள் பற்றிய உன் அபிப்பிராயம் எனக்குப் பிடிச்சிருக்குப்பா,'' என்றேன்.

அவர் முகம் மீண்டும் பளிச்சென்றாகி, ''கோணல் மரங்கள் மேல என் தோழமை வளர்றதுக்கு இன்னொரு காரணமும் உண்டு. அது நேரான மரத்தைவிடவும் வெகு நீளமா மண்ணோடு தவழ்ந்து போற மாதிரி வளர்ந்திருக்கும். அதுல ஏறி மளமளன்னு உச்சிக்குப் போயிடலாம். விழுந்துடுவோம்கிற பயம் இல்லாம உலுக்கி உலுக்கி ஊஞ்சல் ஆடலாம்,'' என்றார்.

''மாற்றுச் சிந்தனையாளர்களும் இது மாதிரி மனிதர்களோடு நெருங்கியிருப்பவர்கள்தாம். ஏன்னா மனிதர்கள் பற்றிய சிந்தனைதானே மாற்றுச் சிந்தனை.''

''சராசரி மனிதர்களில் பலபேர் பகுத்தறிவுத் தாக்கங்களுக்கு ஆட்படாமல், தங்களை சூளைக்குள் வைத்துச் சுட்டுக்கொண்ட பாண்டமாகி விடுகிறார்கள். இந்தப் பாண்டம் 'கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைக்'கத்தான் பயன்படும். விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய வெகுசிலர்தான் தன்னலம் மீறிய அழுத்தமான சமூகத் தாக்கங்களுக்குட்பட்டு பகுத்தறிவாளராகவும் சிந்தனையாளராகவும் உயர்றாங்க. இவுங்கள்ல மாற்றுச் சிந்தனையாளரா உருவாகுறவுங்களை ரொம்பவும் மரியாதைக்குரியவுங்களாவே நான் கருதுறேன். அவுங்கதாம் சித்தர் மரபைப் பட்டுப்போகாமல் காப்பாத்துறவுங்க. மனிதப் பண்பிலான சமத்துவத்தை முன்னெடுக்கிறவுங்க. மனிதர்களுக்கிடையிலான வேற்றுமைப் பொய்மைகளைக் கிழிச்செறியிறவுங்க. இந்த இடத்துலதான் எனக்கான கருத்து வேற்றுமையும் பிறக்குது. முக்கியமா மூன்று சேள்விகளுக்கு நான் விடை தேடணும். முதல்ல இன்றைக்குள்ள மாற்றுச் சிந்தனையாளர்கள் தங்களை மூர்க்கப்படுத்துகிறபோது, மனிதர்களை மதிப்பீடுகளற்ற வெற்றாள்களாய் மாற்றிவிட முனைகிறார்களோன்னு பயமாயிருக்குது. ராஜ்கௌதமனோட ஒரு நூல்ல கலந்துரையாடல் பகுதியில 'குடிக்காதேன்னா குடிக்கணும், பொய் பேசாதேன்னா பேசணும்'னு போட்டுருக்கு. இதுதான் கலகப் பண்பாடுன்னா, இதன் நிகழ்களம் என்னவாகும்?''

''அந்தப் புத்தகம் நம்மகிட்ட இருக்கு. அதைச் சரி பாத்துக்கிறது உனக்கு அவசியமாப் படல. அதைப் படிச்சபோது நீ யாராய் இருந்தே; உன் உள்வாங்கல் எப்படி இருந்ததுன்னு விளங்கிக்கொள்ள இது ஒரு அருமையான சான்று. 'குடிக்கா

படிப்பகம்

www.padippakam.com



தேன்னா குடிக்கணும்'னு அதுல ஒரு இடத்துல சொல்லப்பட்டிருக்கு. குடிக்கிறது ஒரு சீரழிவுக் கலாச்சாரம்னு உன் மனசுல பதிஞ்சிட்டதால அதுக்குச் சார்பா 'பொய் பேசாதேன்னா பேசணும்'னு நீயா சேர்த்துக்கிட்டே. அந்த உரையாடல்ல, 'செருப்பு போடாதேன்னா போடணும், குடை பிடிக்காதேன்னா பிடிக்கணும், படிக்காதேன்னா படிக்கணும்' என்றெல்லாம் வருது அவையெல்லாம் தலித்துக்களோட உரிமைகளை மீட்டெடுப்பதற்கு முன்வைக்கப்படும் உருக்குத்தனமான காரிய சாத்தியமுள்ள அத்துமீறல்கள். அவை ஏன் உன் கவனத்துக்கு வரவில்லை? இதுதாப்பா ஒரு அராஜகவாதியினுடைய அற மதிப்பீடுகள். போதையூட்டப்பட்ட சனாதன மரபு பேசுகிற நியாயங்கள். நம் உள்ளே இருக்கிற ஆதிக்கக் கழிவுகளின் வெளித்தள்ளல்கள்."

"ஐயோ!"

"பதறாதே. இது ஏதோ நமக்கு மட்டும் நேர்ந்துவிடக்கூடிய தவறு இல்ல. தவறுன்னு ஒத்துக்கிற பக்குவம் வந்தவுங்க எல்லாருக்கும் அசட்டையான சந்தர்ப்பங்கள்ல, மனசின் அடியாழத்தில் ஒளிந்திருக்கும் ஃபாசிசத்தின் பீறலாக, தன்னுணர்வற்று நேர்ந்துவிடுகிற தவறுதான். தலித்திய நோக்கில் எல்லாவற்றையும் நியாயமான மறுவாசிப்புக்கு உட்படுத்தும் ராஜ்கௌதமனுக்கும் இது நேர்கிறது. அதைச் சுட்டிக் காட்டத்தான் என்னோட குறிப்பு. இப்ப உன்னுடைய கேள்விக்கு வரலாம். அத்து மீறலின் அவசியமும் அதன் சாதக பாதகங்களும் எல்லா தளங்கள்லயும் ஒரே மாதிரிதான் இருக்கும். அதை விளங்கிக்கொள்ற மனங்கள்தான் வேறு வேறாகக் கூறுபடும். அத்து மீறலானது வெடிப்புகளாக, உடைப்புகளாக, கலகங்களாக, புரட்சிகளாகப் பல வடிவங்கொள்ளும். நீரில் அமுத்தப்பட்டவன் திமிறிக்கொண்டு மேலெழும்போது அறவழிகள், புறவழிகள் என்றெல்லாம் நீதிநெறி பார்த்துக்கொண்டிருக்க மாட்டான். அதற்குப் பெயர்தான் அத்துமீறல். இந்தப் புரிதல்தான் இங்கு முக்கியம்."

"அராஜகவாதியின் அறமதிப்பீடுகள்னு சொன்னீங்களே."

"இதுக்கு ஒற்றை வாக்கியத்தில் சொல்லணும்னா, இரண்டு முறை அதன் அராஜகப் போக்குக்காகத் தடைசெய்யப்பட்ட ஆர். எஸ். எஸ். அமைப்பும், அதன் தோழமைக் குழுக்களும், மத நல்லிணக்கத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, இஸ்லாத்துக்கு எதிரான துவேஷத்தை முச்சந்திகளிலும் நாற்சந்திகளிலும் நின்று கூவி விதைத்து, இஸ்லாமியர்களை நாடு கடத்தப்பட வேண்டிய அந்நியர்களாகச் சித்தரித்து, கடைசியில் அவர்கள் தன்மானத்தின்

படிப்பகம்

www.padippakam.com



குரல்வளையைக் கவ்விக் குதறிவிட்டு, இன்று கோவை கலவரத்துக்குப் பின் 'இஸ்லாமிய பயங்கரவாதிகளைத் தூக்கிலிடு; இஸ்லாமிய தீவிரவாதிகளைக் கழுவிலேற்று' என்று எச்சரிக்கை செய்து நியாயம் பேசுகின்றனவே, இதுக்குத்தான் அராஜகவாதிகளின் அற மதிப்பீடுகள்னு பேர்."

"விளங்குதுங்க."

"இப்பல்லாம் தொலைக்காட்சியில நிறைய புராணத் தொடர்களைப் பார்க்கிறியே. அவற்றையெல்லாம் கொஞ்சம் மத ஈடுபாடு கடந்த புரிதலோடு பகுப்பாய்வு செய்தேன்னா, பளிச்சுன்னு ஒரு விஷயம் புலப்படும். அதாவது, ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் அரக்கர்கள் பகைவர்கள். பகைக்குக் காரணம் அவர்கள் அரக்க குலத்தில் பிறந்தவர்கள்: அதி வல்லமையுள்ளவர்கள்; முன்னேறவும் முதன்மை பெறவும் துடிப்பவர்வள்; அதற்கும் மேலாக ரிஷிகள்–தேவர்களின் மேலாண்மையை ஏற்காதவர்கள் என்பதுதான். ஆகவே அழிக்கப்பட வேண்டியவர்கள். அழிப்பதே அறம் என்பதை அடிப்படை சூத்திரமாக்கிக் கொண்ட பின் வெறும் வஞ்சகமும் சூழ்ச்சிகளுமே தேவர்களின் வழிமுறைகளாகின்றன. பகவான்கள் எப்போதும் தேவ–ரிஷிகளின் பக்கமே. அவர்கள் அரக்கர்களுக்கு வரங்களும் தருவார்கள் – அவை பயனற்றுப் போக வஞ்சகமும் செய்வார்கள். ஆகவே, அராஜகமே தேவ–ரிஷிகளின் ராஜரீகமாகிறது. வெற்றி அவர்களுக்குத்தான். வஞ்சகம் வாய்மையாகப் பெயர் மாற்றம் பெற்றுவிட்டால் பிறகு மந்திரம் 'வாய்மையே வெல்லும்'தானே. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த ரிஷிகளின் கோத்திரங்களுக்குச் சொந்தம் கொண்டாடியவர்கள் இந்தியாவை வென்றுவிட்டனர்– ஆயிரம் ஆண்டுகள் தாமதமாகத்தான் என்றாலும் தென்னாட்டையும் சேர்த்துத்தான். வடபுலத்தைப் போராடி வென்றவர்கள், தென்புலத்தில் தஞ்சமென்று வந்து கலாச்சார ஊடுறுவல் நடத்தியே ஆளும் மன்னனுக்கு ஆசி வழங்கும் அந்தஸ்தை வென்றெடுத்துவிட்டார்கள். அதன் மூலம் 'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் மேற்பால்' அவர்களாக சமூக அங்கீகாரம் பெற்றார்கள். இன்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் அதே போன்றதொரு சமூக மாற்றம் கோரும் வெற்றிக்கான போர் திட்டமிடப்பட்டு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு அரக்கர்களாய்ப் பகைக்கப் படுகிறவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய இந்தியர்கள். வெற்றியின் இலக்கு இந்தியாவின் பன்முகப் பரிமாணங்களையும் 'இந்துத்துவம்' என்னும் ஒற்றை நாமத்திற்குள் அடக்குவது. தென்புலத்துத் தமிழ்ச் சமூகத்துக்கு தொன்றுதொட்டுத் தொடர்ந்துவரும் மூலப்பண்பு ஒன்று உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



அழியாமல் மீள்வதில் அருகம் புல்லுக்கொரு ஆற்றல் உண்டு. ஏழு முறை உழுதுழுது அதன் வேர்முனை ஈறாகப் பொறுக்கியெடுத்த பின்னும், மண்ணிடை நுணுங்கி மறைந்து கிடந்த அணுவளவு கணுவிலிருந்து அது மீண்டெழுந்து முளைத்து நிலம் மூடி படர்ந்துவிடும் தமிழுக்கும் அந்தத் தகவமைப்பு உண்டு என்று தான் சொல்ல வேண்டும். வடமொழியின் பல்முனைத் தாக்குதலில் தமிழின் கிளை மொழிகளாகிய மற்ற திராவிட மொழிகள் யாவும் தேவநாகரி எழுத்தொலித் தாக்கத்தை உள்வாங்கி இணங்கிப் போயின. தமிழ் மட்டும் கால மாற்றத்திற்கேற்ற தகவமைப்போடு தன் வேர்த் தன்மையை இழக்காமல் மக்களின் நாவில் யுகங்களை ஊடறுக்கும் மொழியாகத் தொடர்ந்து உயிர்த்திருக்கிறது. அப்படிப்பட்ட மொழியின் சாரம் வளர்த்த மூலப் பண்பு அது. பார்ப்பன வருகையில் அறிமுகமான நால் வருணக் கோட்பாட்டால், தமிழ்ச் சமூகத்தில் நிலம் சார்ந்த தொழில்வகைப் பிரிவுகள் சாதிகளாய்க் கூர்மையுற்று, வடக்கே வருணத்துக்குள்ளும் அடங்க மறுத்த திராவிடரை அவருணப் பஞ்சமர்களாய்ப் புறந்தள்ளிய வருணாசிரமக் கோட்பாட்டின் பிறழ்வகை நீட்சியாக, இங்கே தன்னினத்தின் ஒரு பகுதியையே பஞ்சமர்களாக ஆக்கும் அளவுக்கு சாதிமுறை வேர் பரப்பிக் கொண்டாலும் - பார்ப்பனரின் அந்நியப்படும் கோட்பாட்டில் ஒவ்வாமை கொண்ட பார்வையடியாக வர்ணாசிரம சனாதனம் கொண்ட பார்ப்பன மதப் பற்றும், பார்ப்பனரையும் பார்ப்பன வேதங்களையும் முன்னிலைப் படுத்தும் பெருந் தெய்வ வழிபாடும், பார்ப்பன மேலாண்மை பேசும் சமஸ்கிருதக் கலாச்சாரமும் 'நமக்குப் புறம்பானவை' என்னும் ஒரு பொதுமனிதக் கருத்தோட்டம் நிலத்தடி நீரோட்டம் போலத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இது வற்றும் போலிருந்த ஒரு கட்டத்தில்தான் சித்தர்கள் தோன்றினர். பின்னர் இந்திய சுதந்திரம் என்னும் பெயரில் மீண்டும் வற்றடிக்க முயன்ற நேரத்தில்தான் பெரியார் தோன்றினார். 'பெரியார் பெரிதாய் உழைத்தார்; கால தேச வர்த்தமானங்களைத் தன் கைக்குள் வசப்படுத்தினார்; வென்றார்' என எளிமைப்படுத்திடக்கூடும் என்றாலும், தீக்குச்சியை நீர் பரப்பில் உரசி எரியவைத்துவிட முடியாதது போல, பெரியாரின் வெற்றிக்குப் பின்னால் இந்தத் தொல்குடியின் பின்புலமும் துணையிருந்ததை மறந்துவிடக் கூடாது. 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழக்கமிட்ட பெரியார் மற்ற திராவிட நாடுகளில் அடையாளமாகக்கூடக் கருத்துப் பரவல் நிகழ்த்தவில்லை என்பதும், பின்னர் தன் முழக்கத்தை 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று மாற்றிக் கொண்டதும் நாம் அறிந்ததே. இரண்டு முழக்கங்களையும் அவர் தன் கருத்துப் பரவலுக்கான தளமுழக்கங்களாகவே முன்னெடுத்தார். வென்றெடுக்கும்

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் முழக்கங்களாக அல்ல. அரசியல் நடத்துவதற்கான கட்டுமானப் பொருள்களை அவர் ஒருபோதும் சேகரித்ததாகத் தெரியவில்லை. தென்னிந்தியாவையே ஆண்டு, பின்னர் மெலிந்து போன அரசியல் கட்சியான நீதிக்கட்சி இவர் கைக்கு வந்தபோது கூட முதலில் அதை அரசியலிலிருந்து விலக்கி இயக்கமாகவும் பின்னர் சுயமரியாதை இயக்கம் தழுவிய திராவிடர் கழகமாகவும்தான் மாற்றிக் கொண்டார். வரலாற்றில் தன்னை ஒரு கருத்துலக மீட்பராகவே பொறித்துக் கொண்டவர் அவர்.

"ஆனா, இன்னிக்கு அவர் கண்ட கருத்துலகம் இருட்டுலகம் ஆகிக்கிட்டிருக்கே."

"உண்மைதான். ஆயிரங்காலத்து வரலாற்றுத் தூசை ஐம்பது ஆண்டுகளில் பெருக்கித் தள்ள முயன்று கணிசமாக வெற்றியும் பெற்ற அவருக்குப் பின்னால் அவர் விதைத்த கருத்துகள் நீரின்றிக் கருகும் நடவுப் பயிர் மாதிரி கிடக்கும் வேளையில், இந்துத்துவத்தின் புத்துயிர்ப்புக் களமாக மாற்றப்பட்டிருப்பதுதான் இன்றைய கோவை மாநகரம். 1980 வரை கோவை அமைதியாய்த்தான் இருந்தது. அதற்குப் பின்னர்தான் ஆர். எஸ். எஸ். முழு வீச்சில் இயங்கத் தொடங்கியது. தொடக்கம் முதலே முஸ்லீம்களுக்கெதிரான கொச்சை முழக்கங்களைக் கட்டவிழ்த்துவிட்டு அவர்களை ஆத்திரமூட்டினார்கள்; தனிமைப்படுத்தினார்கள்; தற்காப்பு தேட வைத்தார்கள். அவர்களைச் சொந்த மண்ணிலேயே அந்நியப்படுத்தினார்கள். முஸ்லீம்கள் பெரும்பாலும் நடைபாதைக் கடை வியாபாரிகள்; வீட்டுப் பொருள் அங்காடியாளர்கள். அவர்களின் தொழில் நாணயத்தால் உறுதியான வாடிக்கையாளர்களைக் கொண்டவர்கள். அவர்களுக்குப் போட்டியாக நுழைந்த மார்வாடிகள் அவர்களுடைய சந்தையை அவ்வளவு எளிதாக வென்றெடுக்க முடியவில்லை. ஆகவே வணிகப்போட்டி மதப் பூசலாகக் கூர் தீட்டப்பட்டது. மார்வாடிகள் ஆர். எஸ். எஸ். காவிகளுக்குப் பணத்தைக் கொடுத்து, இந்து வாடிக்கையாளர்களை முஸ்லீம் கடைகளைப் புறக்கணிக்கத் தூண்டினர். காவல்துறையினர் முஸ்லீம் கடைக்காரர்களிடமிருந்து மாமூல் வசூலிப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். முஸ்லீம் அமைப்புகளில் சிலர் காவல் துறை மாமூலை நிறுத்தச் செய்து, தாங்களே வசூலிக்கத் தொடங்கினர். இதனால் காவல்துறையும் இவர்களுக்கு எதிராக வன்மம் கட்டிக்கொண்டு காத்திருந்தது. அதற்கு முன்பாகவே பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அவர்களைக் குற்றப்பரம்பரையாக முத்திரை குத்துவதுபோல் சோதனைச்

படிப்பகம்

www.padippakam.com



சாவடிகள் நிறுவப்பெற்றன. தேர்தல் நேரத்தில் 'நாங்கள் வென்றால் சோதனைச்சாவடிகளை அகற்றுவோம்' என்ற கட்சிகளின் உறுதிமொழி காற்றில் கலந்திருக்கும் போதே அவை அடித்து நொறுக்கப்பட்டன. இந்நிலையில்தான் போக்குவரத்துக் காவலர் செல்வராஜ் கொல்லப்பட்டார். கொன்றவர்கள் முஸ்லீம் சமூகத்தில் பிறந்த கொலைகாரர்கள். கொலைகாரர்களுக்குச் சாதியென்ன, மதமென்ன. ஆர். எஸ். எஸ். அமைப்பில் கோட்சேக்கள் இருக்கலாம் எனில், முஸ்லீம்களிலும் கொலைகாரர்கள் இருக்கக்கூடும்தானே. காவலரைக் கொன்றதாகக் குற்றம்சாட்டப்பட்ட வெறியர்களை முஸ்லீம்களே பிடித்துக் காவல்துறையிடம் ஒப்படைத்துவிட்டனர். நியாயமாய் அவர்கள்தாம் விசாரணைக்குட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் நடந்ததோ கோர தாண்டவம். காவல்துறையும் அவர்களுக்குத் துணையாக இந்துமுன்னணி, ஆர். எஸ். எஸ். போன்ற இந்துத்துவ அமைப்புகளும் சேர்ந்துகொண்டு முஸ்லீம் சமூகத்தையே பந்தாடிவிட்டனர். முஸ்லீம்களின் வணிக வளாகங்கள் அடித்து நொறுக்கப்பட்டன; சூறையாடப்பட்டன; இடிக்கப்பட்டன; கொளுத்தப்பட்டன. கொளுத்துவதற்கும் சூறையாடலுக்கும் அருந்ததியர்கள் பயன்படுத்தப்பட்டனர். முஸ்லீம் குடியிருப்புகள் வரைமுறையற்ற வன்முறைத் தாக்குதலுக்கு உள்ளாயின. இழப்பு 1000 கோடி என்று கணிக்கப்பட்டது. இதற்கும் மேலாக முஸ்லீம் இளைஞர்கள் 19 பேர் குத்திக் கொல்லப்பட்டனர்; சுட்டுக் கொல்லப்பட்டனர்; எரித்துக் கொல்லப்பட்டனர்; எல்லாம் பட்டப்பகலிலேயே, மருத்துவமனைக்குள்ளேயே. எல்லா ஊடகங்களிலும் வந்த செய்திகள்தான் இவை. நமக்குள்ள அதிர்ச்சி என்னவென்றால், தென்னிந்திய வரலாற்றையே திசைமாற்றித் திகைப்பூட்டவந்த இந்தக் கொலைகளால் அரசோ அமைப்புகளோ அரசியல் தலைமகளோ அதிரவில்லை; பதறவில்லை; கண்டுக்கொள்ளவில்லை; கண்டிக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நின்று, ஆறுதலும் ஆதரவும் காட்டி, அவர்களை அரவணைத்துக் கொள்ளக் காத்திருக்கிறோம் என்பதற்கு ஒரு அணுவத்தனை குறிப்புகூட இல்லை. வன்முறையாலோ வல்லடியாலோ பாதிக்கப்பட்ட முஸ்லிம் அல்லாதார் குடும்பங்களுக்குக் கண்ணிமைப் பொழுதில் கருணைத்தொகைகள் அறிவிக்கப்பட்டன. வீடுவாசலையும் சொத்துசுகங்களையும் வாழ்வதற்கான நம்பிக்கையையும் முற்றாகப் பறிகொடுத்துவிட்டு, அச்சத்தையே ஆடையாய்ப் பற்றிநிற்கும் முஸ்லீம்களுக்கு இழப்பீடு வழங்கவோ இழப்பை மதிப்பீடு செய்யவோ யாரும் அவசரப்படவில்லை. ஓடஓட விரட்டிக் கொல்லப்பட்ட 19 இஸ்லாமிய இளைஞர்கள் என்னவாக மதிப்பிடப்பட்டார்களோ. காவல்துறையினர் ஓடவிட்டு சுட்டுக்கொல்லும் 'குற்றவாளிகளுக்கு' இரங்கல் தெரி

படிப்பகம்

www.padippakam.com



விப்பதில்லை என்பதோடு, சிறப்புப் பதக்கங்களாலும் அலங்கரித்துக் கொள்வதுண்டுதான். இருப்பினும் இந்த மதக் கலவரத்தில் ஊறிய ஈடுபட்ட காவல்துறை ஆட்கள் இன்னும் குற்றவாளிகளாகச் சுட்டப்படவில்லை. முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரை இத்தனை புறக்கணிப்புகளையும் தூக்கியடிக்கும்படியாக– முஸ்லிம் தவிர்த்த, சமூகத்தின் அனைத்து மக்களும் சாதி கடந்து, மதம் டந்து, மொழி கடந்து, நிலம் கடந்து, வர்க்கம் கடந்து, தர்க்கம் கடந்து "வேணும் இந்தத் துலுக்கப்பயல்களுக்கு" என்று ஒருமித்த குரலில் தூற்றும்படியாகத் தகவல் தொடர்பு ஊடகங்களால் சபிக்கப்பட்ட கொடுமைதான் கொடுமையிலும் கொடுமை. இந்த ஒரு புள்ளியில் இந்துத்துவம் முற்றாக வென்றெடுக்கப் பட்டுவிட்டது. தன்மானமுள்ள அற்பப் புழுவையுங்கூட அடங்காச் சினத்துடன் அத்துமீறத் தூண்டும் கொடிய சூழல் அது. அவர்கள் அத்து மீறினார்கள். அவனவரது கண்டனத்துக்குமுரிய அருவருப்பான குண்டு வெடிப்புக் கலாச்சாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டார்கள். அதன் இலக்கற்ற நாசத்தில் அவர்கள் 'அந்நியரின் கைக் கூலிகள்' என்ற பெயரில் சிறுமைப்பட்டதைத் தவிர வென்றது ஒன்றுமில்லை. குண்டு வைத்தவர்களத்தனைபேரும் கூண்டோடு தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தாம். அதில் இருவிதக் கருத்தில்லை. ஆனால் அவர்கள் கையில் குண்டுகளை ஏந்தக் காரணமாயிருந்தவர்களை என்ன செய்வது? அரசு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டுவருகிறது. அந்தச் சட்டம் முதலில் இந்துத்துவ அமைப்புகள் மீதல்லவா பாயவேண்டும்? பாயுமா?"

"இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பற்றி எனக்கொரு சந்தேகம். இதுவரை 40ஆயிரம் படைவீரர்களைப் பலியிட்டிருக்கிற ஜம்மு-கஷ்மீர்ல இப்படியொரு சட்டம் இல்ல. காவல்துறையினராலேயே 35 ஆயிரம் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட பஞ்சாப்ல இல்லை. 'தீவிரவாதிகள்'னு முத்திரைக் குத்தப்பட்ட பல குழுக்களால நித்தம் நித்தம் கொத்து கொத்தாய் கொலை செய்யப்படுற அஸ்ஸாம் முதலான வடகிழக்கு மாநிலங்கள்ல இல்ல. மதக் கலவரத்துல 30.க்கு மேற்பட்டவுங்க செத்த மும்பையில் இல்ல. நக்சலைட்டுகளோட அதிகாரத்துல சில மாவட்டங்களையே தாரை வார்த்துக் கொடுத்திருக்கிற ஆந்திரத்துல இல்ல. நிலவுடமைக்காரர்களோட ரன்பீர் சேனா 50, 100ன்னு தலித் தொழிலாளிகளைக் கொல்ற பீகார்ல இல்ல. ஆனா தமிழ் நாட்டுல மட்டும் கோவை தொடர்குண்டுவெடிப்புல 60பேர் செத்தாங்க, அத்வானியக் குறிவச்சாங்கங்கிற நிலையில அவசர அவசரமா தடாவைவிட மோசமான பொடாவைக் கொண்டு வந்திருக்காங்களே! இதோட சூட்சுமம் என்ன?"

படிப்பகம்

www.padippakam.com



"சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கிறதில உலகத்திலேயே நாங்கதான் உத்தமன்களாக்கும்னு அத்வானிக்கு புரியவச்சு ஆட்சியைத் தக்கவச்சுக்கறதுக்குத்தான்னு மலையப்பெருமாள் தெரு முனையில பூவிக்கிற பொம்பளை உங்கிட்ட சொன்னளே. அதுக்கு மேல எந்த சூட்சமமும் இருக்கிறதாத் தெரியிலப்பா."

"இதுல இன்னொரு கேள்வியும் இருக்குதுங்க. கோவையில் ஊரறிய மதக்கலவரத்தில் ஈடுபட்ட காவல்துறைக் குற்றவாளிகளைத் தண்டிக்க வக்கில்லாத அரசு இந்தப் 'பொடா' சட்டத்தைத் தூக்கி அவுங்க கையில கொடுக்சப்போவுதே, என்னாகும்?"

"பயங்கரவாதம் என்னும் பேய் கண்ட கண்ட கழுதைகளிடமெல்லாம் ஒண்ட இடம் தேடி அலையறதுக்குப் பதிலா காவல்துறையிடமே கம்பீரமா பவனி வரட்டுமேங்கிற கரிசனமாயிருக்கும். வேறென்ன சொல்ல? இதை யோசிச்சியா? பாரதிய ஜனதா கட்சிக்கு ஜெயலலிதாவோட நன்கொடை மூன்று பாராளுமன்ற அங்கத்தினர்கள். ஆனா கலைஞரின் நன்கொடை இந்தத் தமிழ் நாடே! கலைஞரோட வளர்ச்சி நம்மை பிரமிக்க வைக்குது. ஈழத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த 46 ஈழத்து அனாதைகள் நடுக்கடல்ல செத்தாங்க. அன்னிக்குப் பார்த்து 'ஈவ்டீசிங்'ல இறந்து போன சரிகாவின் வீட்டுக்குத் துக்கம் கேட்கப் போனதில ஒரு இரங்கல் தெரிவிக்கக்கூட கலைஞருக்கு மறந்து போச்சு."

"அரசியல் குப்பையில அர்த்தங்களைத் தேடுறது, புழுத்த பொணத்துல இதயத்துடிப்பை சோதிக்கிற மாதிரிதான். விடுங்க. இவ்வளவு நடந்த பிறகும் முஸ்லிம்கள் தங்களோட நியாயங்களைப் பேசாதவுங்களாகவே இருக்கிறதா எனக்குப் படுது. ஒரு குடியரசு நாட்டுல அவுங்க எப்படி மௌனம் சாதிக்கிறாங்க?"

"இஸ்லாமியத் தலைவர்களைப் பார்த்து நாம் கேட்க வேண்டிய கேள்வி. சட்டம் ஒழுங்கைக் காரணங்காட்டி தெருமுனைக் கூட்டங்கள் போடும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்படுகிறதா? பிற அமைப்புகளைக் கருத்துப் பரிமாற்றத்துக்காக அணுகுகிறார்களா? ஒன்றும் தெரியவில்லை. ஆரம்பத்திலேயே முஸ்லிம்கள் ஒரு முக்கிய புள்ளியில் இயங்கத் தவறிவிட்டார்கள் என்பது என் அபிப்பிராயம். அவர்கள் ஒன்றும் இந்த நாட்டில் தனிமைப்பட்டுப் போய்விடவில்லை. அவர்களின் நட்புச் சக்தியாக விளிம்புநிலை மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மதச் சிறுபான்மையினர் ஆகியோரைத் தொடர்புகொண்டு தங்கள் சமூக- அரசியல் இக்கட்டுகளைப் பகிர்ந்துகொண்டு, ஆர்எஸ்எஸ் மதப்பகைமை, அரசுப்புறக்கணிப்பு மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றைப் பகிரங்கப்படுத்தவும் எதிர்க்

படிப்பகம்

www.padippakam.com



கவும் குடியரசுத் தன்மையிலான போராட்டங்களைக் சட்டமைத்திருக்க வேண்டும். அறிவுஜீவிகளும் மாற்றுச் சிந்தனையாளர்களும் எப்போதும் இவர்களுடன் கைகோர்த்துக் கொள்வார்கள். இஸ்லாம் இந்த நாட்டை ஆளவந்தவர்களின் மதமாயிருக்கலாம். ஆனால் அதைத் தழுவிக் கொண்ட இந்தியர்கள் இந்து மதத்தால் புறக்கணிக்கப்பட்ட அல்லது இந்து மதத்தைப் புறககணித்த வீரம் செறிந்த விளிம்புநிலை மக்கள்தாம். இந்த உணர்வோடான ஒருங்கிணைப்புத்தான் இன்றையத் தேவை. இதற்கு முன்னோடியாக 'புதிய தமிழக'மும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகமும் இணைந்து செயல்படுவது சரியான திசைவழி முயற்சி. இஸ்லாம் பற்றி நான் பெற்றுள்ளது வெறும் பாமர அறிவுதான். மத அடிப்படைவாதத்தில் இந்துத்துவம் பேசும் வைதிக வேதியரைவிட ஒரு முல்லா குறைந்தது ஒன்றரை மடங்காவது முறுக்காயிருப்பார் என்று படுகிறது. இஸ்லாத்தின் உலகளாவிய கட்டுப்பெட்டித்தனத்துக்கு சல்மான் ருஷ்டியும் தஸ்லிமா நஸ்ரீனும் சான்றுகளாக ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் முஸ்லிம் மக்களைப் பற்றி ஒரு விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு வைதிக இந்து எப்போதும் பிறரை 'ஒத்து ஒத்து' என்று ஒதுக்குவதிலேயே குறியாயிருக்கிறான். அது அவனது தீட்டுக் கலாச்சாரம். ஆனா ஒரு தீவிர முஸ்லிம் தன் கரங்களை விரித்து எல்லாரையும் பற்றித் தழுவிக்கொள்கிறவனாய் இருக்கிறான். அது அவனுடைய நட்புக் கலாச்சாரம். இஸ்லாம், இறக்குமதி செய்யப்பட்ட மதமாயினும் அதன் இந்தச் சகவாழ்வு நேசம் சனாதன இந்தியாவுக்குக் கிடைத்த அரிய கொடையாகிறது. இதற்கு மாறாக, இஸ்லாம் அந்நிய தேசத்து மதம் என்பதற்காக இஸ்லாத்தைத் தழுவிய இந்திய மக்களையே அந்நியர்களாகக் கற்பிதப்படுத்தும் அற்பத்தனத்தைத்தான் ஒரு இந்துத்துவவாதி எனக்குப் போதிக்கிறான். நேற்றுவரை சங்கீதா என்ற பெயரில் என் மகளாக இருந்தவள், ஆயிஷாவானதும் அந்நியளாக, அழிக்கப்பட வேண்டியவளாகத் துரத்தப்படுகிறாள். இது எப்படி? 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்றான் பாரதி. அவன் சாத்திரம் கற்றவன்; மதித்தவன். சொன்னான். அவனை மாற்றீடு பண்ணுகிற இந்துத்துவவாதியும் அதையே சொல்கிறான் எனில் அதுதான் அராஜகவாதியின் அறமதிப்பீடுகள்.''

''ஒவ்வொரு உள்ளரங்க அரசியலும் திகைப்பூட்டும்படியாத்தான் வடிவமைக்கப்படுது.''

''சமூகத்தளம் பற்றிய எந்தத் திசையையும் எட்டும்வரை பார்த்தால் இப்படித்தான் முடியுது. மனிதர்களுக்கிடையேயான எல்லா

படிப்பகம்

www.padippakam.com



உறவுகளையும் தெரிவுகளையும் கட்டமைக்கப்பட்ட மொழிப்பாடுகள் மூலமாகவே நம்மால புரிஞ்சிக்க முடியும். நம்மோட புரிதலுக்கு ஏற்றபடி நாம் எந்தத் தளத்தில் நிக்கிறோம்கிறதையும் அறிய முடியும். அந்த வகையில அமைப்பியல், பின் நவீனத்துவம் போன்ற புதிய போக்குகள் நமக்குப் புதிய வழியைத் திறந்துவிட்டிருக்குங்கிற அளவில்தான் எனக்கு அவைகளோட பரிச்சயம்.''

"நீங்க என்னோட ரெண்டாவது கேள்விக்கான சரியான இடத்துக்கு வந்து சேர்த்திட்டீங்க. பின் நவீனத்துவம் தலித்துகள், விளிம்பு மக்கள், பெண்கள் ஆகியோரின் தன்மான மீட்புக்குத் துணை செய்யும்னு சொல்றாங்க. எப்படின்னு எனக்கு விளங்கல. நான் புரிஞ்சுக்கிட்டது சரியா இருந்தா, பின் நவீனத்துவம் அமைப்பாகவோ இயக்கமாகவோ ஒருங்கிணைவது இனிமே சாத்தியமில்லேங்குது. அதாவது போராட்டமே சாத்தியமில்லேன்னு ஆகுது. உரிமை மீட்புப் போராட்டங்களை ஒற்றைகளும் உதிரிகளும் வென்றெடுக்கிறது ஒரு நாளும் நடவாத காரியம். 'எனக்கான தன்னுரிமை இன்னொருவர் தன்னுரிமையைப் பறிக்காமல் இருப்பது'ங்கிற அடிப்படை அறிதல் உள்ளவங்களுக்குப் பின் நவீனத்துவக் கோட்பாடுகள் சரியாயிருக்கும். அப்படிப்பட்டவர்கள்தான் மிகவும் தளர்வான சமூகத்தின் தனித்துவம் போற்றும் உறுப்பினர்களாய் இருக்க முடியும். இதுவும் ஒருவகையில் அறிவின் ஆதிக்கம்தான்-சுயாதிக்கம்- பின் நவீனத்துவம் அறிவாதிக்கத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறது. ஆனா இந்தியாவைப் பொறுத்தவரை பட்டியாடுகள் மாதிரி அடைக்கப்பட்டுப் பாமரத்தனத்துல நிலைநிறுத்தப்பட்டவுங்களை மீட்டெடுக்க, என்னதான் குறைபாடுகள் உள்ளதானாலும், எவ்வளவுதான் ஆதிக்கக் கறை படிஞ்சாலும், அமைப்புகள் தானே வேண்டியிருக்கும்? சொல்லப்போனா மனிதர்கள் எப்போ ஒரு சமூகமாகத் திரண்டார்களோ, அப்பவே அமைப்புங்கிறது வந்தாச்சு. எந்த அமைப்பும் நாளாவட்டத்துல வெளிறி, பிசுக்கேறி, ஒளி மங்கி, கரப்பான் குடியமர்கிற கழிவறை மாதிரி கருத்துப் போகும்தான். ஒன்றைக் கட்டமைக்கிறதுல உள்ள தீவிரம் அதை காத்துப் பராமரிக்கிறதுலயும் இருந்தாலொழிய இதுக்கு முன்னோக்குள்ள தீர்வு கிடைக்கும்னு தோணல. குப்பையாகுதுங்கிறதுக்காக கட்டமைப்பைத் தகர்த்திடுறது வெறும் குப்பையாக்குற முயற்சி ஆயிடாதா? ஒரு வனம் இருக்குது. புல்பூண்டு, செத்தை சருகு, குப்பை கூளம் எல்லாமா இருக்கிறதுனாலதான் அது வனம். அது தூய்மையா இல்லன்னு சொல்றதே ஒரு அத்துமீறலான விஷயம். அதுவே ஒரு மனைன்னா அங்கே தூய்மை×அழுக்கு என்கிற இருமை எதிர்வு வந்துடுது தூய்மையா இருக்கணும்னா துடைச்சுத் துடைச்சு வைக்கணும். துடைக்க மழுமாறிக்கிட்டு மனையை

படிப்பகம்

www.padippakam.com



இடிச்சு வனமாக்கிடலாமா? அது முன்னோக்கிய பயணமா? வனத்துல அறிவு வெறும் பார்வையாளர்தான். ஆனா மனையில அது சர்வாதிகாரி!''

''பார்வையாளர் நீரில் முகம் பார்த்துக் கொள்கிறார். ஆனால் சர்வாதிகாரி கண்ணாடியின் ரசப்பூச்சாகிறார்.

''எப்படியெப்படி?''

''வாழ்க்கைச் சித்திரம் நீரில் முகம் பார்த்துக் கொள்கிற மாதிரி எளிமையும் இயல்பும் கொண்டிருக்குமெனில் பின்நவீனத்து வத்தின் அறிவாதிக்க நிராகரிப்பு நியாயமானதாகத்தானே இருக்கக் கூடும்? அமைப்பாகத் திரண்டு போராடுவது ஒரு அதிகாரத்துக் குப்பதில் இன்னொரு அதிகாரத்தை நிலைப்படுத்துவற்காக அல்ல. அமைப்புகள் அப்படி அதிகார மையங்களான வரலாறுகள் நமக் குத் தெரியும். நான் விளங்கிக் கொண்டவரை அமைப்பு, அறி வாதிக்கம் பற்றிய பின்நவீனத்துவத்தின் வரையறைகள் சரியென்றே படுகிறது. போராட்ட களம் அந்த வரையறைகளுக்குப் பொருந்தி வராமல் போனால், வெற்றிக்கான வழிகளைத் தேர்ந்து கொள்ள வேண்டியது நம் பொறுப்பு. ஒன்றை நினைவில் கொள்ள வேண் டும். இப்புதிய அணுகுமுறைகள் முன்வைத்த 'வாசிப்பில் கட்டு டைத்தல்', 'ஒற்றைத்துவத்துக்கெதிரான பன்மைத்துவம்' போன்ற அம்சங்கள், புரிதலை முன் எப்போதும் இல்லாத அளவு அர்த்த முள்ளதாகவும் விரிந்த தளத்தினதாகவும் மாற்றியுள்ளது. 'குறுங் குழுவாதம்' என்று புறக்கணிக்க எத்தனித்தவர்களும்கூட அதன் தீர்க்கமான நியாயப்பாட்டிலும் அதை முன்னெடுத்தவர்களுடைய மூர்க்கமான நிலைப்பாட்டிலும் கட்டுண்டு போக நேர்ந்துள்ளது. இன்றைக்கு மாற்றுச் சிந்தனை என்பது பின் நவீனத்துவத்தைப் புறந்தள்ளிய சிந்தனையாக இருக்க முடியாது. வேண்டுமானால் இந்தப் பெயரைச் சொல்லிக் கொள்ள விரும்பாதவர்கள் இருக்கக் கூடும், தலித்துகளில் 'தலித்' என்னும் பெயரை விரும்பாதவர்கள் இருப்பது போல. பெயர்கள் வெறும் இடுகுறித் தன்மை மட்டும் கொண்டவையல்ல என்பதால் அதை பிரச்சினைக்குள்ளாக்குவதும் ஒரு வகையில் சரிதான். இந்தப் பிரச்சினையும் பின்நவீனத்துவத் தன்மை கொண்டதுதான். ஆகவே, தலித்துகள், விளிம்பு நிலை மக்கள், பெண்கள் ஆகியோரது பிரச்சினைகளை ஒற்றைத்துவத்துள் அடங்காத பன்மைத்துவப் பிரச்சினைகளாக, தீர்வுக்குட்படுத்தியே தீரவேண்டிய பிரச்சினைகளாக முன்னெடுத்ததில் பின் நவீனத்து வத்துக்கு முனைப்பான பங்குண்டு.''

''உங்க விளக்கங்களை ஏத்துக்கிறதுல எனக்கொன்றும் பிரச் சினை இல்ல. ஏன்னா இதை மறிச்சு மறிச்சு விவாதம் பண்ற

படிப்பகம்

www.padippakam.com



துக்கான அரசியல் தேவைகள் எனக்கில்ல. இந்த விளக்கங்களும் விளக்கங்களுக்கான என் கேள்விகளும் எனக்கு ரெண்டாம் பட்சம்தான். இவ்வளவு நேரமும் நான் உங்களோட பேச ஒருப்பட்டதே, நீங்க எடுத்த எடுப்பில சொன்னீங்களே 'புனிதம், அந்தரங்கம்னெல்லாம் ஒரு புடலங்காயும் இல்லப்பா'ன்னு அதை சகிச்சிக்க முடியாமதான். இதுக்கு முன்ன நான் பேசாம தவிர்த்ததுக்கும் அதுதான் காரணம். புனிதம் இல்லைன்னு சொல்றவுங்க தலித்தியம் பேசுற மாற்றுச் சிந்தனையாளர்களா இருக்காங்க. நீங்களும் அதையே சொல்லிக்கிட்டிருக்கீங்க. ஒருவேளை நீங்க ஒரு நம்பகமான தலித்தியவாதிதான்னு காட்டறதுக்காக அப்படி சொல்றிங்களோன்னு ஒரு பொய்யான ஆச்சரியத்துக்குள்ளாவேன்.

நீங்க என்னை மன்னிக்கணும். உங்க ஒர்மையைச் சந்தேகிக்கிறது கொச்சைத்தனமுன்னு தெரிஞ்சே எனக்கு அப்படியொரு ஆசை வருவதுண்டு. ஏன்னா என் நம்பிக்கை உங்க நியாயங்களைவிட எனக்குப் பெரிசா பட்டது; பிரியமா இருந்தது. அது சிதைந்துபோறது பெரிய நரக வேதனையா இருந்தது. இன்னும் கூட அப்படித்தான்னு சொல்ல வெட்கமாத்தான் இருக்கு. எனக்கு மனசு ஆறலிங்க. புனிதம்னோ அந்தரங்கம்னோ ஒன்னும் இல்லன்னா அப்புறம் எதுதாங்க வாழ்க்கை? வாழ்க்கைன்னா என்னாதாங்க அர்த்தம்? புனிதம், அந்தரங்கம்கிறதெல்லாம் இன்னிக்குப் பின்னப்பட்டுப் போயிருக்கலாம். அதுக்காக அதோட இருப்பையே துடைச்சிடறதா? மாற்றுச்சிந்தனைங்கிறதே மரபுக்கு மாற்றீடுகளால நேர்ந்த மலினத்துக்கெதிராத்தானே. மரபுங்கிறதே இல்லங்கிறதுக்காவா? இப்படியெல்லாம் மாற்றுச் சிந்தனையாளர்கள் தங்களை வித்தியாசமான புரட்சியாளர்களா முன்னெடுக்கிறார்களா? உங்களையும் சேர்த்துத்தான். 'இது புரட்சிதான். புரட்சியால் நேர் செய்யக் கூடியதை சீர்திருத்தத்தால சரி செய்துவிட முடியாது'ன்னு நீங்க சொல்லலாம். 'செய்த பணிக்குக் கூலி; கொடுத்த பணத்துக்குத் தீனி' என்கிற புதிய சித்தாந்தத்துல பாட்டாளி வர்க்கத்தை சிதறடிச்சிட்டு, உங்க பின் நவீனத்துவத்துக்கு இசைவா வரக்கூடிய உதிரித்தனத்தை வளர்த்தெடுக்கிற நுகர்வுக்கலாச்சாரத்துல புரட்சி சிந்தனை குட்டம் கொண்டு கரைஞ்சு போச்சுங்க. 'இல்லை. புரட்சியானது சாம்பலிலிருந்து கிளர்ந்தெழும் பீனிக்ஸ் பறவை'ன்னு நீங்க அடம் புடிச்சா, நான் கேக்குறேன்: புரட்சிக்குப் பின்னால கபடமும், சீர்திருத்தத்துக்குப் பின்னால நேர்மையும் உந்துவிசைகளா இருக்க முடியாதா? ஏன்னா இரண்டிலும் ஈடுபடுறவன் மனிதன். தப்புக்களையே தன் தப்படிகளா வைக்கிறவன். இல்லன்னா இதுவரைக்கும் நடந்த புரட்சிகள்லாம் ஏங்க நிரந்தரப் பலன் தராம கலைஞ்சு போச்சு? வாழ்க்கைங்கிறது ஒரு ஒழுங்குக்

படிப்பகம்

www.padippakam.com



கான முயற்சிதான். அந்த முயற்சியை ஏற்றத்தாழ்வில்லாம, அடுத்தவங்களை சிறுமைப் படுத்தாம, புக்றகணிக்காம, சக மனித சமத்துவத்தை அங்கீகரிச்சு, நம்மைத் 'தேடி அறிவதாக' அமைத்துக்கெகள்ளணும்னு சொன்னா அது சரி. வீடுன்னு இருந்தா குப்பை சேரும். அதை இடைவிடாம பெருக்கித் துடைக்கணும். இந்தத் தொடர் வேலை நம்மைத் தொந்தரவு செய்யுதுன்னு வீட்டையே இடிச்சுடுறதோ, இல்ல குப்பையே அழகுன்னு சித்தாந்தம் கற்பிக்கிறதோ வாழ்க்கை தோற்குமிடமா இருக்கும். குப்பையை நாம துடைக்கிறது போய் குப்பை நம்மை உள்வாங்கி செறிச்சிடாமப் பார்த்துக் கொள்றதுதான் காலம் வாழ்க்கையை மேலெடுத்துச் செல்லும் பாதையாக இருக்கும். மாற்றுச் சிந்தனை மையம் கொள்ள வேண்டிய இடம் இது. மாற்றுச் சிந்தனையாளர்கள் ஒரு கை விரல்ல அடங்குற மாதிரி கொஞ்சம் பேர்தான். அவுங்க நம்பியிருக்கிற வெகுமக்களோ எதுக்கும் தலையாட்டுற பட்டாளம். ஏமாந்து போறவுங்க. காட்சிகளின் கவர்ச்சியில கண்ணை வித்துடறவுங்க. அவுங்களை விலைக்கு வாங்குறவங்களோட வெற்றி மாற்றுச் சிந்தனையாளர்களோட மரணக் கிணறு. எதிலும் கண்மூடித்தனமான மூர்க்கம்கிறது வெள்ளம் மாதிரி. அதுவும் மாற்றுச் சிந்தனையில அது காட்டாத்து வெள்ளம் மாதிரி. பொதுவா வெள்ளம் வடியும் போது நீரோட்டம் தெளியும். ஆனா காட்டாத்து வெள்ளம் அப்படியில்ல. வெள்ளம் வடியும்போதே நீரும் வத்திப் போகும். பிறகு முன்னைவிட அதிகம் சேறும் சகதியுமே மிஞ்சும். சமூதத்தோட எல்லா நோய்களுக்கும் தீர்வு எல்லாரையும் படிச்சவுங்களா மாத்தறதுதான். படிச்சவன்தான் எல்லாரை விடவும் ஏமாத்துக்காரனா இருக்கான்னே வச்சுக்கிட்டாலும்கூட, ரெண்டு எதிராளிகளும் படிச்வுங்களா இருந்தா, ஒருத்தனை ஒருத்தன் ஏமாத்திக்கிறதுக்குப் பதிலா ஒருத்தன்கிட்ட இருந்து ஒருத்தன் தற்காத்துக்கவாவது கத்துக்குவான், இல்லியா? மனிதர்கள் அவுங்கவுங்க பொறுப்பை அவுங்கவுங்களே ஏற்கணும். தன்னோட நல்லது கெட்டதை மற்றொருவர் பொறுப்புல விடுற பேதமையைத் துடைச்செறியணும். 'ஐயரு படிச்சவரு. அவருக்குத் தெரியாதா நமக்கு எது நல்லதுன்னு. எல்லாம் அவரு பாத்துக்குவாரு'ன்னு தன் பொறுப்பைப் பிறன் கையில ஒப்படைக்கிறவன் தன்னை அடகு வைக்கிறவன்; மீள வழியற்றுப் போறவன். 'படிச்சவன் பாவம் செய்தா போவான் போவான் ஐயோன்னு போவான்'னு பாரதி சொன்னாரு. ஆனா படிச்சவன் அப்படியெல்லாம் போயிடமாட்டான். ஏன்னா அறிவு முதல்ல கண் விழிக்கிறதே தன்னலத்தின் மூஞ்சியிலதான். அதனால் சிந்தனையாளர்கள் தங்களோட வகுப்பறை வாதப் பிரதிவாதங்களை நிறுத்தி வச்சுட்டு,

www.padippakam.com



நம்பி மோசம் போறவங்களை மீட்டெடுக்கிற களப்பணியை மேற் கொண்டா எவ்வளவோ புண்ணியமா இருக்கும். செய்யணுமே. தண்ணியில சோப்புத்தூளைப் போட்டு வேகமா சிலும்புனா நுரைக் கும். நல்லா நுரைக்க வச்சுத் துணியைப் போட்டுக் கசக்குனா அழுக்குப் போகும். அதை விட்டுட்டு துணியைப் போடாமலேயே நுரைக்க நுரைக்க சிலுப்பிக்கிட்டே இருந்தா அது சின்னப் புள் ளங்க விளையாட்டு. ஒரு கட்டத்துல நீர்த்துப்போன தண்ணியில இருந்து நுரையும் கிளம்பாது; துணியும் வெளுக்காது. மகா அறி வாளிகள் இப்படி நுரையா வழியறதுக்குன்னே சிலிப்பிக்கிட்டிருக் காங்க. அவங்களோட முக்கிய வேலையை விட்டுடுறாங்க.''

ஹிஸ்டீரியா என்னும் இசிவு நிலை பொதுவாகப் பெண்களை மட்டுமே தாக்கக்கூடிய நோயாக இனம் காணப்படுகிறது. இசிவு வந்தால் முதலில் பேச்சு அடைபட்டுப் போகும். தாங்க முடியாத மன அழுத்தம் நரம்புகளைத் திடீர் முறுக்கேற்றித் தன்னிலை இழக்க வைக்கும் வெளிப்பாடு. 'மனுஷி' அடையாளத்தை நசுக் கிக் கொள்வதில் பெண் படும் சித்திரவதை இது. என் துணை வியாருக்கு திருமணம் தன்னை வெகு தளர்வாக வைத்துக்கொள் ளக் கிடைத்த வரம் என்னும் சந்தோஷம் உண்டு. காரணம் திரு மணத்திற்குப் பிறகு, அவர் முன்னர் அனுபவித்து வந்த தீர்வற்று நீண்ட நலக்குறைவுகள் யாவும் முற்றாகத் தொலைந்து போய்விட் டதுதான். என் பங்கிற்கு எதையேனும் சாக்கிட்டுப் பழைய நலக்குறைகள் மீண்டுவிடுவதற்கோ, எல்லாப் பெண்களைப் போல என் துணைவியாரும் இசிவுக்கு இலக்காகி விடுவதற்கோ நான் காரணமாக்கிவிடக் கூடாது என்னும் எச்சரிக்கையோடிருப்பவன். என் கருத்துகளை இவரோடு பகிர்ந்து கொள்வதில் தோழமை பேணும் இயல்புக்கும் மேலாக, பால் வேற்றுமை மறந்த பரந்த தளத்தில் இவரை சுவாசிக்க விடுவதும் கூடுதல் நோக்கம். இருப் பினும் இயக்கத்திலும் இயல்பு காப்பது என்பது மரணத்தைக் கைதட்டி அழைத்து வாழ்க்கையின் காவல்நாயாகப் பணிப்பதற் கொப்பாகும். எங்கள் கருத்துப் பரிமாற்றத்தின் தீவிரத்திற்கேற்ப அவ்வப்போது ஒரு திடீர் அதிர்வலை அவருள் சிலிர்த்தோடு வதுண்டு. அதாவது எண்ணப் பகிர்தலின் ஊடே திடீரென்று எதி ராளியின் குறிப்பறிதலை நிதானமற்றுத் தவறவிட்டாற்போன்ற மனப்பீறலின் வெளிப்பாடாக மளமளவென்று பேசிக்கொண்டே போய் சமனப்படுவார். நீரில் அடித்துச் செல்லும் நிதானப்பந்தை பற்றத் துடிக்கும் நீச்சல் முயற்சியாக அது தோன்றும். கருத்துக் கோவை சிதறுவதில்லை எனினும் பள்ளத்தை நோக்கிப் பாயும் நீர் கற்றை பாறையில் மோதி தொடர் அறுந்தாற்போல் சிதறித் தன் தொடர்பைப் பற்றுமே, அது போன்றதொரு தாவல் தென்படும்.

படிப்பகம்

www.padippakam.com



மீண்டும் அவரே பேசினார்:

"கணக்குல கணமொழி பத்தி உங்ககிட்டதான் நான் கத்தக் கிட்டேன். அதுல வெற்றுக்கணம் பத்தி நீங்க சொன்னது நல்லா நினைவிருக்கு. உதாரணமா, ஒரு வகுப்புல உள்ள குழந்தை களை ஒரு கணம்னு எடுத்துக்கிட்டா, அவர்கள்ல கண்ணாடி போட்ட குழந்தைள்லாம் ஒரு உட்கணம், எல்லாப் பாடங்கள்ல யும் தேறினவுங்க ஒரு உட்கணம்னு உட்கணங்கள் நிறைய உரு வாக்கலாம்னீங்க. ஒரு கணத்துக்கு வெற்றுக்கணமும் ஒரு உட் கணம். அதே சமயம் அந்தக் கணமே அதுக்கு ஒரு உட்கணம் னீங்க. என்ன நான் சொல்றது தப்பா?"

"சரியாத்தான் சொல்றே. சொல்லு. இவ்வளவு விவரமா சொல்றதால நீ என்ன சொல்ல வர்றேன்னு யோசிச்சேன்."

"உதாரணமா, சீருடையில் உள்ள குழந்தைகள்லாம் ஒரு உட்கணம்னு கொண்டா, வகுப்புல உள்ள எல்லாக் குழந்தைக ளுமே அதில அடங்குவாங்க. அப்ப முழுக்கணமும் உட்கணமா யிடுது. சனிக்கிழமைகள்ல குழந்தைகள் சீருடையில வரணும்னு அவசியம் இல்ல. அன்னிக்குப் போய் சீருடைக் குழந்தைகளைக் கணக்கிட்டா ஒரு குழந்தைகூட இல்லாம இருக்கலாம். அப்ப அந்த உட்கணம் ஒரு வெற்றுக்கணமாகுது. அப்படியில்லாம, அன்னிக்கும் ரெண்டு குழந்தைங்க சீருடையில் வந்திருந்தா, அந்த உட்கணத்தின் உறுப்புகள் ரெண்டு என்பதற்கும் மேலாக அந்தக் குழந்தைகள் மாற்றுத்துணிகளே இல்லாத, வறுமையைத் தின்னு வளர்றவுங்களான்னு பார்க்கிற சுரணையும் ஒரு ஆசிரிய னுக்கு வேணும்னு சொன்னீங்க..."

"சரி சொல்லியிருப்பேன். மேல சொல்லு."

"நான் எவ்வளவு கொடுத்து வச்சவள்னு மனசு கமகமக்கும்."

"ஏன் அப்படி?"

"எனக்கு இவ்வளவு நல்ல புருஷன் கிடைச்சிருக்காரேன்னு."

இதுவரையும் இவரோடு பகிர்ந்து கொள்ளாத விஷயம் ஒன்று உண்டு என்னிடம். என் ஊட்டம் நிறைந்த காலம் முழுதும் என் னைக் கதகதப்பாக வைத்துக் கொண்டிருந்த விஷயம். இப்போது தெரிகிறது, அது கனவு காணும் எல்லா ஆண் – பெண்ணுக்குள் ளும் பதிவாகியிருக்கக்கூடிய விஷயந்தான் என்று. அதாவது எனக்கான தோழியை நான் இன்னும் கண்டடையவில்லை என்

படிப்பகம்

www.padippakam.com



பது. இதிலிருந்த ஆறுதலான அல்லது வருத்தமான அம்சம் என்னவெனில் எப்படியும் அவளை நான் தீர்ந்து போவதற்கு முன்பாகவே அடையாளம் கண்டு கொள்வேன் என்றொரு பிடியற்ற நம்பிக்கை என்னுள் மினுக்கிட்டதுதான். என் தோழிக்கான சிறப்பம்சங்களாக நான் அவ்வப்போதுக்கான திருத்தங்களுடன் என்ன கற்பித்திருந்தேன் என்று இப்போது யோசிக்கையில் அவை என் போதாமைகளின் பிசிறுகளாகவும் வளர்ச்சியின் படிகளாகவும் இருந்தது தெரிகிறது. ஏறக்குறைய அந்தத் தோழி பற்றிய ஞாபகங்கள் தொலைந்து போகிற ஒரு கட்டத்தில்தான் மொட்டவிழ்ந்த ஞானமாக அவள் இத்தனை நாளும் என் கைப்புறத்தில் என் துணைவியாரின் முக மூடிக்குள் ஒளிந்துகொண்டு, என் போதாமைகளை நிறைவு செய்து கொண்டிருந்தாள் என்பது தெரிய வந்தது. நாங்கள் எண்ணம் பகிர்ந்து கொள்ளத் தொடங்கியது அதற்கு முன்னா அல்லது பின்னா என்பது இப்போது முக்கியமற்றுப் போய்விட்டது.

"நீ சொல்ல வந்ததை இன்னும் சொல்லி முடிக்கலையேப்பா."

"ஒரு கணம் வெற்றுக்கணமாக இருக்கக்கூடும்கிறதாலேயே 'அது கணம்'கிற இருப்பே இல்லன்னு ஆயிடுமா?"

"அதாவது புனிதம், அந்தரங்கம்கிறதெல்லாம் வெற்றுக் கணங்களா ஆயிட்டதாலேயே அவை இல்லேன்னு ஆயிடுமாங்கிறே?"

"அப்பாடா."

"முதல்ல கணம் பற்றிய ஒரு சின்னப் பிசகை சரி பண்ணிக்கலாம். உட்கணங்களோட வலகைப்படுத்தல்ல வெற்றுக்கணமும் ஒன்று. மற்றபடி வெற்றுக்கணத்தையே ஒரு அலகா எடுத்துக்கிட்டு உட்கணங்களை வகைப்படுத்துறதில்ல. வேணும்னா வாழ்க்கையென்னும் கணத்துக்கு புனிதம், அந்தரங்கம் ஆகியவை உட்கணங்கள்னு கற்பிச்சுப் பேசலாம். சரி, விஷயத்துக்கு வருவோம். அடிப்படையா நீ ஒரு விஷயத்தைப் புரிஞ்சிக்கணும்பா. சனாதன மரபு வழிப்பட்ட புனிதம், அந்தரங்கங்கிறதெல்லாம் ஏதோ பரிசீலிக்கப்படக்கூடாத தெய்வீக அம்சங்கள் மாதிரி நீ நம்பிக்கிட்டிருக்கே. இத முதல்ல மாத்திக்கணும்பா. இந்த உலகத்துல மனுஷனுக்கு மிஞ்சினது ஒன்னுமில்ல. ஆனானப்பட்ட கடவுளே அவனோட படைப்புதான்- அவன் வச்ச பேருதான். மனுஷனோட— எல்லா உயிர்களோடன்னும் சொல்லலாம்— வார்ப்புத் தத்துவம் என்ன தெரியுமா? அவன் காலடித் தடத்துல புல்பூண்டு பொசுங்கி புழுதி மண்ணுதான் மிஞ்சும். நீ மரபு மரபுங்கிறியே, அது அந்த

படிப்பகம்

www.padippakam.com



மண்ணுல பதிஞ்ச காலடித் தடங்கள்தான். மனிதன் முன்னோக்கி நடக்கிறவன் என்பது ஒன்னும் பெருமையில்ல. கண் நோக்குற திசைதான் முன் நோக்குற திசை. அவன் நன்மையை நோக்கி நடக்கிறானா, இயற்கையோடான சார்புநிலை மேம்பாட்டை உறுதி செய்கிறானா என்பதுதான் கேள்வி. இங்கே மேம்பாடுங்கிறது, வீழ்ச்சி மகத்தானதா இருக்கணும்கிறதுக்காக சிகரம் தொடுகிற மேம்பாடாகத்தான் இருக்குது. கூர் தீட்டப்பட்ட அறிவின் வெளிப்பாடு இந்தவகை வீழ்ச்சிக்கான வன்முறையைத்தான் உறுதிப்படுத்துது. மனிதனோட அறிவின் சந்தோஷங்கள் மருந்து காணப்படாத எய்ட்ஸ் நோயின் திறப்புகள். எய்ட்ஸுக்கு மருந்து கண்டுபிடிச்சிட்டா இந்த உதாரணம் பொருந்தாது. ஏன்னா, அறிவின் வன்முறை ஒரு மீட்சியற்ற வீழ்ச்சியாகத்தான் இருக்கப்போவுது.''

''இந்த மிரட்டல் அதிகப்படியா தோனலியா? மீட்சியே இல்லன்னு எப்படி சொல்ல முடியும்? இன்னிக்கே ஒரு விழிப்பு வந்தா மனிதன் எல்லாத்தையும் சரி பண்ணிட மாட்டானா?''

''அமெரிக்காவில் மின்தடை ரொம்ப அபூர்வம்– இல்லேன்னே சொல்லலாம். அதிசயமா வானம் வெளிவாங்கியிருந்த ஒரு இரவில் மின்தடை ஏற்பட்டு, இன்னும் அதிசயமாய் சில நிமிஷங்கள் நீண்டதாம். மக்கள் தங்கள் வீட்டைவிட்டு வெளியேறி மொட்டை மாடியிலும் புல்தரையிலும் நின்று வேடிக்கை பார்த்தப்போ வானத்துல நட்சத்திரங்கள் பூத்துக் கிடந்ததைப் பார்த்து அப்படியே மெய்மறந்து போயிட்டாங்களாம். காரணம், அவுங்கள்ல ரொம்பப் பேர் நட்சத்திரங்களையே பார்த்ததில்லியாம். அறிதல் வேட்கையோடு அண்ணாந்து பார்க்கத் தெரிஞ்சவன் மனிதன் மட்டும்தான். அவனுக்கு இந்தத் தலைக் குனிவு. உயிரினத்துலேயே இயற்கையிலிருந்து தன்னை அந்நியப் படுத்திக் கொள்கிறவன் மனிதன் மட்டும்தான். அவன் இயற்கையோடு ஒட்டிக்கொள்ள முயன்றாலும் அவன் அறிவு அவனை இயற்கையின் காந்தப் புலனுக்கு வெளியே இழுத்தெறிந்துவிடுகிறது. அதனால வீழ்ச்சியானது மனிதனோட வளர்ச்சி விதியாகிறது. 'அறிவு கெட்டவன்'னு சொல்லத் தகுதியுடைய அறிவுள்ள பிராணி இவன் மட்டும்தான், இல்லியா? 'அறிவுடையார் எல்லாம் உடையார்'னு வள்ளுவர் சொல்றார். அறிவுக்கு அவர் கொடுக்கிற அறமதிப்பீடுகள் வேறு. அறிவு 'உலகத்தோடு ஒட்ட ஒழுகலை ஒருவருக்குக் கற்றுக் கொடுக்கும், நன்மை தீமை அறியும்' என்றெல்லாம் சொல்றார். எந்த உலகம், எந்த நன்மை தீமை என்பதெல்லாம் இன்றைக்குக் கேள்விக்குரிய விஷயங்கள். அந்தக் குறட்பகுதி இன்றைய மாற்றீடாக 'அறிவுடையாரெல்லாம் நம்ம (சாராய) உடையார்' என்றாகிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



'எதைச் செய்தாவது பணம் சேர்த்துவிடு. பிறகு பணம் உன்னைக் கரை சேர்த்துவிடும்' என்பதுதான் இன்றைய அரசியல் மந்திரம். அறிவுடையார் எப்படி எல்லாம் உடையவராகிறார்? இயற்கையை வேட்டையாடி, காட்டை அழித்து, நீரையும் நிலத்தையும் ரசாயனக் கழிவுகளால் நஞ்சூட்டி, கடலை கதிரியக்கக் கழிவுகளால் சீரழித்து, வானத்து ஓசோன் படலத்தை சல்லடைக் கண்களாய் துளைத்து, வாழ்க்கை இனி சாத்தியமில்லை என்னும் அழிவின் விளிம்புக்கு இந்த உலகத்தை நெட்டித்தள்ளி அறிவு நல்லதை நாடி மீளுமா? ஒரு நாளும் இல்லை. ஒன்றும் வேண்டாம் - இன்றைய மனிதன் இனி மின்சாரம் வேண்டாம் என்று விட்டுவிடுவானா? மாட்டான். மனிதனுடைய மரபணுத்தொடர்ச்சி அவனை முக்காலத்தோடும் இணைக்கும் பாலம். அவன் அறிவுப் புலன்நுகர்ச்சி அவனை அக்கக்காகக் கழற்றிக் கிடத்தும் மரைசுழற்றி. மனிதனின் இறந்த காலம் வெறும் நினைவுச் சித்திரங்களாய் இருக்க மட்டும்தான். எதிர்காலம் தவிர்க்க முடியாத அழிவுச் சித்திரங்களாகி அச்சுறுத்தினாலும், நிகழ்காலம் 'அடுத்தென்ன, அடுத்தென்ன' என்று புதுமை தேடலும், 'இன்னும் இன்னும்' என்று சாதனை படைத்தலும்தான். 40 ஆண்டுகளுக்கு முன் எனக்கு மாணவனாயிருந்த ஒருத்தன். அப்போது கேப்பைக்கூழும் கம்மஞ்சோறும்தான் அவனுடைய அன்றாட உணவு. பத்தாம் வகுப்பு தேறவில்லை. சென்னைக்கு வந்தான். ஐந்தாண்டுக் காலம் ஒரு தொழிற்சாலையில் காவல்காரன் வேலை. அதை விட்டுவிட்டு இரண்டாண்டுகள் செய்தித்தாள் வினியோகம். அதையும் ஏறக்கட்டிவிட்டு முழு நேரத் தரகன் ஆனான். ஏழாண்டுகாலத்தில் அவன் சம்பாதித்த மனித அறிமுகங்களைப் பயன்படுத்திக் கொண்டான். நிலம், வீடு, வீட்டுமனை, வீட்டுப் பொருள்கள்... பெண்கள் தவிர வேறெதற்குமான தரகு வேலை. இன்று சொத்தின் மதிப்பு சில கோடிகள். இப்போதும் அன்றாட உணவு கேப்பைக்கூழ்தான். அதற்குமேல் உண்ணக் கொடுத்து வைக்கவில்லை. இந்த ஒற்றியூரில் பாதியையாவது வளைத்துவிட உத்தேசம்– அவன் நண்பர்கள் சொல்லக் கேள்வி. இந்த இலக்கு, கிடைக்கும் வெற்றிக்குத் தகுந்தபடி எப்போதும் விரிந்து கொண்டே போகக்கூடியது. 'இன்னும் எதற்கு அலைகிறான்?' என்பது அறிவில்லாதவனின் கேள்வி. தனனால் எது முடியுமோ அதுவாகவே மாறிவிடுவது அவனைப் போன்ற அறிவாளிகளின் வேள்வி; அறிவின் வன்முறை வெளிப்பாடு. ஆச்சரியம் என்னன்னா இது வன்முறைன்னு அவனே அறியாதது. ஆறாவது புலனின் லீலா விநோதம். தரகனுக்கு மட்டுமல்ல. அறிவியல்துறை வல்லுநர்களுக்கும் இதுதான் சூத்திரம். வளரும் நாடுகளில், அதுவும் இந்தியத் துணைக்கண்டத்தில் எது வளர்கிறதோ இல்லையோ, மக்களைப் பிதுக்கிப் போடுவதில் வானை முட்டும்

படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சி. உணவு வேண்டுமே. விளைச்சலைப் பெருக்கும் வீரிய விதைகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. அதிலும் அறிவாதிக்கத்தின் வக்கிர விளையாட்டைப் புகுத்தி, மகசூலிலிருந்து 'விதைப் பயிரை' சேமிக்க வழியில்லாதபடி ஒரு போகம் மட்டுமே விளையும் மலட்டு விதைகள் உருவாக்கப்படுகின்றன. மேலும் மரபீனி மாற்றங்கள் மூலம், நடைமுறையில் உள்ள உணவுப் பயிர்களின் பண்புகள் குலைக்கப்படுகின்றன. இந்தப் புத்துருச் சிதைவாக்கங்களால் மக்களின் உடல் நலச் சமன்பாடுகள் கலைக்கப்பட்டு நோய்கள் விதைக்கப்படுகின்றன. இப்படியாக ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில், இதுவரை உற்பத்தி செய்துள்ள அணுகுண்டுகள், ரசாயனக் குண்டுகளை மக்களைக் காக்கும் பொருட்டு அழித்துவிடுவதாக வைத்துக்கொண்டாலும் அந்த அழிப்பு வேலையே இந்த மண்ணை மாசு படுத்துமே. அதற்கென்ன மாற்று? ஒன்றை யோசித்துப்பார். ஒவ்வொரு யுக முடிவிலும் உலகம் பெரும் வெள்ளத்தால் முற்றாக அழிந்து, உயிரினம் புதிதாய்ப் பிறக்கும் என்று ...ர்ன் சொன்னார்களே தவிர, அறிவின் மேன்மையாலும் அறத்தின் திறத்தாலும் மண்ணுலக வாழ்வு அமரநிலை எய்திவிடும் என்று சொன்னதில்லை. இந்த அழிப்பு சூத்திரம் அறிவின் வன்முறையல்லாமல் வேறென்ன?''

''உங்க பேச்சோட காட்சியுருவம் ஏதோ பாலை நிலப் பாழ்வெளி மாதிரி நாலா திசைகளிலும் படர்ந்து அதிர்ச்சியடையச் செய்யுது. ஆனாலும் நமக்கு நம்பிக்கை முக்கியமில்லையா?''

''சந்தேகமில்லாமல். என் பேச்சு, மகத்தானவை என்கிற போர்வையில் மனசுல அடைஞ்சு கிடக்கிற பிணங்களை அப்புறப் படுத்துற வேலை. வாழ்க்கை மீது நம்பிக்கையும் பிடிப்பும் இல்லாதவன் மாற்றுச் சிந்தனையாளனாக இருக்க முடியாது. ஆனா, நம்பிக்கைங்கிறது அவனை அணை போட்டுத் தடுக்கிறதுக்காக அல்ல. அணை தகர்த்துப் பாய்வதற்குத்தான். முடங்கிப் போன வாழ்வைக் கடன் கழிக்கிற வேலையாக வாழ்ந்து தீர்ப்பதை விட, அதை இயல்பில் பொருத்திக் கொள்ளும் புரிதலோடு இயங்க முயல்வதுதான் மாற்றுச் சிந்தனையோட தளமாய் இருக்கணும். அப்பதான் ஒரு சின்ன பூ தன் வாச விரல்களைக் காற்றில் தோய்த்து என்னமா அளையுதுன்னு ரொம்ப மனம் தளும்பி ரசிக்கலாம். நீயும் கூடத்தான். இப்ப நான் ஒரு கோடு இழுக்கிறேன். நீ அதை வளைச்சு மடக்கி ஒரு வட்டமா மூடிடாம இருக்கணும். நிறைய விஷயங்கள் வியப்புக் குறிகளோட நம்ம புருவத்தை வில்லா வளைக்கும். ஒரு மனிதன் தன்னை நீரோட்டம் மாதிரி வச்சுக்கணும். ஓடுற நீருக்கு அழுக்கை உள்வாங்கிக்கொள்ற ஆற்றல் உண்டுன்னு சொல்வாங்க. அழுக்கை ஆகக் குறைவா வச்சுக்கிட்டு நீருக்கு ஒரு பளிங்குத் தன்மை ஊட்டுறதுதான் மாற்றுச்சிந்தனையோட வேலை.''

## மாற்றீடு - ஓர் உரையாடல்

என்பது இதன் பொதுத் தலைப்பு. விடுபட்டுப் போயிற்று. அடுத்த இதழில் இந்தத் தலைப்பில் தொடரும் – முற்றுப் பெறும். ஆ-ர்.

படிப்பகம்

www.padippakam.com

“இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் முற்றிலுமாக சிதறுண்டு போன தமிழ் மனம் சாரு நிவேதிதாவினுடையது. ஆபாசம், வக்கிரம் என்றெல்லாம் அறியப்படுபவை இவருடைய எளிய உரைநடையில் என்னவாக மாற்றமடைகின்றன என்ற கேள்வி இலக்கியத்திற்கான கேள்வி மட்டுமல்ல– இன்றைய தமிழ் வாழ்க்கைக்குமான கேள்வியுமாகும்.”

**—வெளி வந்துவிட்டது**

**சாரு நிவேதிதாவின்** இரண்டாவது நாவல்

## 0° (ஸீரோ டிகிரி)

—கிரணம் வெளியீடு

விலை: ரூ. 100

**பிரதிகள் கிடைக்குமிடம்:**

கிரணம்

**63–B, திரு. வி. க. தெரு,**
**போஸ்டல் ஆடிட் காலனி,**
**சின்மயா நகர்,**
**சாலிகிராமம் அஞ்சல்,**
**சென்னை–600093.**

**Printed by Mrs. Kavithasaran at Allwell Press, 31, T.K.S. Nagar, Chennai-600019. Published at 580, T.H. Road, Chennai-600021 & Edited by: Kavithaasaran.**

படிப்பகம்